REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மார்ச் 18 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

89 1932 - 2021

வரு. 89 இல. 66 | March 18,Thursday, 2021 | 20பக்கங்கள் | 30/-






கொவிட்–19 நெருக்கடியால் 228,000 குழந்தைகள் மரணம் 02



சர்வதேச தளத்தில் இந்தியாவின் பரிந்துரை வரவேற்கத்தக்கது 10



கல்முனை கடற்கரை மைதான அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு 12



உலகக் கிண்ணத்தை கைப்பற்றி 25 ஆண்டுகள் பூர்த்தி 20

## ஊடக அமைச்சர் இன்று யாழ்.விஜயம்

### இரு தினங்கள் தங்கியிருப்பார்



ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல இன்று (18) யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரண்டுநாள் விஜயமாக யாழ்.செல்லும் அவர் நயினாதீவுக்குச் செல்லவுள்ளதுடன் வட்டுக்கோட்டையில்அமைக்கப்பட்டுள்ளபுதியதபால் நிலையத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

### மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கு விசாரணை:

## ரவி கருணாநாயக்க, அர்ஜூன்,அலோசியஸ் உட்பட எட்டு பேருக்கும் விளக்கமறியல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**







முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உட்பட எட்டு பேரை இம்மாதம் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டது. பிணைமுறி மோசடி தொடர்பான வழக்கிலேயே இவர்களை விளக்கமறியலில் 06

### கலைஞர்களுக்கு காப்புறுதித்திட்டம் 03



### யாழ்.கச்சேரியிலிருந்து அனுராதபுரத்துக்கு கொண்டு செல்லப்பட்ட

## காணி ஆவணங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் கச்சேரிக்கு

### உடனடியாக கொண்டுவர அதிகாரிகளுக்கு அமைச்சர் மஹிந்தானந்த பணிப்பு



**யாழ்.கச்சேரியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் வைத்து தொலைபேசியூடாக உத்தரவை பிறப்பித்தார்**

**யாழ்ப்பாணம் குறூப், சாவகச்சேரி விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து அநுராதபுரத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட காணி ஆவணங்கள் அனைத்தையும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு உடனடியாக 06

### பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான

## அசாத் சாலிக்கு மூன்று நாட்கள் தடுப்புக்காவல்

### விசாரணை நடத்த CID க்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி



**கைதானபோது காரில் கண்டெடுத்த வெளிநாட்டு துப்பாக்கி குறித்தும் தனியான விசாரணை**

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள அசாத் சாலி, மூன்று நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைகள் மேற்கொள்ள குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாணைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 06

## நோர்வூட் பிரதேச சபை 10 நாட்களுக்கு பூட்டு 03

### மேலும் 03 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

## சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை கோரி போராட்டம்



**யாழ்ப்பாணத்தில் நல்லை ஆதீனம் முன்பாக பேரணி**

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறுகோரி, யாழ்ப்பாணத்தில் நேற்று (17) கவனயீர்ப்புப் போராட்டத்துடன் பேரணி நடத்தப்பட்டது. 06

### பண்டிகைக் காலத்தில்

## தேவை ஏற்படின் பயணத் தடைகள்

### இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமிழ், சிங்கள புத்தாண்டு மற்றும் உயிர்த்த ஞாயிறு உள்ளிட்ட பண்டிகை காலங்களில் தேவை 06

## மஸ்கெலியா குயின்ஸ்லேன் தோட்டத்தில் திடீர் தீ விபத்து

### 20 குடியிருப்புகள் எரிந்து நாசம்

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**



மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட (குயின்ஸ்லேன் ) ராணித் தோட்டத்தில் லயன் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 20 குடியிருப்புகள் எரிந்து நாசமாகியுள்ளன. 06

## அடுத்தவாரம் நான்கு நாட்கள் மட்டுமே பாராளுமன்றம் கூடும்

பாராளுமன்றத்தை எதிர்வரும் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நான்கு நாட்கள் கூட்டுவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (17) முற்பகல் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் 06

## தடுப்பூசி ஏற்றிய எவருக்கும் இதுவரை குருதி உறைவு இல்லை

### எவரும் அச்சப்படத் தேவையில்லை

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



இலங்கையில் தடுப்பூசிகள் செலுத்திக்கொண்டுள்ள எவருக்கும் இரத்த உறைவுகள் ஏற்படவில்லை என்பதால் எவரும் அச்சப்படத்தேவையில்லையென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னான்டோபுள்ளே தெரிவித்தார்.

அத்துடன், சீனாவில் தயாரிக்கப்படும் சைனோபாம் தடுப்பூசிக்கு அனுமதியளிப்பதற்கான தகவல்கள் தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபைக்கு 06

### ஈசிகாஷ் மூலம் நவீன தொலைபேசி

## சிறைக்குள் சிக்கிய ரஞ்சனின் நவீன கைபேசி

### ஐந்து இலட்சம் கொடுத்து பெற்றாராம்



அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கண்டுபிடிக்கப்பட்ட நவீன கையடக்க தொலைபேசி, அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சொந்தமானதென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 06

### விக்கல் வீராச்சாமி



கற்பனை செய்திகளையும் மக்களை நம்ப வைக்கிற மாதிரி பேசும் திறமை கொண்ட அரசியல்வாதி யார்...?

அமைச்சர் சி.பி பேசிய பேச்சிலிருந்து ஒரு கேள்வி போல, பேசாம எதிர்க்–கட்சித்தலைவர் யார் எண்டு கேட்டால் விடை தெரிஞ்சிடும்...!!!

Dialog 4G MOBILE Office மற்றும் கற்றல் செயற்பாடுகளுக்கு ANYTIME டேட்டா பக்கேஜ்

Zoom, Google, Microsoft, YouTube, கற்றல் Apps மற்றும் இணையத்தள பாவனைக்கு விசேட கட்டணங்கள்




12GB பக்கேஜ்** ரூ. 495/- மட்டுமே *வரிகள் உள்ளடங்களாக

30GB பக்கேஜ்** ரூ. 995/- மட்டுமே *வரிகள் உள்ளடங்களாக

இந்த விசேட கட்டணங்கள் Office மற்றும் கற்றல் Application பாவனைகளுக்கு மட்டுமே நாள் முழுவதும் செல்லுபடியாகும்.

Facebook, Instagram, TikTok, Netflix மற்றும் ஏனைய Streaming, Gaming போன்ற இணையத்தளங்களை இந்த பக்கேஜில் பயன்படுத்த முடியாது

ரீலோட் செய்து, #678# டயல் செய்து அல்லது MyDialog App மூலம் செயற்படுத்திக்கொள்ளுங்கள்

TRC/D/PRO/20/04 • நிபந்தனைகளுக்கு உட்பட்டது **30 நாட்களுக்கு செல்லுபடியாகும்.

Dialog எதிர்காலம் இன்றே.

# சர்வதேச செய்திகள்

## பிரான்ஸில் கொரோனா தொற்று மீண்டும் உச்சம்



பிரான்ஸில் கடந்த நான்கு மாதங்களில் இல்லாத வகையில் ஒரேநாளில் சுமார் 30,000 பேரிடம் கொரோனா வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அங்கு மூன்றாவது முறையாக நோய்ப்பரவல் ஆரம்பித்திருப்பதாக பிரான்ஸ் பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

புதிதாக பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சையளிக்க, அந்நாட்டு மருத்துவமனைக் கட்டமைப்பு சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த நிலைமையைச் சமாளிக்க, புதிய முடக்கநிலை அறிவிக்கப்பட வேண்டுமென முன்னணிச் சுகாதார வல்லுநர்கள் கூறிவருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய நாடுகளைப் போலவே பிரான்ஸின் தடுப்பூசித் திட்டத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## அமெ. மசாஜ் நிலையங்களில் துப்பாக்கிச் சூடு: எண்மர் பலி



அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில் மூன்று வெவ்வேறு மசாஜ் நிலையங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது ஆறு ஆசிய நாட்டு பெண்கள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் அட்லாண்டாவின் வடக்கு புறநகர் பகுதியில் இருந்து மசாஜ் நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் கொல்லப்பட்டனர். மேலும் இரு நிலையங்களில் நடத்தப்பட்ட தாக்குதலில் நால்வர் பலியாகினர்.

இந்த மூன்று தாக்குதல்களையும் நடத்திய சந்தேகத்தில் 21 வயது இளைஞன் ஒருவன் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்தத் தாக்குதலுக்கான பின்னணி பற்றி உறுதி செய்யப்படவில்லை.

கொரோனா தொற்றை பரப்புவதாக ஆசிய அமெரிக்கர்கள் மீதான வெறுப்புப் பிரசாரம் அண்மைய மாதங்களில் அமெரிக்காவில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் ஆற்றிய உரை ஒன்றிலும் இந்த வெறுப்புப் பிரசாரங்களை கண்டித்திருந்தார். "ஆசிய அமெரிக்கர்களுக்கு எதிராக கொடிய வெறுப்புக் குற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. அவர்கள் தாக்குதல், தொந்தரவு, குற்றச்சாட்டு மற்றும் பழி சுமத்தலுக்கு முகம்கொடுக்கிறார்கள்" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

## 10,000 பேரை ஆள்குறைப்பு செய்ய 'நோக்கியா' திட்டம்




தொலைத்தொடர்பு நிறுவனமான நோக்கிய உலக அளவில் 10,000 ஊழியர்கள்வரை ஆள்குறைப்புச் செய்யவிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் செலவுகளைக் குறைக்க அடுத்த 2 ஆண்டுகளில் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 5ஜி கட்டமைப்பை அறிமுகம் செய்ய நிறுவனம் முயற்சி செய்துவருகிறது.

மேகக்கணிமைச் சேவை, மின்னிலக்கக் கட்டமைப்பு ஆய்வு ஆகிய அம்சங்களில் முதலீடு செய்யவும் நோக்கியா திட்டமிடுகிறது.

உலகெங்கும் உள்ள அதன் நிறுவனங்களில் சுமார் 90,000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இருப்பினும், 2015ஆம் ஆண்டிலிருந்தே ஆயிரக்கணக்கான வேலைகளை அது குறைத்து வருகிறது.

கடந்த ஆண்டு, ஐரோப்பாவில் 40,000 பேரையும் ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் 20,500 பேரையும் நோக்கியா வேலையில் அமர்த்தியது.

உலகின் மிகப்பெரிய கையடக்க தொலைபேசி விற்பனை நிறுவனமாக முன்னர் இருந்த நோக்கியா ஆப்பிளின் ஐபோன் மற்றும் சம்சுங்கின் கெலக்சி போன்று தொடுகைத் திரை கொண்ட கைபேசிகளை தயாரிப்பதில் பின்தங்கியதால் அதன் பிரபலம் பெரும் வீழ்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது.

அந்த நிறுவனம் தற்போது தொலைத்தொடர்பு உபகரண உற்பத்தியில் அவதானம் செலுத்தி உள்ளது.



## நைகரில் துப்பாக்கிதாரிகளால் 58 பொதுமக்கள் படுகொலை

நைகர் நாட்டில் மாலி நாட்டுடனான எல்லைக்கு அருகில் இடம்பெற்ற தாக்குதலில் 50 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

டில்லபரி பிராந்தியத்தின் சந்தை ஒன்றில் இருந்து திரும்பும் மக்களை ஏற்றிய நான்கு வாகனங்கள் மீது ஆயுததாரிகள் சரமாரியாக சூடு நடத்தியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை நடந்த இந்தத் தாகுதலுக்கு எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

எனினும் நைகரில் தற்போது இரு ஜிஹாதிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அதில் ஒன்று மாலி மற்றும் புர்கினா பாசோவுக்கு அருகில் மேற்கிலும் மற்றது நைஜீரியாவுடனான எல்லையில் தென்கிழக்கிலும் இயங்கி வருகின்றன.

"இந்த காட்டுமிராண்டி செயற்பாட்டில் 58 பேர் கொல்லப்பட்டு, ஒருவர் காயமடைந்துள்ளனர். தானியக் களஞ்சியங்கள் மற்றும் வாகனங்கள் பலதும் தீவைக்கப்பட்டுள்ளன" என்று நைகர் அரசு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தை அடுத்து நேற்று தொடக்கம் மூன்று நாள் துக்கதினத்தையும் அரசு அறிவித்துள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் இரு கிராமங்களில் கடந்த ஜனவரி 2 ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களில் குறைந்தது 100 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இது நைகரின் அண்மைய வரலாற்றில் மோசமான படுகொலை சம்பவமாக பதிவானது.

## அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தை வழங்க ஐ. ஆணையம் வலியுறுத்து




பல ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனக்கா தடுப்பு மருந்தின் பயன்பாட்டுக்கு விதித்த தற்காலிகத் தடையை நீக்கி அதனைத் தொடர்ந்து விநியோகிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

அந்தத் தடுப்புமருந்தைப் போட்டுக்கொண்டோரில் சிலருக்கு மூளையில் இரத்தக் கட்டி ஏற்பட்டதாக அறிக்கைகள் வெளியாயின.

இருப்பினும் அந்தத் தடுப்புமருந்தின் பலன்களில் நம்பிக்கை கொண்டுள்ளதாக ஐரோப்பிய மருந்து அமைப்பு கூறியுள்ளது.

அஸ்ட்ராசெனக்கா தடுப்புமருந்தைப் போட்டுக்கொண்ட பின்னர் மூளையில் இரத்தக் கட்டி ஏற்பட்டோரின் எண்ணிக்கை பொதுவாகக் குறைவாகவே உள்ளதாக ஐரோப்பிய உணவு, சுகாதாரப் பாதுகாப்பு ஆணையம் குறிப்பிட்டது.

இருப்பினும் ஐரோப்பிய மருந்து அமைப்பின் மறுஆய்வுக்கும் பரிந்துரைகளுக்கும் காத்திருப்பதாக அது தெரிவித்தது.

அஸ்ட்ராசெனக்கா தடுப்புமருந்து பாதுகாப்பானது என்று ஐரோப்பிய மருந்து அமைப்பு தெரிவித்தவுடன், தடையை அகற்றத் தயாராய் இருப்பதாக இத்தாலியும் பிரான்ஸும் தெரிவித்துள்ளன.

தற்காலிகத் தடை விதித்த ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பட்டியலில் சுவீடனும் லத்வியாவும் சேர்ந்துகொண்டுள்ளன.

இதற்கிடையே, அஸ்ட்ராசெனக்கா தடுப்புமருந்து தொடர்பான அறிக்கைகளைப் பரிசீலித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

தடுப்புமருந்தைப் போட்டுக்கொள்வதால் மூளையில் இரத்தக் கட்டி ஏற்படுவதாகக் கூறப்படுவதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்று அது குறிப்பிட்டது.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: ரஷ்யா டிரம்ப் ஆதரவு பிரசாரம்




அமெரிக்காவில் கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலை, முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்புக்கு ஆதரவாகத் திசை திருப்பும் முயற்சிகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் அங்கீகாரம் வழங்கியிருக்கக் கூடுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

உளவு அதிகாரிகளை மேற்கோள்காட்டிஅமெரிக்கஅரசாங்க அறிக்கை இதனைத் தெரிவித்தது.

தேர்தலில் யார் வெற்றிபெறுவார் என்பது தொடர்பில், தவறான, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை ரஷ்யா பரப்பியதாக அறிக்கை குறிப்பிட்டது.

ஆனால், தேர்தலின் இறுதி முடிவு எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கத்தாலும் பாதிக்கப்படவில்லை என்றும் அது தெரிவித்தது. அமெரிக்கத் தேர்தலில் தலையிட்டதாகக் கூறப்படுவதை ரஷ்யா தொடர்ந்து மறுத்துவருகிறது.

தேசிய உளவுப் பிரிவு பணிப்பாளர் அலுவலகம் வெளியிட்ட 15 பக்க அறிக்கையில், ரஷ்யாவும் ஈரானும் ஜனாதிபதி தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குறிப்பிடப்பட்டது.

கடந்த நவம்பர் 3ஆம் திகதி நடைபெற்ற தேர்தலுக்கு முன்னதாக, ஜனாதிபதி ஜோ பைடன் குறித்த ஆதாரமற்ற தகவல்களை, ரஷ்யாவோடு தொடர்புடைய தனிநபர்கள் சிலர் பரப்பிவந்ததாக அறிக்கை கூறியது.

மேலும், தேர்தல் நடைமுறைகள் குறித்த நம்பிக்கையைக் கீழறுக்கும் தவறான தகவல்களைப் பரப்பும் முயற்சிகளும் இடம்பெற்றதாக அது தெரிவித்தது.

## கொவிட்–19 நெருக்கடியால் 228,000 குழந்தைகள் மரணம்



தெற்காசியாவில் கடந்த ஆண்டு 228,000 குழந்தைகள் கூடுதலாய் உயிரிழந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை மணி எழுப்பியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அதற்கு மறைமுகக் காரணமாக இருக்கலாம் என ஐ.நா கவலை தெரிவித்தது. மேலும், 11,000 பெண்கள் கர்ப்பகாலப் பிரச்சினைகளால் உயிரிழந்துள்ளனர். 3.5 மில்லியன் தேவையற்ற கர்ப்பங்கள் உண்டானதாகவும், அறிக்கை தெரிவித்தது.

ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியமான யுனசெப் ஆதரவோடு நடத்தப்பட்ட ஆய்வில் இந்த விபரங்கள் தெரியவந்தன. வைரஸ் பரவலால் அத்தியாவசியப் பொதுச் சுகாதாரச் சேவைகள் பாதிக்கப்பட்டது இதற்கு முக்கியக் காரணம் என ஆய்வு குறிப்பிட்டது.

1.8 பில்லியன் மக்கள் வசிக்கும் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகள் வைரஸ் பரவலால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்தியாவசியச் சேவையில் ஏற்பட்ட வீழ்ச்சி, ஏழைக் குடும்பங்களின் உடல்நலத்தையும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்துகளையும் பாதித்துள்ளதாக யுனசெப் பிராந்திய பணிப்பாளர் கூறினார்.

குழந்தைகளுக்கும் அன்னையருக்கும் பொதுச் சுகாதாரச் சேவைகள் மிகவும் அவசியம் என்பதால் அவை முழுமையாக நிலைநாட்டப்படுவது முக்கியம் என்றார் அவர்.

## ஒருபால் திருமணம்: ஜப்பான் நீதிமன்றத்தில் முக்கிய தீர்ப்பு




ஜப்பானில் ஒருபாலின திருமணத்தை அங்கீகரிப்பதில் தோல்வி அடைந்திருப்பது 'சட்டத்திற்கு எதிரானது' என்று ஜப்பானிய மாவட்ட நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு அளித்துள்ளது.

ஜப்பானிய அரசியலமைப்பில் திருமணம் என்பது இருபாலாருக்கும் இடையிலான ஒன்று என வரையறுக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தத் திருமணத்தை மறுப்பது அரசியலமைப்பில் வழங்கப்பட்டிருக்கும் சமத்துவத்தை நிராகரிப்பதாக இருக்கும் என்று சப்போரோ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது ஓரினச் சேர்க்கையாளர்களின் போராட்டத்திற்கு ஓர் அடையாள ரீதியான வெற்றியாக பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தி அடைந்த ஜி7 நாடுகள் குழுவில் ஒருபால் திருமணத்திற்கு அங்கீகாரம் அளிக்காத ஒரே நாடாக ஜப்பான் உள்ளது.

இந்நிலை ஓரினச் சேர்க்கையாளர் குழு ஒன்று தமக்கு ஏற்பட்டிருக்கு உளரீதியான பாதிப்புகள் தொடர்பில் தொடுத்த வழக்கிலேயே மாவட்ட நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. எனினும் அவர்களின் இழப்பீட்டுக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

## பிரேசிலில் தேசிய அளவில் முடக்கநிலைக்கு கோரிக்கை



பிரேசிலில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதால் புதிய தேசிய முடக்கநிலைக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட சாவ் பாவ்லோ மாநில அதிகாரிகள் அந்த வேண்டுகோளை விடுத்தனர்.

கடந்த செவ்வாயன்று ஒருநாளில் மட்டும், பிரேசிலில் 2,841 பேர் வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அது, முன்னெப்போதும் இல்லாத அதிகரிப்பாகும்.

சாவ் பாவ்லோ மாநிலத்தில் மட்டும் 679 பேர் உயிரிழந்துள்ளனர். அதுவும், இதுவரை இல்லாத எண்ணிக்கையாக உள்ளது.

உலக அளவில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக பிரேசிலில்தான் வைரஸ் தொற்றால் உயிரிழப்பு எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. கொவிட்–19 நோய்ப்பரவல் ஆரம்பித்ததிலிருந்து இதுவரை அங்கு, நான்கு முறை சுகாதார அமைச்சர் பதவியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசுகள் அறிமுகம் செய்யும் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளை, ஜனாதிபதி போல்சொனாரோ தொடர்ந்து எதிர்த்து வருகிறார்.

தனிமைப்படுத்தும் நடவடிக்கையால் ஏற்படும் பொருளாதார பாதிப்பு, வைரஸ் பரவலால் ஏற்படும் பாதிப்பைக் காட்டிலும் அதிகம் என்று அவர் வாதிட்டு வருகிறார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்

THINAKARAN தினகரன்

2021 மார்ச் 18 வியாழக்கிழமை




**தொழுகை நேரம்**

14 முதல் 18 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் பங்குனி 5

ராகுகாலம் : பகல் : 01.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தமரண யோகம்

திதி: பஞ்சமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | பயம் |
| ரிஷபம் | நட்பு |
| மிதுனம் | தடங்கல் |
| கடகம் | களிப்பு |
| சிம்மம் | நோய் |
| கன்னி | கவலை |
| துலாம் | தாமதம் |
| விருச்சிகம் | எதிர்ப்பு |
| தனுசு | வரவு |
| மகரம் | நலம் |
| கும்பம் | சுகம் |
| மீனம் | பெருமை |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)



## தவக்கால சிந்தனை

### நம்மை இயேசுவோடு இணைத்துக்கொள்வோம்

தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் பயணிக்கின்றோம். இயேசுவோடு இணைந்து வாழ்தல் அல்லது அவரைப் போன்று வாழ்தல் தொடர்பில் இன்றைய நற்செய்தி நமக்கு கற்பிக்கின்றது.

“நூலைப் போல சேலை, தாயைப் போல பிள்ளை” என்பது பழமொழி. ஆனால், இயேசு தந்தையைப் போல வாழ்ந்தார், தந்தையைப் போல செயலாற்றினார். எனவேதான், அவர் ஓய்வு நாள் சட்டத்தை மீறியபோது, “என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்” என்று கூறினார்.

வானகத் தந்தைக்கு ஓய்வு தேவையில்லை. அவர் ஓய்வின்றி தமது பேரன்பை, இரக்கத்தை நம்மீது பொழிந்துகொண்டிருக்கிறார். இயேசுவும் ஓய்வின்றி உழைத்தார். ஓய்வு நாளிலும் நோயாளர்களைக் குணமாக்கினார், பாவிகளை மன்னித்தார். நன்மை செய்வதற்கு ஏது ஓய்வு?

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றி, நாமும் தந்தையைப் போல வாழ்வோம். “உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவராக வாழுங்கள்” என்னும் வாக்கிற்கேற்ப நாமும் நிறைவுள்ளவர்களாக வாழ்வோம். தந்தை ஓய்வின்றி இரக்கம் பொழிவது போல, நாமும் பரிவின் செயல்களை, அன்புச் செயல்களை ஓய்வின்றி செயல்படுத்துவோம்.

சிலுவையில் இயேசுவை அறையத் தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுள் ஒன்று, இயேசு தன்னை தந்தை இறைவனோடு இணையாக்கினார் என்பது. தந்தை இறைவனும் இயேசுவும் ஆள் தன்மையில் மட்டுமே வேறுபட்டவர்கள். சிந்தனை, செயல்பாடு அனைத்திலும் ஒன்றுபட்டவர்கள். "மகன் தாமாக எதையும் செய்ய இயலாது; தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும்."(மத்5:19)

இயேசுவின் பணி , நம்மை இயேசுவின் சகோதர சகோதரிகளாக்கி, தந்தை இறைவனின் அன்புக் குழந்தைகளாக்குவது. இவ் உன்னத பணியில்,தன் இறை தன்மையையும் தன் உறவையும் உறுதிப்படுத்துகிறார். தாம் தந்தை இறைவனின் அன்பு மகன் என்னும் உறவை வெளிப்படுத்தி,மனிதர் அனைவரையும் தன் சகோதர சகோதரிகளாக்கும் இலட்சியத்தில் தன்னை முழுவதும் கையளிக்க முன்வருகிறார்.

ஆகவே, யாரையும் தீர்ப்பிடவோ, தண்டனைக்குள்ளாக்கவோ, அழிவைச் சந்திக்கவோ, தந்தை மகன் என்ற உறவை இழந்துவிடவோ அவர் விரும்பவில்லை. அனைவரும் வாழ்வு பெற வேண்டும் என்பதே அவர் விருப்பம். அனைவரின் வாழ்வுக்கும் ஊற்றாய் அமையவே விரும்புகிறார். நாமும் நம்மை இயேசுவோடு இணைத்துக் கொள்வோம்.

அருட்பணி பேர்னாட் ஜீவா...

# கடந்த கால ஒற்றுமையின் உணர்வை நிகழ்காலத்திற்கு கொண்டுவந்தால் மீண்டும் உலகக் கிண்ணத்தை வெல்லலாம்

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ**





கடந்த காலத்தில் காணப்பட்ட ஒற்றுமையின் உணர்வை நிகழ்காலத்திற்கு கொண்டுவந்தால் நாம் மீண்டும் உலகக் கிண்ணத்தை வெற்றிக் கொள்ளலாமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (17) தெரிவித்தார்.

இலங்கை, கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டு 25 ஆண்டுகள் பூர்த்தி விழாவை முன்னிட்டு வீரர்களை கௌரவிக்கும் முகமாக அலரி மாளிகையில் நடைபெற்ற உலகக் கிண்ண வெற்றியின் 25ஆவது ஆண்டு தேசிய நிகழ்வில் கலந்துக் கொண்டிருந்த போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் அலுவலகம், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த தேசிய நிகழ்வை ஏற்பாடு செய்தது.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட சந்தர்ப்பத்தில் சர்வதேச கிரிக்கெட் சபை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கிய பதக்கங்கள் இவ்வளவு காலமாக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் காணப்பட்ட நிலையில், அப்பதக்கங்கள் பிரதமரின் கரங்களினால் கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்பட்டன. 06

## தேசிய, மாகாண ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தகவல் தொழில்நுட்பம், மனையியல் மற்றும் அழகியல் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களை ஆசிரியர் சேவையின் 03ஆம் பிரிவின் கீழ் நிரப்புவதற்கான திறந்த போட்டித் தேர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

15ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அனுப்ப முடியும். https://applications.doenets.lk/exams என்ற இணையத்தில் விண்ணப்பிக்கலாம்.

# வெளிவிவகார அமைச்சர் தினேஷ் பாகிஸ்தான் தூதுவருடன் சந்திப்பு



பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தமையைத் தொடர்ந்து இருநாட்டு உறவை விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மத் சாத் கட்டாக் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

பாகிஸ்தான் நன்கொடையாக வழங்கிய நடமாடும் நூலகங்களை அமைத்தல் மற்றும் இலங்கை மாணவர்களுக்கு மேலதிகமான நூறு மருத்துவ புலமைப்பரிசில்களை வழங்குதல் உள்ளிட்ட பிரதமர் இம்ரான் கானின் விஜயத்தின் போது அறிவிக்கப்பட்ட திட்டங்களை விரைவாக செயற்படுத்துவதற்கு இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

இலங்கையர்களுக்காக பௌத்த யாத்திரிக இடங்களைத் திறப்பதற்கான பாகிஸ்தானின் சலுகையை வரவேற்ற அமைச்சர் தினேஷ் குணவர்தன, பாகிஸ்தானின் பிரயாண சலுகைகளை இலங்கை சுற்றுலாவுடன் சேர்ந்து விரைவில் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்தார். நன்கு பாதுகாக்கப்பட்ட பாரம்பரிய பௌத்த தலங்களின் பன்முகத்தன்மையைக் காண்பதற்காக பாகிஸ்தானுக்கு பரிச்சயமான விஜயங்களை மேற்கொள்ளுமாறு பௌத்த பிக்குகள், ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களுக்கு பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் அழைப்பு விடுத்தார். 06

# மேடை நாடக கலைஞர்களுக்கு காப்புறுதித்திட்டம் அறிமுகம்

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமை**

மேடை நாடக கலைஞர்களுக்கு அரசாங்கம் காப்புறுதி தொகையை செலுத்தி 'ப்ரேக்ஷா' காப்புறுதியை வழங்குவது இலங்கை வரலாற்றில் முதல் முறையாக நடைபெறுவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் (16) அலரி மாளிகையில் தெரிவித்தார்.

மேடை கலைஞர்களுக்கான 'ப்ரேக்ஷா' விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதியை மேடை நாடக கலைஞர்களுக்கு வழங்கும் நிகழ்வின் தொடக்க விழாவின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய மரபுரிமை, அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் டவர் மண்டப அரங்க அறக்கட்டளை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த ப்ரேக்ஷா விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதி ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தால் செயற்படுத்தப்படுகிறது.

அதற்கமைய, ஒரு உறுப்பினர் மரணித்தால் 02 இலட்சம் ரூபாயும், திடீர் மரணம் ஏற்பட்டால் 06 இலட்ச ரூபாயும், முழுமையாக ஊனமுற்றால் நான்கு இலட்சம் ரூபாயும், கடுமையான நோய் காப்புறுதிக்கு மூன்று இலட்சம் ரூபாயும், வைத்தியசாலை அனுமதிக்கு ஆண்டுக்கு அதிகபட்சம் 1,50,000 ரூபாயும், வெளிநோயாளர் சிகிச்சைக்கு ஆண்டுக்கு 15,000 ரூபாய் வரையிலும் வழங்கப்படும். 06

## அஸ்ட்ரா செனேகா தடுப்பூசி பிரச்சினை;

# தடுப்பூசி போடும் பணியில் எந்தவித பாதிப்பும் இல்லை

**உலக சுகாதார நிறுவனம்**

அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியால் எழுந்துள்ள பிரச்சினை காரணமாக உலகளாவிய தடுப்பூசி திட்டம் பாதிக்கப்படவில்லையென்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், பல்தேசிய மருந்து நிறுவனமான அஸ்ட்ரா செனேகாவும் இணைந்து உருவாக்கிய கொரோனா தடுப்பூசி மேற்கத்திய நாடுகளில் பிரச்சினைக்குள்ளாகி இருக்கிறது.

இந்த தடுப்பூசியை போட்டுக்கொண்ட சிலருக்கு இரத்த நாளங்களில் இரத்தம் உறைந்து விடுவதாக தகவல்கள் வந்தன. ஒஸ்திரியாவில் ஒருவர் இறந்து விட்டதாகவும் செய்தி வெளியானது. இது மேற்கத்திய நாடுகளில் கவலையை ஏற்படுத்தி உள்ளது. தடுப்பூசியின் மீது தயக்கத்தையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் டென்மார்க், ஜெர்மனி, 06

# காகிதங்கள் எனக்கூறி இறக்குமதி செய்யப்பட்ட வாசனை திரவியங்கள் சுங்கத் திணைக்களத்தால் பறிமுதல்

காகிதங்கள் இறக்குமதி செய்வதாகக் கூறி சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான வாசனைத் திரவியங்களைக் கொண்ட கொள்கலன் ஒன்று சுங்கத் திணைக்களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பாணந்துறை பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றினால் இவ்வாசனைத் திரவியங்கள், தனது தொழிற்சாலை உற்பத்திக்கு மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும் காகிதத்தை இறக்குமதி செய்வதாகக் கூறி கடந்த 12ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. கொள்கலன் தொடர்பில் சந்தேகம் கொண்ட சுங்க அதிகாரிகள் அதனை சோதனையிட்ட போது மிக சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாசனைத் திரவியங்களை கண்டு பிடித்துள்ளனர்.

அரசாங்கம் வழங்கிய வரிச் சலுகையை தவறாகப் பயன்படுத்துவதன் மூலம் இவ்வாசனைத் திரவியங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் முதற்கட்ட 06

# நோர்வூட் பிரதேசபை 10 நாட்களுக்கு பூட்டு

**மேலும் 03 பேருக்கு கொரோனா தொற்று உறுதி**

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நோர்வூட் பிரதேச சபையின் மேலும் மூன்று உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து 10 நாட்களுக்கு பிரதேசசபை முடக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி நோர்வூட் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு மேற்கொண்ட பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை நேற்று(17) மாலை கிடைக்கப்பெற்ற போதே சமர்ஹில், வனராஜா மற்றும் சலன்கந்த வட்டார உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேசசபையின் உப தவிசாளரின் மனைவிக்கு கொரோனா உறுதியானதையடுத்து அவரது கணவரான உப தவிசாளர், அவரது தாயார் மற்றும் உப தவிசாளரின் வியாபார ஸ்தாபனத்தில் வேலை செய்யும் பெண் ஒருவர் என மூவருக்கு கடந்த 11 ஆம் திகதி கொரோனா இருப்பது உறுதியானது இதனையடுத்தே நோர்வூட் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு கடந்த 15 ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பி.சிஆர் பரிசோதனை அறிக்கையிலே மேற்படி 06

# ரயில்வே திடீர் பணிப் பகிஷ்கரிப்பு தற்காலிகமாக நிறுத்தம்

லோரன்ஸ் செல்வநாயகம்

அநீதியான ஒழுக்காற்று நடவடிக்கையை நிறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ரயில்வே சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஆரம்பித்திருந்த திடீர் வேலைநிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளதாக ரயில்வே சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் ரயில்வே பொது முகாமையாளருடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையையடுத்து போராட்டத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானித்ததாக அந்த சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நேற்று நள்ளிரவு வரை அலுவலக ரயில்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும் இன்று முதல் ரயில் சேவைகள் அனைத்தும் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# வலம்புரி கவிதா வட்டத்தின் 72வது கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டத்தின் 72 ஆவது பௌர்ணமி கவியரங்கம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30க்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கவியரங்கு முன்னாள் தினகரன் வாரமஞ்சரி கவிதைப் பூங்கா தயாரிப்பாளர் கவிஞர் ரஷீத் எம். றியாழ் தலைமையில் நடைபெறும்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் தலைவர் நஜ்முல் ஹுசைன், அல்லது செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், அல்லது பொருளாளர் ஈழகணேஷ் ஆகியோருடன் தொடர்பு கொள்ளலாம். கலந்து கொள்வோர் சுகாதார விதிமுறைகள் கட்டாயம் பேண வேண்டும்.

# ஈழம் குறித்து தமிழக தலைவர்களின் பேச்சு; அலட்டிக்கொள்ளத் தேவையில்லை

**சுசில் பிரேமஜயந்த**



தமிழக அரசியல் கட்சி ஈழம் தொடர்பில் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படும் கருத்துக்கு அதிகளவு கவனம் செலுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாதென தொலைநோக்கு கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் அலுவலகத்தில் நேற்று (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தென்னிந்தியாவின் தேர்தல் களத்தில் இலங்கை தமிழர்களின் விவகாரம் பிரதான தேர்தல் பிரசாரமாக காணப்படுகிறது. 06

# பண்டிகை காலத்தில் சுகாதார வழிகாட்டல்களை கட்டாயம் பின்பற்ற வேண்டும்

**நாட்டை முடக்குவது சாத்தியமில்லை**

சுப்பிரமணியம் நிஷாந்தன்

புத்தாண்டுக் காலப்பகுதியில் சுகாதார வழிகாட்டல்களை பொது மக்கள் கட்டாயம் பின்பற்றினால் நாட்டில் கொவிட்19 தொற்று பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியுமென பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

“உலகப் பொருளாதாரம் முழுமையாக வீழ்ந்துள்ளது. இலங்கையின் பொருளாதாரமும் வீழ்ச்சிக்கண்டுள்ளது. எம்மை போன்ற நாடுகளில் முழுமையான பயணத் தடைகளை விதிப்பது அல்லது முழு நாட்டையும் முடக்குவதென்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாகும்.

எதிர்காலத்தில் ஏற்படப்போகும் தொற்றுப் பரவல் தொடர்பில் எச்சரிக்கையுடன் பொது மக்கள் பண்டிகைக் காலங்களில் செயற்பட வேண்டும். உரிய சுகாதார வழிகாட்டல்களை கட்டாயம் மக்கள் பின்பற்ற வேண்டும்.

தற்போது நாடு ஓரளவு வழமைக்குத் திரும்பியுள்ளது.

நாட்டை முடக்குவது அல்லது தனிமைப்படுத்தல் சட்டங்களை அமுல்படுத்துவதால் பாதிப்புகள் ஏற்படும் என்பதால் 06

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் பங்குனி மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷஃபான் பிறை 04

### குறள் தரும் சிந்தனை



ஒத்த தறவோன் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

ஒப்புரவை அறிந்து போற்றிப் பிறர்க்கு உதவியாக வாழ்கின்றவன் உயிர்வாழ்கின்றவன் ஆவான், மற்றவன் செத்தவருள் சேர்த்துக் கருதப்படுவான்.

# தடுப்பு மருந்து விடயத்தில் வீண் அச்சம் தேவையில்லை

மனித குலத்திற்கு பெரும் சவாலாக விளங்கிக் கொண்டிருக்கும் கொவிட்19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு தற்போது புழக்கத்திற்கு வந்துள்ளன. 2020 டிசம்பர் நடுப்பகுதி முதல் நான்கைந்து தடுப்பு மருந்துகள் அவசர தேவையின் நிமித்தம் மக்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன. அந்தந்த நாடுகளது அங்கீகாரத்தின் அடிப்படையில் இத்தடுப்பு மருந்துகள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

அவ்வாறு வழங்கப்படும் தடுப்பு மருந்துகளில் ஒக்போர்ட் பல்கலைக்கழகம் அஸ்ட்ரா செனகா நிறுவனத்துடன் இணைந்து கண்டுபிடித்து தயாரித்துள்ள தடுப்பு மருந்தும் ஒன்றாகும். இத்தடுப்பு மருந்தை உலகில் பல நாடுகள் தம் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருகின்றன.

அந்த வகையில் இந்ம அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்து இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் 'கொவிசீல்ட்' என்ற பெயரில் உற்பத்தி செய்யப்படுகின்றது. இத்தடுப்பு மருந்துதான் இலங்கை மக்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இந்நாட்டில் இத்தடுப்பு மருந்துக்கு மாத்திரமே கொவிட்19 கட்டுப்பாட்டுக்காக இற்றை வரையும் அங்கீகாரமும் அளிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி, 2021 ஜனவரி 29 முதல் நேற்றுமுன்தினம் வரையும் 07 இலட்சத்து 96 ஆயிரத்து 792 பேருக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டிருக்கின்றது. தொடர்ந்தும் இத்தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் இந்த அஸ்ட்ரா செனா தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொண்ட டென்மார்க் நாட்டைச் சேர்ந்த பிரஜையொருவருக்கு நரம்பில் இரத்தம் உறைதல் பாதிப்பு ஏற்பட்டு அந்நபர் உயிரிழந்துள்ளார். அதனைத் தொடர்ந்து வேறு சில நாடுகளிலும் இப்பாதிப்பு பதிவாகியுள்ளது.

இதன் காரணத்தினால் டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட பல நாடுகள் நேற்றுமுன்தினம் வரையும் இந்த அஸ்ட்ரா செனா தடுப்பு மருந்தை வழங்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி இருக்கின்றன.

இவ்வாறான நிலையில் அஸ்ட்ரா செனகா நிறுவனம், 'இரத்தம் உறைதலுக்கும் இத்தடுப்பூசிக்கும் எந்தத் தொடர்புமில்லை' என்று குறிப்பிட்டிருக்கின்றது. இதே கருத்துப்பட உலக சுகாதார ஸ்தாபனமும் தெரிவித்திருக்கின்றது. என்றாலும் இற்றை வரையும் 14 நாடுகள் இத்தடுப்பு மருந்து வழங்குதலை இடைநிறுத்தியுள்ளன.

இவ்வாறான நிலையில், இந்த அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்து தொடர்பில் இலங்கை மக்கள் மத்தியில் கேள்விகள் எழுந்துள்ளன. ஆனால் இந்நாட்டில் இவ்வாறான பாதிப்பு இற்றை வரையும் பதிவாகவில்லை. இந்த நிலையில் அரசாங்கம், 'அஸ்ட்ரா செனகா தடுப்பு மருந்து தொடர்ந்து வழங்கப்படும்' என்று நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கின்றது.

இதேவேளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொவிட்19 கட்டுப்பாடுக்காக சீன நாட்டின் சினோபாம் நிறுவனம் தாயரித்துள்ள தடுப்பு மருந்தை இலங்கை மக்களுக்கு வழங்குவதற்கு அனுமதி அளிப்பதற்கான நடவடிக்கையைத் துரிதப்படுத்துமாறு இராஜாங்க அமைச்சர் டொக்டர் சுதர்ஷணி பெர்னாண்டோ புள்ளே மற்றும் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை இந்த இரத்தம் உறைதல் விவகாரம் தொடர்பில் அஸ்ட்ரா செனகா நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் மாத்திரம் 17 மில்லியன் பேருக்கு இத்தடுப்பு மருந்து வழங்கப்பட்டுள்ளது. இவர்களில் 15 பேருக்கு மாத்திரமே இப்பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. மேலும் 22 பேருக்கு நுரையீரல் தொடர்பான பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இவை நாம் எதிர்பார்த்ததை விடவும் மிகவும் குறைவான பக்கவிளைவுகளாகும். என்றாலும் இத்தடுப்பூசியைப் பெற்றுள்ள சகலரதும் ஆரோக்கியம் தொடர்பில் நாம் தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றோம்' என்று குறிப்பிட்டிருக்கின்றது.

ஆனாலும் இந்தியாவில் சேரம் நிறுவனம் உற்பத்தி செய்யும் இத்தடுப்பு மருந்தை இந்தியா, இலங்கை அடங்கலாக பல நாடுகள் பயன்படுத்துகின்றன. இருப்பினும் இந்நாடுகள் எவற்றிலும் அவ்வாறான பாதிப்புகள் பதிவாகி இருப்பதாக தகவல்கள் வெளிவரவில்லை.

ஆனாலும் கொவிட்19 தொற்று பரவுதலைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் விஷேட கவனம் செலுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் தற்போது மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தடுப்பு மருந்து தொடர்பில் உலகின் சில நாடுகளில் எழுந்துள்ள நிலைமை குறித்து இலங்கை மருத்துவ நிபுணர்கள் மற்றும் அரசாங்கத்தினால் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது.

ஆகவே மக்களின் ஆரோக்கிய நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்படும் இவ்வரசாங்கம் மக்களுக்கு தாக்கங்கள், பாதிப்புகள் ஏற்பட எவ்விதத்திலும் இடமளியாது. இது மிகவும் உறுதியானது என்பதில் ஐயமில்லை.

editor.tkn@lakehouse.lk

# இந்தியாவில் தொடங்கியது கொரோனா இரண்டாம் அலை

## முதலாவது அலை தணிந்ததும் அலட்சியத்தை கடைப்பிடித்ததால் வந்த வினை!



இந்தியா முழுவதும் மீண்டும் கொரோனா தொற்று வேகமாக பரவி வருவதால், அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் பிரதமர் மோடி இன்று ஆலோசனை நடத்துகிறார். மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், டெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் கொவிட்19 தொற்று வேகமாக பரவி வரும் நிலையில் நாக்பூர், மும்பை போன்ற நகரங்களில் மீண்டும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது தமிழகத்திலும் தொடர்ந்து தொற்று பரவல் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் ஒரே நாளில் 836 பேருக்கு புதிதாக வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் மொத்த பாதிப்பு எண்ணிக்கை 8 இலட்சத்து 60 ஆயிரத்து 500ஐக் கடந்துள்ளது. மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 12,051 ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் பெப்ரவரி மாத இறுதியில் ஒரு நாள் கொரோனா பாதிப்பு 480 என்ற எண்ணிக்கையில் இருந்து வந்த நிலையில், தற்போது தொற்று எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இதேபோல, மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரே நாளில் 15,051 பேர் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கை குறித்து பிரதமர் மோடி அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் காணொலி காட்சியில் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு ஆலோசனை நடத்துகிறார். கொரோனா பரவலை கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், முக்கிய நகரங்களில் விதிமுறைகளுடன் கூடிய ஊரடங்கு அமுல்படுத்துதல் குறித்து அவர் ஆலோசிக்க உள்ளார் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

'உலக அளவில் எல்லா நாடுகளிலும் இரண்டாவது அலை சென்று கொண்டிருக்கிறது. இந்தியாவில் முதல் அலை கடந்த ஆண்டு மே, ஜூன் ஜூலை, ஓகஸ்ட், செப்டம்பர், நவம்பர், டிசம்பர் வரை இருந்தது. கடந்த ஜனவரியில்தான் கொரோனா முதல் அலை தணிந்தது. இப்போது, மீண்டும் கொரோனா தொற்று அதிகரிக்கிறது. இது இரண்டாவது அலை ஆகும். கொரோனா முதல் அலை வரும் போது இந்தியா சரியான நேரத்தில் ஊரடங்கு உத்தரவு போட்டது. இதனால், இந்தியாவை பொறுத்தவரை 21 வீதம் மக்கள்தான் கொரோனாவை எதிர்கொண்டு இருப்பதாக ஆய்வறிக்கை கூறியது. மீதமுள்ள 80 % பேர் கொரோனாவில் இன்னும் சிக்கவில்லை. இப்போது இரண்டாம் அலை ஏறும் போது, மீதமுள்ள 80 % மக்கள் சிக்க போகிறார்கள் என்று அர்த்தம். இப்போது கொரோனா ஏறுகிறது என்றால் இந்தியா பொதுமுடக்கத்தை முற்றிலுமாக கைவிட்டு விட்டது என்றுதான் அர்த்தம்' என்று இந்திய சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

'மக்கள் கூட்டம், கூட்டமாக செல்கின்றனர். இதனால் வேகமாக மீண்டும் கொரோனா பரவுகிறது. இப்படியே விட்டால் இது பொதுமுடக்கத்தை நோக்கித்தான் செல்லும். அதற்கு முன்னதாக நாம் பழைய மாதிரி முகக்கவசம் அணிய வேண்டும். இதை செய்தாலே அடுத்த அலையை கொஞ்சம் தள்ளி போடலாம். எதிலும் முழுமையாக வெற்றி பெற முடியாது. முழுமையாக வெற்றி பெற வேண்டுமென்றால் 3 வருடம் கழித்துத்தான் வெற்றி பெற முடியும். 100இல் 70 %பேர் இந்த நோய்க்கு சிக்கித்தான் ஆக வேண்டும். எப்படி இருந்தாலும் ஒரு தொற்று வந்தால் 80 வீதம் மக்களை பதம் பார்க்காமல் விடுவதில்லை. ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொரோனாவில் சிக்கிக் கொண்டால் சிகிச்சை அளிப்பது என்பது மிகக் கடினம். எனவே, முகக்கவசம் அணிவதை கட்டாயமாக்க வேண்டும்' எனவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். இதேவேளை மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களின் முக்கிய நகரங்களில் கொரோனா பரவல் அதிகரிப்பால் மார்ச் 31 வரை இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## நாடு முழுமையாக முடக்கப்படும் அறிகுறி; மத்திய பிரதேசம், குஜராத் மாநிலங்களின் முக்கிய நகரங்களில் ஊரடங்கு அமுல்




இந்தியாவில் தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்து விட்டாலும் சில நகரங்களில் கொரோனா தொற்று பரவுவதை தடுக்க முடியாதிருக்கின்றது. குஜராத் மாநில அரசு தலைநகர் அஹமதாபாத் மற்றும் வதோதரா, சூரத், ராஜ்கோட் ஆகிய நகரங்களுக்கு நேற்று (மார்ச் 17) முதல் இம்மாத இறுதி வரை இரவு நேர ஊரடங்கை அமுல்படுத்துவதாக அறிவித்துள்ளது.

அதன்படி இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை வணிக நிறுவனங்கள், கடைகள், ஹோட்டல்கள், மால்கள் இயங்காது. மருந்துக் கடைகள், மருத்துவமனைகள் போன்ற அத்தியாவசிய சேவைகள் இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுமட்டுமின்றி மத்திய பிரதேச தலைநகர் போபால் மற்றும் இந்தூர் நகரங்களிலும் இரவு ஊரடங்கு இன்று முதல் அமுலாகிறது.

## பெரியநீலாவணை 'இஸ்லாமிக் றிலீப்' வீட்டுத் திட்டம்

# கழிவுநீர் சூழ்ந்துள்ளதால் பெரும் சுகாதார சீர்கேடு

கல்முனை பிரதேசத்திலுள்ள பெரியநீலாவணை கிராமத்தில் அமைந்துள்ளதே 'இஸ்லாமிக் றிலீப்' வீட்டுத் திட்டமாகும். 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தில் 65 மீற்றர் எல்லைக்குள் வசித்து, சுனாமியில் வாழ்விடங்களை இழந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே இந்த வீட்டுத்திட்டம் நிர்மாணிக்கப்பட்டது.

அப்போது வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சராக இருந்த பேரில் அஷ்ரப்பின் முயற்சியினால் சர்வதேச தொண்டு நிறுவனமான 'இஸ்லாமிக் றிலீப்' நிறுவனத்தின் ஊடாக அரச காணியில் இந்த வீட்டுத் திட்டம் நிர்மாணிக்கப்பட்டது. பன்னிரண்டு வீடுகளுடன் கூடிய மூன்று மாடிகளைக் கொண்ட எட்டு வீட்டுத் தொகுதிகளில் 96 வீடுகள் இங்கு நிர்மாணிக்கப்பட்டு 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த வீட்டுத் தொகுதியில் 115 குடும்பங்களைச் சேர்ந்த 350 இற்கும் மேற்பட்டவர்கள் வசித்து வருகின்றனர். இந்த வீட்டுத் திட்டத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் குடியிருப்புகளும்,பாடசாலை, பள்ளிவாசல்,சுகாதார மத்திய நிலையம், விளையாட்டும் மைதானமும், ஆயுர்வேத வைத்தியசாலையும், நெசவுக்கைத்தறி நிலையங்களும், சிறு கடைகளும் அமைந்துள்ளன.

தூர நோக்குடன் திட்டமிடப்படாமல் நிர்மாணிக்கப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகின்றன.

இந்த வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள 96 வீடுகளின் மலசலகூடக் கழிவுகளுக்கான குழிகள் பொருத்தமான முறையில் அமைக்கப்படாமையால் இங்கு மலசலகூடக் கழிவுகள் வெளியே வருவதும் துர்நாற்றம் வீசுவதுமாக உள்ளது.

இதேபோன்று 96 வீடுகளிலும் உள்ள குளியலறைக் கழிவுநீரும் இந்த வீட்டுத் திட்டத்தை சூழ்ந்து பெரும் ஆபத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தக் கழிவுநீர்த் தேக்கத்தால் டெங்கு நோய் பரவும் அபாயம் தொடர்கின்றது. இந்த சீர்கேடு தொடர்பில் எந்த விதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை.



ஒவ்வொரு வீட்டிலுமுள்ள சமையலறைக் கழிவுநீரும் வெளியாகி வீட்டுத் தொகுதியின் நிலப்பரப்பை ஆக்கிரமித்துள்ளது. இந்தக் கழிவுநீர்த் தேக்கம் காரணமாக துர்நாற்றமும்,நிலம் மாசடையும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இங்கு பிள்ளைகள் விளையாட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இங்கு தினமும் பெரும் தெகையான குப்பைகள், கழிவுகள் நிறைகின்றன. இவற்றை அகற்றுவதற்கு கல்முனை மாநகர சபை எடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவுள்ளன. நாளாந்தம் சேருகின்ற பெரும் அளவிலான குப்பைகளில் நாற்றம் எடுக்கும் கழிவுகளை நாய், பூனை, காகம் என்பன காவிச் சென்று அங்குமிங்கும் பரப்புவதாலும் சீர்கேடுகள் ஏற்படுகின்றன.




இந்த வீட்டுத் திட்டத்தில் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன.அரசியல்வாதிகள் பலர் வருவதும் போவதும் வாக்குறுதிகளை வழங்குவதுமாக இருக்கின்றார்கள்.தேர்தல் வந்தால் கூட்டம் கூட்டமாக வருகின்றவர்கள் வாக்குறுதிகளை வழங்கி விட்டு தேர்தல் முடிந்ததும் வருவதில்லை.

இந்த வீட்டத் திட்டத்தில் குடியிருப்பவர்களைக் கொண்ட 'மாடி வீட்டு முகாமைத்துவ சபை'என்ற பெயரில் ஒரு சபையும் இயங்கி வருகின்றது. இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் இந்த சபையின் எடுக்கின்ற முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. இதனால் இங்கு வாழும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

'மாடிவீட்டு முகாமைத்துவ சபையின் தலைவர் எம்.ஐ.எம்.ஸாஹிர்(நாஸர்) இவ்வாறு தெரிவிக்கின்றார்.

"இங்கு கழிவுநீர் தேங்கி நிற்பதால் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. இதனால் இங்கு வாழ்கின்ற நாங்கள் சிறு பிள்ளைகளையும்,முதியவர்களையும் வைத்துக் கொண்டு அச்சத்துடன் வாழ்கின்றோம். எமது சபையின் மூலமாக பல அரசியல்வாதிகளுக்கும், அரச அதிகாரிகளுக்கும் கடிதத்தின் மூலம் வேண்டு கோள் விடுத்தோம். சிலர் வந்து பார்வையிட்டு சென்று விட்டார்கள். எதுவும் நடக்கவில்லை.

இதேபோன்று தேர்தல் காலங்களில் பல அரசியல்வாதிகள் வந்து பார்வையிட்டு, இப்பிரச்சினையை நாங்கள் தீர்த்துத் தருகின்றோம் என்று சொல்லி விட்டுப் போனார்கள். அவர்களை இதுவரை காணவில்லை".

இங்கு வசிக்கும் ஐ.எல்.எம்.பாறூக் இப்படிச் சொன்னார்.

"2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்த வீட்டுத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டோம். புதிதாகக் குடியேறியதும் இந்த வீடுகளில் உள்ள குறைகள் தெரியவில்லை. காலம் செல்லச் செல்ல குறைகள் வெளியே தெரியத் தொடங்கின.

இங்கு மலசலகூடக் கழிவுகள் வெளியேறுவதற்கு எவ்வாறு திட்டமிடப்பட்டுள்ளது? அதை எவ்வாறு அகற்றுவது போன்ற பிரச்சினைகளை கண்டறிய முடியாத நிலையில் இங்கு வசிக்கின்ற நாங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றோம். அதே போன்று குளியலறை, சமையலறை போன்றவற்றின் கழிவுநீர் வழிந்தோடுவதற்கு எந்தவிதமான பொறிமுறைகளோ வடிகான்களோ அல்லது குழிகளோ அமைக்கப்படவில்லை. இதனால் தினமும் பெரும் சிரமங்களையும், சீர்கேட்டையும் எதிர்நோக்குகின்றோம்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள மலசலகூடக் குழிகள் நிரம்பி குழிகள் வெடித்து கழிவுகள் வெளியில் பரவுவதால் இங்கு வசிப்பவர்களும் இந்த வீட்டுத் திட்டத்தைச் சூழ வசிப்பவர்களும் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கி வருகின்றனர்."

எனவே இந்த வீட்டுத் திட்டம் தொடர்பில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் துரிதமாக நடவடிக்கை எடுக்காவிடின் எதிர்காலத்தில் பெரும் நோய்த் தொற்றுக்குள்ளான ஒரு வீட்டுத் திட்டமாக இந்த வீட்டுத் திட்டம் அமைந்து விடும். சாதாரண கூலித் தொழிலார்களே இங்கு வசித்து வருகின்றனர்.



பி.எம்.எம்.ஏ.காதர்...
(மருதமுனை தினகரன் நிருபர்)

# குடிநீருக்காக நெடுந்தூரம் அலையும் ஹற்றன் குடாஓயா கொலனி மக்கள்

**நீர்வளம், வனவளம், இயற்கை வளம் நிறைந்து காணப்படும் பிரதேசமாக மலையகம் காணப்பட்ட போதிலும், எத்தனையோ குடும்பங்கள் பல வருட காலமாக சுத்தமான குடிநீர் இல்லாமல் அவதியுறுகின்றன.**

ஹற்றன் பொலிஸ் பிரிவிலுள்ள ஹற்றன்_ கொழும்பு பிரதான வீதியில் ஹற்றனிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது குடா ஓயா கொலனி. அங்கு வாழ்கின்ற மக்கள் குடிநீர் இன்றி அல்லலபடுகின்றனர்.

குடாஓயா கொலனியில் 125 இற்கும் மேற்பட்டோர் வீடு கட்டிக் கொள்வதற்காக காணிகளை வாங்கியுள்ளனர். ஆனால் பலர் குடிநீர் இல்லாததன் காரணமாக வீடுகள் அமைப்பதை கைவிட்டுள்ளனர். பல வீடுகள் அரைவாசி கட்டிய நிலையில் காணப்படுகின்றன.

பல குடும்பங்கள் தண்ணீர் இல்லாததன் காரணமாக சிரமப்படுகின்றன. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும், வேலைக்குச் செல்பவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குடிப்பதற்கு நீர் பெறுவதற்காக இரு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இடத்துக்கு கரடுமுரடான பாதையில் இங்குள்ள மக்கள் செல்கின்றனர். ஒருசிலர் குடிநீர் பெற்றுக் கொள்வதற்காக நாள் ஒன்றுக்கு ஐந்நூறு ரூபா செலவிடுகின்றனர். இன்னும் சிலர் மழைநீரை சேமித்து வைத்து தங்களது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

குளிப்பதற்கு நீர் இல்லாததன் காரணமாக இரண்டு கிலோ மீற்றர் நடந்து சென்று குளிப்பதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் தெரிவித்த போதிலும், இது தொடர்பாக உரிய அக்கறை செலுத்தப்படுவதில்லை என்று இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் குறித்த கொலனியில் வாழும் வயோதிபர்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகியிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தில் வீடு கட்டிய பலர் குடிநீர் இல்லாததன் காரணமாக, வீடுகள் இருந்தும் வாடகை வீடுகளில் வாழ வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. பெரும் கஷ்டத்தின் மத்தியில் காணிகளை பணம் கொடுத்து வாங்கிய போதிலும், அவர்கள் அனைவராலும் வீடுகளை கட்டிக் கொண்டு நிம்மதியாக வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இன்னும் சிலர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி தனியார் தோட்டத்தில் பொதுமக்கள் குடிநீர் பெற்றுக் கொள்வதற்காக பொதுவான கிணறு அமைந்துள்ள பகுதிக்கு செல்கின்றனர். குத்தகை செலுத்தி சிரமதான முறையில் குடிநீர் கிணற்றினை நிர்மாணித்த போதிலும், ஒரு சிலர் மாத்திரம் அதனால் பயனடைவதாகவும், இது குறித்து உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் எவ்வித பயனுமில்லை எனவும் மக்கள் தெரிவித்தனர்.





எனவே குடிநீர் இன்றி துன்பப்படும் மக்களின் அவல நிலையை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இது குறித்து மக்கள் கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டனர். "நாங்கள் 15 வருடங்களுக்கு மேலாக இந்தக் கிராமத்தில்தான் வாழ்ந்து வருகிறோம். இதன் உரிமையாளர் எங்களுக்கு செலுத்த வேண்டி ஓய்வூதிய, சேமலாப நிதியத்திற்கு பதிலாக காணிகளை பெற்றுக் கொடுத்தார். நாங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வீடுகளை அமைத்து குடிபுகுந்தோம். ஆனால் குடிநீர் இல்லாததன் காரணமாக பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகிறோம். எங்களுக்கு எப்படியாவது குடிநீர் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்."

இவ்வாறு பலரும் தெரிவித்தனர்.

**கே.சுந்தரலிங்கம்...**
*(ஹட்டன் விசேட நிருபர்)*

# இலங்கை நிருவாக சேவையில் 30 வருடங்கள் நிறைவு; அட்டாளைச்சேனையில் அஸீஸுக்கு பாராட்டு விழா

**கிழக்கு மாகாண உள்ளூராட்சி, கிராம அபிவிருத்தி, கிராமிய தொழிற்துறை, சட்டமும் ஒழுங்கும், நிதி, போக்குவரத்து, சுற்றுலாத்துறை, கட்டடங்கள் மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸ், இலங்கை நிர்வாக சேவையில் 30 வருடங்கள் நிறைவு செய்ததையொட்டிய பாராட்டு விழா மற்றும் 'நதி நடந்த பாதை' நினைவு மலரின் அறிமுகம் நிகழ்வுகள் அட்டாளைச்சேனை பெரிய ஜும்மாப் பள்ளிவாயல் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.**

அட்டாளைச்சேனை பிரதேச சமூகம் அமைப்பு சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்திய இவ்விழாவுக்கு, அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாயல்கள் சம்மேளனத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் தலைமை தாங்கினார்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.அப்துல் நிஸாம் முதன்மைப் பேச்சாளராகக் கலந்து கொண்ட இவ்விழாவில், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் நூல் அறிமுக உரையாற்றினார்.

இலங்கை நிர்வாக சேவையில் 30 வருடங்களை நிறைவு செய்த முதலமைச்சின் செயலாளர் தேசமான்ய யூ.எல்.ஏ.அஸீஸிற்கு மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. அவரது நீண்டகாலப் பணியைப் பாராட்டி பல்வேறு அமைப்புக்கள், நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் என அதிகமானோர் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசு வழங்கி பாராட்டி கௌரவித்தனர்.





விழாவில், கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு செயலாளர் அஸீஸின் பணி நினைவாக வெளியிடப்பட்ட 'நதி நடந்த பாதை' நினைவு மலர் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனையில் உதுமாலெவ்வை_ ஹதீஜா உம்மா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த அஸீஸ், அட்டாளைச்சேனை அல்முனீறா வித்தியாலயம், அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) என்பனவற்றில் கல்வி பெற்று பேராதனை பல்கலைக்கழக கலை (சிறப்பு) பட்டதாரியானார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் துறையிலும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் பொதுத் துறை நிர்வாகத்திலும் அவர் முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளார்.





சுமார் 06 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றிய அஸீஸ், 1990ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் நியமனம் பெற்று 1990 முதல் 1993ம் ஆண்டு வரை புத்தளம் உதவி அரசாங்க அதிபராகவும், 1993 முதல் 2005 வரையான காலப் பகுதியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அட்டாளைச்சேனை பிரதேச சபையின் விசேட ஆணையாளராக சுமார் 08 வருடங்கள் கடமையாற்றிய அஸீஸ் 2005_2009 வரையான காலப் பகுதியில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.





அதனைத் தொடர்ந்து, கிழகக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்று 2009_2012 ஆண்டு காலப் பகுதியில் பணியாற்றினார். 2012ம் ஆண்டு முதல் இன்று வரை கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராகப் பணியாற்றி வருகின்றார்.

தனது சேவைக்காலத்தில் புலமைப்பரிசில் பெற்று ஜேர்மனி, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, தென் கொரியா, கம்போடியா, இந்தியா, சிங்கப்பூர், ஹொங்ஹொங் போன்ற நாடுகளுக்கும் அவர் சென்றுள்ளார். அரச துறையில் ஆற்றிய பணிகளுக்காக, பல்வேறு அமைப்புகளினால் மக்கள் தொண்டன், அகில இலங்கை சமாதான நீதவான், சாமசிறி, தேசமான்ய, சமூக சேவை சிரோன் மணி, தியாக தீபம் போன்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.அப்துல் நிஸாம் இவ்விழாவில் தனது உரையில் "கிழக்கு மாகாணத்தில் சுமார் ஆறு ஆளுநகள், பல முதலமைச்சர்களின் கீழ் பணியாற்றிய பெருமை செயலாளர் அஸீஸிற்குண்டு.

அந்த வகையில். நீண்டகால சேவையாளரை பாராட்டிக் கௌரவிப்பதற்குத் தீரமானித்த இவ்விழா ஏற்பாட்டுக் குழுவினர் பாராட்டுக்குரியவர்களாவர். பன்முக ஆளுமை, நிர்வாக திறமை கொண்ட அவருக்கு பாராட்டு விழா நடத்துவது சிறந்ததாகும்" என்றார்.

முதலமைச்சின் செயலாளர் அஸீஸ் தனது ஏற்புரையில் "அரச வரையறைகளுக்குட்பட்டு முடிந்தளவு பணிகளை இன, மத, மொழி, பிரதேச, அரசியல் வேறுபாடுகளுக்கப்பால், அனைத்து சமூகத்தினருக்கும் நிறைவேற்றக் கிடைத்ததை பெரும் பேறாகக் கருதுகின்றேன். அந்த மனத் திருப்தியுடன் விரைவில் சேவையிலிருந்து ஓய்வு பெறவுள்ளேன். எனது பணியை பாராட்டிக் கௌரவித்த அட்டாளைச்சேனை பிரதேச மக்களுக்கும், விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

சமயப் பிரமுகர்கள், நிறுவனத் தலைவர்கள், கல்வியியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், அரச, தனியார் நிறுவனங்களின் உயரதிகாரிகள், பிராந்திய முக்கியஸ்தர்கள், இலக்கிய ஆர்வலர்கள், பொது நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் உட்பட அதிகமானோர் விழாவில் கலந்து சிறப்பித்தனர். தேசமானிய யூ.எல்.ஏ.அஸீஸ் அவர்களுக்கு பலர் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவித்தனர்.

**ஐ.எல்.றிஸான்...**
*(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)*
**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# சிறுவர் பாதுகாப்புக்காக மூன்றாண்டுகளாக கரிசனையுடன் உழைக்கும் SCC அமைப்பு

**சிறுவர் பாதுகாப்பு ஒரு தேசிய நெருக்கடியாகும். சொர்க்கமாகத் திகழும் எமது தீவில் ஒவ்வொரு இரண்டு மணித்தியாலத்துக்கும் ஒரு பிள்ளை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றது என்பதை புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுவதுடன், வன்முறைக்கு எதிரான சிறுவர்களின் பாதுகாப்பைப் பொறுத்த வரை, உலகின் மிகவும் பாதுகாப்பற்ற 10% நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது.**

Stop Child Cruelty Trust (SCC) இன் செயற்பாடுகள், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் அரசின் கட்டாயப் பொறுப்பினை நிறைவேற்றவும், சட்டவாக்கத்தில் உள்ள முரண்பாடுகளைத் திருத்துவதற்கு உடனடி தீர்வு நடவடிக்கைகளை எடுக்குமாறும் அரசாங்கத்திற்கு உத்தரவிட்ட, உடல் ரீதியான தண்டனை தொடர்பான உயர்நீதிமன்றத்தின் அண்மைய முக்கிய தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விசேட நிபுணர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

'இருண்ட மரபினை நிறுத்துவோம்!' என்ற ஆரம்பத்துடன், SCC மூன்றாண்டு காலமாக சேவையை தொடருகின்றது என்பதனை உற்சாகத்துடன் குறிப்பிடுகின்றது.

தேசிய பத்திரிகை ஸ்தாபனத்தில், 2021 மார்ச் 5 ஆம் திகதி கொவிட் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் நடைபெற்ற ஊடக மாநாட்டில், SCC இன் ஸ்தாபக தலைவர் டொக்டர் துஷ் விக்ரமநாயக்க, குழந்தைகளைப் பாதுகாக்க விழிப்புணர்வை ஏற்படுத்தியதோடு, கூட்டாக சமூகப் பொறுப்பை ஏற்க பொதுமக்களை வலுவூட்டிய,2020 ஆம் ஆண்டில் #JustSayNo பிரசாரத்தை வெற்றிகரமாக ஆரம்பித்தமையை விளக்கினார்.

'#JustSayNo 'இருண்ட மரபினை நிறுத்துவோம்' என்பது சிறுவர் பாதுகாப்பில் நிபுணத்துவம் கொண்டோருடனான நேரடி செவ்விகள் முதல் ஊடக மாநாடு மற்றும் உடல் மற்றும் உள ரீதியான தண்டனைகளை நிராகரிப்பதன் மூலம் மகிழ்ச்சியான மற்றும் பாதுகாப்பான கல்வியை அங்கீகரிக்கும் பாடசாலை மாணவர்களுடனான வரலாற்று முக்கியத்துவம் கொண்ட விவாதத் தொடர் வரையிலானவற்றை உள்ளடக்கிய தொடர் நிகழ்வுகள்", என்று விக்ரமநாயக்க மேலும் விளக்கினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்கள மொழி திணைக்களத்தின் பேராசிரியர் சரத் விஜேசூரிய, சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன, சமூக செயற்பாட்டாளர் மற்றும் SCC இன் ஆதரவாளர், பூமி ஹரேந்திரன், இளைஞர் விவகார செயற்பாட்டாளர் மற்றும் SCCஇன் இளைஞர் விவகாரங்களுக்கான தூதுவர், ஷைனுஜா இன்பநாதன், இலங்கையின் முன்னாள் திருமதி அழகுராணி மற்றும் சிறுவர் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர் சந்தி அலுவிஹார, கொழும்பு மருத்துவ பீடத்தின் ரொட்டரேக்ட் கழகத்தின் தலைவர் தனுஜா கொட்டவலகெதர ஆகியோர் குழுவின் பேச்சாளர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் முக்கிய தலைப்புகளாக இடம்பெற்றிருந்தவை: உடல் ரீதியான தண்டனை மற்றும் உள ரீதியான துஷ்பிரயோகத்திற்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்திடம் 11 வயது இலங்கை சிறுமி மேற்கொண்ட வரலாற்று ரீதியான முறையீடு மற்றும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை பாராட்டுதல், தேசிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கம் மீதான அழுத்தம் குறித்து செனவிரத்னவும், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஒரு தேசத்தின் பொறுப்புகள் மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கான மரபுரிமை தொடர்பில் பேராசிரியர் விஜேசூரிய, துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு சிறுவர்களுக்கு அவசியமான பாலியல் கல்வி மற்றும் சிறுவர்களை வலுவூட்டல் தொடர்பில் அலுவிஹார , சிறுவரை உரிமைதாரராக அங்கீகரித்தல் தொடர்பில் ஹரேந்திரனும் உரையாற்றியிருந்தனர்.

இந்த புரட்சிகரமான விவாதத் தொடரான 'பரபுரக அபியாச்சனைய', கொட்டவல்கெதரவினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. சிறுவர் பாதுகாப்பில் மாணவர்கள் நேரடியாக பங்கேற்பது இதுவே முதல் முறையாகும். வென்ற அணிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. பேராசிரியர் விஜேசூரிய நேர்மறையான ஒழுங்கு முறைகள் குறித்து எழுதிய புத்தகங்களை நன்கொடையாகவழங்கினார்.துஷ்பிரயோகத்திற்கு ஆளான குழந்தைகளின் 10 விடய ஆய்வுகளின் தொகுப்பை எழுதுவதற்கு சிறந்த பேச்சாளருக்கு SCC மானியம் வழங்கியமை இதன் சிறப்பம்சமாகும்.இந்த ஆய்வு தொகுப்புகள் காலக்கிரமத்தில் SCC இனால் வெளியிடப்படும்.

சிறுவர் பாதுகாப்பில் தெளிவான முற்போக்கான மாற்றங்களை உருவாக்க சிவில் சமூக அமைப்புகளுடன் அரசாங்கம் நெருக்கமாக பணியாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் அதே வேளையில், Stop Child Cruelty Trust எமது எதிர்காலத்தின் உண்மையான பயனாளிகளான குழந்தைகளுக்கான சமத்துவம், நீதி மற்றும் நம்பிக்கையை உறுதி செய்ய அனைத்து பிரஜைகளுக்கும் அழைப்பு விடுத்தது.

மேலதிக விபரங்களை www.stopchildcruelty.com என்ற இணையத்தளத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

## ஜோன்சன் என்ட் ஜோன்சன் தடுப்பூசி

# கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம்செலுத்தப்படுகிறது

### இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே

லோரன்ஸ் செல்வநாயகம்

ஒரு தடுப்பூசியை மட்டுமே பாவிக்கும் வகையில் உபயோகிக்கக் கூடிய ஜோன்சன் என்ட் ஜோன்சன் கொரோனா வைரஸ் தடுப்பூசியை இலங்கைக்கு கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதை சுட்டிக்காட்டியுள்ள இராஜாங்க அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்;

கொரோனா வைரஸ் தடுப்புக்கான பல்வேறு தடுப்பூசிகள் தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. அத்தகைய தடுப்பூசிகளை பதிவு செய்வதற்கு பிரதிநிதி ஒருவர் வேண்டுகோள் விடுக்க வேண்டும். அந்த வகையில் நேற்றைய தினம் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவருடன் அது தொடர்பில் கலந்துரையாடிய போது அவர் பதிவு செய்வதற்கான தகவல்களை அனுப்புமாறு பைஸர் நிறுவனத்திற்கு அறிவித்துள்ளதாக என்னிடம் தெரிவித்தார். அதற்கிணங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களில் 85 அல்லது 90 வீதமானோருக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் 200 பேருக்கும் அதிகமானோருக்கும் பாராளுமன்ற ஊழியர்கள் 98 வீதமான பேருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகளே தற்போது நாட்டில் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த தடுப்பூசியானது இரண்டாவது தடவையும் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் ஏப்ரல் மாதத்தில் இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.(ஸ)

## வெளிநாடுகளில் தடுப்பூசி பெற்று நாடுதிரும்புவோர் குறித்து கவனம்

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பும் இலங்கையர்களின் தனிமைப்படுத்தல் காலத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளது. தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புபவர்களின் தனிமைப்படுத்தல் காலத்தில் வெகு விரைவில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. வெளிநாடுகளில் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டு 14 நாட்களின் பின்னர் நாடு திரும்புபவர்கள் இருப்பார்களாயின் அவர்களை பி.சி.ஆர். பரிசோதனைகளின் பின்னர் வீடுகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் இம்முறை சுகாதார விதிமுறைகளை பின்பற்றாமல் பண்டிகைகளை கொண்டாட முயற்சித்தால் ஏதேனுமொரு முடிவை எடுக்க வேண்டியேற்படும். இது தொடர்பில் நிலைப்பாடுகள் காணப்பட்டால் அறியத்தருமாறு கொவிட்19 தடுப்பிற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேவை ஏற்படின்...

ஏற்பட்டால் மக்களுக்கான பயணக் கட்டுப்பாட்டை விதிக்க நேருமென கொரோனா வைரஸ் தொற்று ஒழிப்புக்கான தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த நத்தார் பண்டிகையோடு தொடர்ந்த விடுமுறையின்போது அதிகளவிலான கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் நாட்டில் இனங்காணப்பட்டனர். கடந்த ஜனவரி பெப்ரவரி மாதங்களில் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதில் அலட்சியம் காட்டி வருவதாகவும் குறிப்பிட்டுள்ள அவர், தேவை ஏற்பட்டால் பயணக் கட்டுப்பாட்டை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை தனிமைப்படுத்தலிற்கான தினங்களில் மாற்றம் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் குறிப்பாக நாடு திரும்பும் இலங்கையர்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் குறைக்கப்படலாம்.

கொரோனா தடுப்பூசிகள் இரண்டையும் பெற்றுக்கொண்டு 14 நாட்களுக்குப் பின்னர் நாடு திரும்புபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படாமல் பிசிஆர் பரிசோதனை ஒன்றை மட்டும் மேற்கொள்ள செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்புவோருக்கு வழங்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தலுதற்கான வழிமுறைகள் மேற்படி மாற்றங்களால் மாறுபடாது. சுற்றுலாத்துறையில் எதிர்நோக்கியுள்ளசிக்கல்கள் தொடர்பில் சுகாதாரத் துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில் எதிர்காலத்தில்செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

நாடு முடக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டாலும் சில சில கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## அசாத் சாலிக்கு மூன்று...

குற்றப்புலனாய்வு திணைக்களம் நேற்று புதன்கிழமை தெரிவித்தது.

அசாத் சாலியிடமிருந்து வாக்குமூலங்கள் பெற்ற பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அவர் கூறினார்.

அசாத் சாலியின் காரில் கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி தொடர்பில் தனியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,மாவனல்லை புத்தர்சிலையை சேதப்படுத்திய விவகாரத்தில் அசாத் சாலிக்கு நேரடியாவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்ப்புகள் இருக்கக்கூடுமென்ற சந்தேகத்தின் பிரகாரமே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவும் நேற்று தெரிவித்துள்ளார். நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

“உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுடன் தொடர்புபட்டுள்ளார் என்ற குற்றச்சாட்டின் பிரகாரமே அசாத் சாலி கைதுசெய்யப்பட்டுள்ளார். மாவனல்லை புத்தர்சிலை உடைப்பு விவகாரத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அசாத் சாலி தொடர்புப்பட்டுள்ளாரென்ற சந்தேகத்தில் அடிப்படையில் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஷரீஆ சட்டம் நாட்டின் பொதுச் சட்டத்திற்கு அப்பால்பட்டதென அவர் அண்மையில் கருத்தொன்றையும் வெளியிட்டுள்ளார். அவ்வாறான கருத்துகள் மத அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பனவாகும். அதனால் நாடு மீண்டும் அடிப்படைவாதத்தை நோக்கி நகரக்கூடும். என்றாலும் புலனாய்வுத்துறையினரின் கோரிக்கையின் பிரகாரம் சட்டமாஅதிபரின் ஊடாகத்தான் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளும் போதுதான் அவருக்கும் பயங்கரவாதத் தாக்குதல்களுக்கும் தொடர்பு உள்ளதா என அறிய முடியும்”என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## தடுப்பூசி ஏற்றிய எவருக்கும்...

பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், 06 இலட்சம் தடுப்பூசிகள் முதல் கட்டமாக இலங்கைக்கு கிடைக்கப்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

தடுப்பூசிகள் ஏற்றப்படுவதால் இரத்த உறைவுகள் அல்லது பக்க விளைவுகள் ஏற்படுவதாக சில செய்திகள் வெளியாகியுள்ளன. அவ்வாறு எவ்வித இரத்த உறைவுகளும் விளைவுகளும் எமது நாட்டில் ஏற்படவில்லை. தடுப்பூசி செலுத்தப்பட்ட பின்னரான மதிப்பீடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. இதில் இரத்த உறைவுகள் ஏற்பட்டுள்ளதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர் பக்க விளைவுகள் வருகின்றனவா? எந்த எந்த தரப்பினருக்கு பக்கவிளைவுகள் வருகின்றன? ஒரே குழுக்களை சேர்ந்தவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படுகின்றனவா? என்ற அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனமும் இந்த தடுப்பூசி தொடர்பில் தமது மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. இதில் இரத்த உறைவுகள் ஏற்படுவதாக கூறப்படவில்லை. ஆகவே, தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ள எவரும் அச்சப்படத்தேவையில்லை.

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வரும் செயற்பாட்டை எஸ்.பி.சி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அத்துடன், சீனாவில் தயாரிக்கப்படும் சைனோபாம் தடுப்பூசிகளுக்கு அனுமதி அளிப்பதற்கான தகவல்களும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபைக்கு அனுப்பட்டுள்ளன. அது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு அறிக்கைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்பதுடன், சீன அரசாங்கத்தால் 06 இலட்சம் சைனோபாம் தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## நான்கு நாட்கள் மட்டும்...

பற்றிய குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மார்ச் 10ஆம் திகதி ஆரம்பமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை மார்ச் 25 மற்றும் 26ஆம் திகதி ஆகிய தினங்களில் தொடர்வதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக தெரிவித்தார். மார்ச் 23ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பாராளுமன்றம் கூடிய பின்னர் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்படும். அன்றையதினம் பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எழுப்பப்படும் 10 கேள்விகளுக்காக இந்நேரம் ஒதுக்கப்படும்.

அதன் பின்னர் முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10வது சரத்தின் கீழ் இறக்குமதி வரி தொடர்பான பிரேரணை, ஏற்றுமதி இறக்குமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஒழுங்குவிதிகள், மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை என்பன விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அன்றையதினம் பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை விவாதமும் இடம்பெறும் என தம்மிக்க தஸநாயக்க குறிப்பிட்டார். மார்ச் 24ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் முற்பகல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்விதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் நடைபெறும்.

## ரவி கருணாநாயக்க, அர்ஜுன்,அலோசியஸ்...

வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29 அல்லது 31ம் திகதி காலகட்டத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் மூவரடங்கிய நீதாய நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்ட மாஅதிபரினால் மேற்படி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சட்ட மாஅதிபரின் இணைப்புச் செயலாளர் சட்டத்தரணி நிஸாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வழக்கில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ் மற்றும் 08 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கில் பிரதிவாதிகளான முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட தரப்பினருக்கு பிணை வழங்குவதா, இல்லையா என்ற தீர்மானத்தை நேற்று மாலை 05 மணிக்கு அறிவிப்பதாக மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நேற்றுக் காலை அறிவித்திருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான தமித் தொட்டவத்த, மஞ்சுள திலகரட்ன மற்றும் மொஹமட் இஸ்ஸதீன் ஆகியோர் முன்னிலையில் நேற்று மேற்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்போது பிரதிவாதிகளுக்கு பிணை வழங்கவேண்டுமென பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதற்கிணங்க முறைப்பாடு தொடர்பில் ஆஜராகியிருந்த சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஹரிப்பிரியா ஜயசுந்தர அதனை கடுமையாக எதிர்த்தது டன் இரு தரப்பினருக்கும் கருத்துக்களையும் பெற்று ஆராய்ந்துள்ள நீதிபதிகள் குழாம் பிணை வழங்குவது தொடர்பான தீர்மானத்தை நேற்று மாலை 05 மணிக்கு வெளியிடுவதாக கால அவகாசம் விடுத்திருந்தது.

அதேவேளை, மத்திய வங்கி பிணை முறி மோசடியுடன் சம்பந்தப்பட்ட முக்கிய பிரதிவாதியான வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், பேப்பச்சுவல் ட்ரெஸரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அஜான் கார்டியா புஞ்சிஹேவா ஆகியோரை நீதிமன்ற உத்தரவுக்கமைய நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகசட்டமாஅதிபர் திணைக்களம் அண்மையில் நீதிமன்றத்திடம் அறிவித்திருந்தது.

## காணி ஆவணங்கள் மீண்டும்...

கொண்டு வர வேண்டுமென கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நேற்று அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அமைச்சரின் பணிப்புரையையடுத்து காணி ஆவணங்கள் அனைத்தும் யாழ்ப்பாணத்திற்கு உடனடியாக நேற்றே எடுத்து வரப்படுவதாக அதிகாரிகள் அமைச்சருக்குத் தெரிவித்தனர்.

கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சி திட்டம் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று (17) நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம். சார்ள்ஸ், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது, காணி தொடர்பான பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டபோது, யாழ்ப்பாணத்திலிருந்து, ஏனைய இரு மாவட்டங்களுக்குமுரிய காணி ஆவணங்கள் அனைத்தும் கடந்த வாரம் இரவோடு இரவாக அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டதாக, அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொலைபேசியூடாக கலந்துரையாடிய அமைச்சர், அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்ட அனைத்து காணி ஆவணங்களையும் உடன் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருமாறு உத்தரவிட்டதுடன், யாழ் மக்கள் எவ்வாறு அநுராதபுரத்திற்குச் சென்று காணி ஆவணங்கள் தொடர்பாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியுமென்றும் கேள்வி எழுப்பினார்.

சில அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகள், மக்கள் மத்தியில் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டதுடன், அனைத்து ஆவணங்களையும் யாழ்ப்பாணத்திற்கு உடனடியாக கொண்டுவருமாறு அனுராதபுரத்திலுள்ள அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து ஏனைய துறை சார்ந்த கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இதன்போது அதிகாரி ஒருவர், அனுராதபுரத்திலிருந்து காணி ஆவனங்கள் எடுத்துவரப்படுவதாக அமைச்சரிடம் தெரிவித்தார்.

## கடந்த கால ஒற்றுமையின்... (03ஆம் பக்கத் தொடர்)

உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்டு 25 ஆண்டு விழாவை முன்னிட்டு QR குறியீட்டுடனான முதலாவது நினைவு முத்திரை தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்னவினால் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் வழங்கப்பட்டதுடன், அவர்களினால் பிரதமர் மற்றும் 1996 உலகக் கிண்ணத்தை வென்ற அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

## வெளிவிவகார அமைச்சர்... (03ஆம் பக்கத் தொடர்)

மார்ச் 23ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் பாகிஸ்தான் தேசிய தினக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் குணவர்தனவுக்கு உயர் ஸ்தானிகர் கட்டாக் இதன்போது அழைப்பு விடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மேடை நாடக... (03ஆம் பக்கத் தொடர்)

இலங்கை கலை மன்றத்தால் வெளியிடப்பட்ட 'கலை இதழ்' மற்றும் 'புத்தர் சிலை நிர்மாணக் கலை' ஆகிய நூல்களின் முதல் பிரதிகள் இலங்கை கலை மன்றத் தலைவர் பேராசிரியர் ஜயசேன கோட்டேகொடவினால் பிரதமருக்கு வழங்கப்பட்டன.

ப்ரேக்ஷா விபத்து மற்றும் மருத்துவ காப்புறுதிகளை வழங்கும் திட்டத்தை குறிக்கும் வகையில் குறியீட்டு ரீதியாக பிரதமரின் கரங்களினால் மேடை நாடக துறையின் சிரேஷ்ட கலைஞர்களுக்கு காப்புறுதி பத்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

## காகிதங்கள் எனக்கூறி... (03ஆம் பக்கத் தொடர்)

விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

இவ்வாறான வாசனைத் திரவியங்களை இறக்குமதி செய்வதற்கு தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையில் முறையாக அனுமதி பெற்றிருக்க வேண்டுமென சுங்க அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தொழிற்சாலை அதிகாரிகளுடன் மேலும் சிலர் சுங்கத் திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## நோர்வூட் பிரதேசபை... (03ஆம் பக்கத் தொடர்)

மூவருக்கு தொற்று உறுதியானதென பொகவந்தலாவ பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இதனையடுத்து இன்று (18) நடைபெறவிருந்த நோர்வூட் பிரதேசசபை மாதாந்த சபையமர்வு பிற்போடப்பட்டுள்ளதுடன் 10 நாட்களுக்கு பிரதேசசபை நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளதாக பிரதேசசபை தலைவர் ரவி குழந்தைவேலு தெரிவித்தார்.

## ஈழம் குறித்து... (03ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் முடிவடைந்த பிறகு தேர்தல் மேடைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தும் மறக்கப்பட்டு விடும். கால காலமாக இவ்வாறான தன்மையே காணப்படுகிறது.

பாரிய போராட்டத்திற்கு மத்தியில் 30 வருட கால சிவில் யுத்தம் நிறைவடைந்துள்ளது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாட்டில் இனியொருபோதும் பிரிவினைவாத செயற்பாடுகள் எவ்வழிகளினாலும் தோற்றம் பெறாது என்றார்.

## பண்டிகை காலத்தில்... (03ஆம் பக்கத் தொடர்)

பொது மக்கள் உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றுவது கட்டாயமாகும்.

பண்டிக்கைக்காலங்களில் மக்கள் எதிர்கால எச்சரிக்கைகள் தொடர்பில் அறிந்துகொண்டு செயற்பட்டால் கொவிட்19 தொற்று பரவுவதை கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தடுப்பூசி போடும்... (03ஆம் பக்கத் தொடர்)

பிரான்ஸ். இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளில் இந்த தடுப்பூசி போடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர்.

உலக சுகாதார நிறுவனம் தனது கோவெக்ஸ் உலகளாவிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் இந்தியா, தென் கொரியாவில் தயாராகிற தடுப்பூசிகளை குறைந்த, நடுத்தர வருமான நாடுகளுக்கு அனுப்புகிறது. அதே நேரத்தில் ஐரோப்பாவில் தயாரிக்கப்படுகின்ற இந்தவகை தடுப்பூசிகளை அனுப்புவதை நிறுத்தியுள்ளது. இது முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்று உலக சுகாதார நிறுவனத்தின் உதவி தலைமை பணிப்பாளர் மரியேஞ்சலா சிமாவோ கூறியுள்ளார்.

அஸ்ட்ரா செனேகா தடுப்பூசியால் எழுந்துள்ள பிரச்சினையால் உலகளாவிய தடுப்பூசி திட்டம் பாதிக்கப்படவில்லையென்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

இதையொட்டி உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டாக்டர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ், ஜெனீவாவில் நிருபர்களிடம் தெரிவிக்கையில், “இந்த நிகழ்வுகளெல்லாம் தடுப்பூசிகளுடன் இணைந்தவை என்று அர்த்தம் கொள்ளத்தேவையில்லை. பிரச்சினையென வருகிறபோது அதன்மீது விசாரணை நடத்துவது என்பது வழக்கமான நடைமுறை. இது கண்காணிப்பு அமைப்பு வேலை செய்கிறது, பயனுள்ள கட்டுப்பாடுகள் உள்ளன என்பதையே காட்டுகிறது” என குறிப்பிட்டார்.

உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானியான டாக்டர் சௌமியா சுவாமிநாதன் கூறுகையில், “உலகமெங்கும் 30 கோடி தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. அவற்றினால் ஒருவருக்கு கூட மரணம் நேரிட்டதாக ஆவணப்படுத்தப்படவில்லை. அஸ்ட்ரா செனேகா தடுப்பூசி போட்டதால் இரத்தம் உறைவதாக கூறப்பட்டதில், உண்மையில் நீங்கள் எதிர்பார்ப்பதை விட குறைவான விகிதத்தில்தான் நேர்ந்துள்ளது” என தெரிவித்தார்.

## மஸ்கெலியா குயின்ஸ்லேன்...

நேற்று (17) பிற்பகல் 02 மணியளவிலே இந் தீ விபத்து இடம்பெற்றுள்ளது. தீப் பரவலை தோட்ட பொது மக்களும் நிர்வாகமும் இராணுவம் மற்றும் பொலிஸாருடன் இணைந்து கடும் பிரயத்தனத்திக்கு மத்தியில் சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த போதும் குடியிருப்புகளில் இருந்த அத்தியவசிய பொருட்கள், ஆடைகள், மற்றும் ஆவணங்கள் என்பன எரிந்து நாசமாகியுள்ளன.

## சிறைக்குள் சிக்கிய ரஞ்சனின்...

யாரோ ஒரு நபருக்கு ஈசி கேஷ் ஊடாக 05 இலட்சம் ரூபாய் பணம் செலுத்தி அதனை அவர் பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு குற்ற விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றம் உறுதி செய்யப்பட்டால் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிறைச்சாலை சட்டமூலத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றில்...

இப் போராட்டம், யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவிலிருந்து பேரணியாக, சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்புப் போராட்டம் நடைபெறும் நல்லை ஆதீனம் முன்பாக நிறைவடைந்தது. போராட்டத்தில், வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், சிவில் சமூகத்தினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கட்சியினர் உட்பட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

# உமா ஓயா அபிவிருத்திட்டம்; சேதமடைந்த 8,738 வீடுகளில் 602க்கு மட்டுமே இழப்பீடுகள் வழங்கப்படவுள்ளன



**பதுளை தினகரன் விசேட நிருபர்**

உமா ஓயா அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் பல்வேறு வகைகளில் சேதமடைந்த 8,738 வீடுகளில், 602 வீடுகளுக்கு மட்டுமே இழப்பீடுகள் வழங்கப்பட விருப்பதாகவும், ஏனையோருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இவ் விடயம் குறித்து, அமைச்சரவைப் பத்திரமொன்றை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்க விருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அவ் விடயம் தொடர்பில் அவர் தொடர்ந்து பேசுகையில்,.... உமா ஓயா அபிவிருத்தித் திட்டத்தினால் வசிப்பிட, வாழ்வாதார காணிகளை இழந்தவர்களுக்கு எல்ல பிரதேச செயலகப் பிரிவில் திக்கராவை தோட்டத்தில் நான்கு ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இக் காணியில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், பண்டாரவளை பிரதேச செயலகப் பிரிவில் மல்வத்தவெளி பிளான்டேசன் பொறுப்பிலுள்ள பெருந்தோட்டத்தில் 10 ஏக்கர் காணியும் சுவீகரிக்கப்படவுள்ளது.

உமா ஓயா அபிவிருத்தி திட்டத்தில் சேதமடைந்த வீடுகள் 8,738 வீடுகளாகும். இவற்றில் 8,136 வீடுகளுக்கு இழப்பீடுகள், அரசினால் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் 602 வீடுகளுக்கே இழப்பீடுகள் வழங்கப்படாமலுள்ளன. இவற்றில் 390 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன என்று கூறினார்.

# காணி உரிமத்தில் செல்வந்தர்களுக்கு சார்பான செயற்பாடுகள்; உடந்தையான அரச ஊழியர்களுக்கு சட்ட நடவடிக்கை

**மத்திய மாகாண ஆளுநர்**

**எம்.ஏ.அமீனுல்லா**

காணிகளின் சட்டரீதியான உரிமத்தைப் பெறாமல்,செல்வந்தர்களுக்கு தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள சில அரச ஊழியர்கள் உடந்தையாக இருந்துள்ளதாகவும் இவர்களுக்கு எதிராக கடுமையான முறையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

அரசினால் குறை வருமானம் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் சட்டரீதியான உரிமத்தைப் பெறாமல்,செல்வந்தர்கள் அதன் ஆட்சியை அனுபவித்து வருவதாகவும் அவர் கூறினார். மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் இவ்வாறு 250 காணிகள் உள்ளதாகவும் ஆளுநர் தெரிவித்தார். பட்டதாரிகளுக்கு அரச தொழிலுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் (15) கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

**வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்**

**உயிரியல் மருத்துவ பொறியியல் அலகிற்காக பற் சிகிச்சை உபகரண உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் – 2021**

வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ்க்காணும் பொருட்களை வழங்குவதற்காக வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரான என்னால் 2021.04.07 மு.ப.10.00 வரை தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| தொடர் இல | இணைப் பிலக்கம் | தேவைப்படும் உபகரணம் | கேள்விப் பத்திரக் கட்டணம் (ரு) | 91 நாட்கள் செல்லுபடியாகும் கேள்விப் பிணையின் பெறுமதி (ரு) |
|---|---|---|---|---|
| 01 | PDHS/ F4/2021/P/03 | பற் சிகிச்சை உபகரண உதிரிப்பாகங்கள் | 3000.00 | 50,000.00 |

02. அங்கீகரிக்கப்பட்ட வியாபார பெயர்பதிவுச் சான்றிதழ் உரித்துடைய உள்ளூர் முகவர் நிறுவனங்கள் இக் கேள்வியை சமர்ப்பிப்பதற்காக தகைமை பெறுவர் இக் கொள்வனவிற்கு எதிர்பார்க்கின்ற பொருட்கள் பற்றிய முழுமையான விபரங்கள் மற்றும் மாதிரிகள் வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல-025-2050718/025-2223790)
03. மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை செலுத்தி மற்றும் வியாபார பெயர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்த பின்னர் பெறுகை ஆவணங்களை அநுராதபுரம் வடமத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் 2021.03.18 முதல் 2021.04.06 வரை அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00) பெற்றுக் கொள்ள முடிவதுடன், அங்கு கட்டணங்கள் இன்றி குறித்த பெறுகை ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாக முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2021.04.07 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்தை அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் கையோடு கொண்டு வந்து உள்ளிடல் வேண்டும்.
05. கேள்விகள் இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்படுவதுடன், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக வேறு வேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் மீண்டும் ஒரு உறையில் உள்ளிடல் வேண்டும். கடித உறையில் "உயிரியல் மருத்துவ பொறியியல் அலகிற்கு பற் சிகிச்சை உபகரண, உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல் 2021" என்று வேறுவேறாக குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
06. 2021.04.07 மு.ப.10.00 இற்கு கேள்வி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன், அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
07. கேள்விப் பிணைமுறி மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 2021..04.07 முதல் 105 நாட்கள் (2021.04.07 முதல் 2021.07.22 வரை) செல்லுபடியாகும் வங்கிப் பிணையின் மூலம் அல்லது மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்/மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வ.ம.மா**
**பண்டாரநாயக்க மாவத்த, அநுராதபுரம்**
**2021.03.16.**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**

வர்த்தக அமைச்சு

**2021ஆம் வருடத்தில்**

## பாதுகாப்பாக அரிசித் தொகைகளை களஞ்சியப்படுத்திக் கொள்வதற்காக வழங்குநர்களின் ஆர்வத்தைக் கோருதல்

பாதுகாப்பாக அரிசியைக் களஞ்சியப்படுத்தும் நோக்குடன் **2021ஆம் வருடம் மார்ச் மாதம் 18ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையில்** வழங்குநர்களின் ஆர்வத்தைக் கோருவதற்கு கௌரவ அமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் வர்த்தக அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த அரிசித் தொகைகளை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரித்தான களஞ்சிய கட்டிடத்தொகுதியில் பொதி செய்து கூட்டுறவு மற்றும் சதொச விற்பனை நிலைய வலையப்பினூடாக பாவனையாளர்களுக்கு நிவாரண விலையில் வழங்குவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வழங்குநர்கள் பின்வரும் வகையில் தம்மால் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை தயாரித்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக **''அரிசியை சேகரித்து வைப்பதற்கான ஆர்வத்தைக் கோருதல்''** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

I. விண்ணப்பதாரரின் முழுப் பெயர்:
II. நிறுவனத்தின் / கம்பனியின் பெயர்:
III. நிறுவனத்தின் பதிவிலக்கம்:
IV. முகவரி:
V. தொலைபேசி இலக்கம் - கையடக்கத் தொலைபேசி இலக்கம் / அலுவலக தொலைபேசி இலக்கம் / தொலைநகல் இலக்கம்:
VI . மின்னஞ்சல் முகவரி:
VII. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
VIII. ஆர்வத்தைச் சமர்ப்பிக்கும் அரிசி வகை
- சம்பா
- நாடு அளவு மற்றும் விலைகளை உள்ளடக்கிய பிரேரணை:

IX. நீங்கள் அரிசி ஆலை / களஞ்சியசாலை உரிமையாளரானால் இயைபுடைய அரிசி ஆலையின் கொள்ளளவு மற்றும் அதன் முகவரி

விண்ணப்பதாரர்களினால் சுயமாகத் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தை **2021-03-31ஆம் திகதி** அல்லது அதற்கு முன் **கொழும்பு-02, வொக்ஷோல் வீதி, சதொச பொதுச் செயலகக் கட்டிடத்தின் 05ஆம் மாடியிலுள்ள மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) அவர்களுக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.**

நிர்ணயிக்கப்பட்ட தினத்தில் கிடைக்கப்பெறும் பிரேரணைகளுடனான விண்ணப்பங்கள் **2021-04-01ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு** மேற்படி முகவரியிலுள்ள சதொச பொது செயலக அலுவலகக் கட்டிடத்தின் 09ஆம் மாடியில் திறக்கப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விண்ணப்பதாரிகளினால் விலைகள் வழங்கப்படும்போது குறித்த அரிசித் தொகையின் மாதிரியொன்றை நேர்முகப் பரீட்சைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் வர்த்தக அமைச்சினால் விதிக்கப்படும் எழுத்துமூல நிபந்தனைகளுக்கு அமைவாகவிருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை - உதவிச் செயலாளர் (நிர்வாகம்) 0112304078 / 0762566047 அவர்களிடம் பெற்றக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வர்த்தக அமைச்சு,**
**7ஆம் மாடி, இல. 27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்,**
**வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**

திகதி: 2021-03-18.

**16.03.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 768,238**
**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 32,524,240.00**
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 03 ரூ. 100,000.00 பரிசுகள் 31
www.nlb.lk
NLB NATIONAL LOTTERIES

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 4428 உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 16-03-2021
வெற்றி எழுத்து K வெற்றி இலக்கங்கள் 1 5 0 7 6 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 150762 | ரூபா 2,000,000/- | 01 |
| 2ஆம் பரிசு | 50762 | ரூபா 100,000/- | 14 |
| 3ஆம் பரிசு | 0762 | ரூபா 10,000/- | 132 |
| 4ஆம் பரிசு | 762 | ரூபா 1,000/- | 1,329 |
| 5ஆம் பரிசு | 62 | ரூபா 100/- | 13,307 |
| 6ஆம் பரிசு | 2 | ரூபா 20/- | 131,928 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 15076 | ரூபா 10,000/- | 12 |
| 8ஆம் பரிசு | 1507 | ரூபா 1,000/- | 135 |
| 9ஆம் பரிசு | 150 | ரூபா 100/- | 1,338 |
| 10ஆம் பரிசு | 15 | ரூபா 50/- | 13,220 |
| 11ஆம் பரிசு | K | ரூபா 20/- | 52,848 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 12,125,020.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,263,152.00
NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை www.nlb.lk

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 2723 சீட்டிழுப்பு திகதி 16 / 03 / 2021
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 37 44 55 64

| | பரிசு கட்டமைப்பு | பரிசுத்தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ.1,000,000.00 | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100,000.00 | 08 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000.00 | 200 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000.00 | 398 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100.00 | 10,292 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூ. 40.00 | 6,818 |
| 7 பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20.00 | 170,320 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20.00 | 31,057 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றயாளர்களின் எண்ணிக்கை 219,094
இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத்தொகை ரூ. 7,927,460.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,087,274.80
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD இல 32 தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை கொழும்பு 01 தொலைபேசி : 0114 607 000, 0112 324 324 Fax: 0114 663 416 Web: www.nlb.lk

**சுபிரி வாசனா** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1583
சுப்பர் இலக்கம் 02 வெற்றி இலக்கங்கள் 20 26 47 55

| | | | |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | - |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 136 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 396 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 5,593 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 4,865 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 68,219 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 16,441 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 2,959,600.00
வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சத்திக்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,089,825.20
இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01. Phone : 0114 607 000, 0112 324 324 Fax : 0114 663 416 Web : www.nlb.lk

**Mega POWER** சீட்டிழுப்பு இலக்கம்: 791 உத்தியோகபூர்வ முடிவுகள் திகதி: 16.03.2021
ஆங்கில எழுத்து F சுப்பர் இலக்கம் 05 வெற்றி இலக்கங்கள் 13 20 75 76

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 07 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 123 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 227 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 5,677 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 3,737 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 92,592 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 16,976 |

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 122,926,462.80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 20,938,204.80 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 4,845,040.00
தேசிய லொத்தர் சபை

**தன நிதானய** உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி - 16/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் - 465
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 16 33 36 47

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 01 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 02 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 91 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 208 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 5,571 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 3,722 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 92,912 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 17,373 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 4,667,120.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 119,880
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 88,222,590.80
• ரூபா. 5 இலட்சம் அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
• பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
• சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை மஹமோதர

காலி மஹமோதர போதனா வைத்தியசாலையில் 2021/2022ஆம் வருடத்தில் வளிச் சீராக்கி இயந்திரங்களுக்கான சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகளை நடாத்திக் கொண்டு செல்வதற்காக வளிச் சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தகைமை வாய்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 2021-04-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விமைனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இயைபுடைய மாதிரிப் படிவங்களை 500.00 ரூபா செலுத்தி வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் 2021-04-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் ''வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தலுக்கான விலைமனு'' எனக் குறிப்பிட்டு "தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி'' என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்.**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, மஹமோதர,**
**காலி.**
091-2222261

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**மொஸ்ட்ரா (பீவீடீ) எல்டீடி**
பதிவிலக்கம்: PV 00234173
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
03.02.2021
பதிவு முகவரி:
**இல. 34/3, கொட்டாவ வீதி, மாவித்தர, பிலியந்தலை.**

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட பொறுப்பு வாய்ந்த கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**நேச்சர் பிக் சின்னமன் (பிரைவட்) லிமிட்டட்**
பதிவிலக்கம்:
PV 00235325
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
2021.02.22
பதிவு முகவரி:
**இல. 9/1, சிரிமங்கல மாவத்த, வல்பல, மாத்தறை.**

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
AVAILABLE AT
App Store Google play Windows Store

LAKE HOUSE

# பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

**பன்னல மற்றும் வகவத்த எஸ்போல்ட் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் எஸ்போல்ட் போக்குவரத்து செய்வதற்காக 03/05 கியூப் அளவான டிப்பர் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு தேவையான டிப்பர் வண்டிகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்**

அதிகார சபைக்கு சொந்தமான பன்னல/வகவத்த எஸ்போல்ட் உற்பத்தி களஞ்சியங்களில் உற்பத்தி செய்யப்படும் எஸ்போல்ட் போக்குவரத்து செய்வதற்காக 03/05 கியூப் அளவான டிப்பர் மற்றும் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்திற்கு தேவையான டிப்பர் வண்டிகளை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் சார்பாக டிப்பர் வண்டி வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி சுருக்கம்

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு M3 | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வெட் வரி இன்றி) | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக | வங்கி/காப்புறுதி பிணை மூலம் |
| வகவத்த எஸ்போல்ட் உற்பத்தி நிலையத்திற்கு | | | | | |
| PRDA/WP/PRO/2021/09 | 03/05 கியூப் அளவிலான டிப்பர் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | | ரூ.2,000.00 | ரூ.20,000.00 | - |
| பன்னல எஸ்போல்ட் உற்பத்தி நிலையத்திற்கு | | | | | |
| PRDA/WP/PRO/2021/10 | 03/05 கியூப் அளவிலான டிப்பர் வண்டி வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல் | | ரூ.2,000.00 | ரூ.20,000.00 | - |
| ஹொரண, மொறட்டுவ, நிட்டம்புவ, அவிசாவளை, உடுகம்பொல நி.பொ.அ. களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வாடகை அடிப்படையில் லொறி/டிப்பர் வண்டிகளை பெற்றுக்கொள்ளல் | | | | | |
| PRDA/WP/PRO/2021/13 | ஹொரண, மொறட்டுவ, நிட்டம்புவ, அவிசாவளை, உடுகம்பொல நி. பொ.அ. களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு வாடகை அடிப்படையில் லொறி/டிப்பர் வண்டிகளை பெற்றுக்கொள்ளல் | | ரூ.1,000.00 | ரூ.10,000.00 | - |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2021.03.18 முதல் 2021.03.31 மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு (அதிகார சபையின் லொறி வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

இதற்கான கேள்விப்பிணையை காசாக அல்லது வங்கிப் பிணைமூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2021.04.01 பி.ப 2.30இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல.59, செ.செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**
**தொ.பே இல- 0115676903**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## போக்குவரத்து அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள்

# கொழும்பு புறநகர் புகையிரத வினைத்திறன் மேம்படுத்தல் செயற்றிட்டம் (CSREIP)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**திகதி:** 2021-03-18
**கடனிலக்கம்:** ADB Loan No.: SRI P 3806
**ஒப்பந்த இல.** REIP/ADB/ICB/G/11

**இலங்கை புகையிரத சேவைக்கு 400-500 Ton Meter Capacity Railway Hydraulic Mobile Crane இயந்திரத்தை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், வழங்குதல், நிறுவுதல், பாவனைக்காக தயார்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தலுக்கான பெறுகை**

**விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி: 2021.05.25 ஆம் திகதி பி.ப. 2.00 மணி (இலங்கை நேரம்)**

1. புகையிரத வினைத்திறன் மேம்படுத்தல் செயற்றிட்டத்திட்ட (REIP) ஆகுசெலவிற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடனொன்றிற்காக இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது விண்ணப்பித்துள்ளது. இக்கடனின் பகுதியொன்று மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்திற்கான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிக்கப்படும்.

2. பின்வரும் ஒப்பந்தப் பொதிக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து போக்குவரத்து அமைச்சு/ இலங்கை புகையிரத சேவைகள் (''தொழில் வழங்குநர்'') முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றது.

| விலைக்கோரல் இலக்கம் | ஒப்பந்த தலைப்பு | அமைவிடம் | காலப்பகுதி (மாதங்களில்) |
|---|---|---|---|
| REIP/ADB/ICB/G/11 | இலங்கை புகையிரத சேவைக்கு 400-500 Ton Meter Capacity Railway Hydraulic Mobile Crane இயந்திரத்தை வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், வழங்குதல், நிறுவுதல், பாவனைக்காக தயார்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தலுக்கான பெறுகை | இலங்கை. | 15 |

3. விலைக்கோரல்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகவல் தொழில்நுட்ப பெறுகையின் தனி-உறை இரு-தபாலுறைகள் (Single Stage: Two-Envelope) விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படும். (ஆசிய பெறுகை வழிகாட்டி 2.6)

4. விலைமனுதாரர் பின்வரும் தகவுத்திறனை பூர்த்தி செய்தல் வேண்டும்.

(i) Pending Litigation விலைமனுதாரரின் தேறிய பெறுமதியில் 50% இற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ii) கடந்த 3 வருடங்களில் விலைமனுதாரரின் தேறிய பெறுமதியானது சாதகமாகவிருத்தல் வேண்டும்.

(iii) கடந்த மூன்று (3) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வு 3.6 மில்லியன் அ.ஐ. டொலர்களாகவிருத்தல் வேண்டும்.

(iv) பிரதான செயற்பாடுகளான (i) நிகரான ஒப்பந்த ரீதியிலான அனுபவம் (ii) தொழில்நுட்ப அனுபவம் ஆகியவற்றில் அனுபவமிருத்தல் வேண்டும். மேற்படி தகவுத்திறன் (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவுத் திறன் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு https://csrp.lk/procurement என்ற செயற்றிட்டத்தின் இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும். மற்றும் 0094-112056240-41 (நீடிப்பு 301-302) என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

5. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2021-03-18ஆம் திகதி முதல் 2021-05-25ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் பின்வரும் முகவரியில் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**செயற்றிட்ட முகாமைத்துவ அலகு,**
**கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்டம் (CSRP),**
**இல.: 217, கொட்டா வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**
**தொலைபேசி: 0094-112056240-41.**
**தொலைநகல்: 0094-112674354.**
**மின்னஞ்சல்: pd@csrp.lk அல்லது palitha.rail@yahoo.com**
**இணையதளம்: www.csro.lk**

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், மீளளிக்கப்படாத 40,000.00 ரூபா அல்லது 225.00 ஐ.அ.டொ (வரிகள் உட்பட) தொகையை ரொக்கப் பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் செலுத்தியதன் பின் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியின் செயற்றிட்ட பணிப்பாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 2021-03-18ஆம் திகதி முதல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மற்றும் நேரம் வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

7. விலைமனு ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள பெறுமதியிலான விலைக்கோரல் பிணை முறியொன்று சகிதம் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை, விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் அல்லது அதற்கு முன் (2021-05-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி) கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுப் பிணை முறிக்குச் சமமான தொகை பெறுமதியை தீர்வை செய்வதற்காக விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு 28 நாட்களுக்கு முன்னதாக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட வெளிநாட்டு பண விற்பனை விலை விகிதாசாரத்திற்கு ஏற்புடையதாக்கப்படும்.

8. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கலந்துகொள்ள விரும்பும் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

9. பத்தரமுல்ல, ''செத்சிரிபாய'', IIஆம் கட்ட, 7ஆம் மாடியின் போக்குவரத்து அமைச்சின் கேட்போர்கூடத்தில் 2021-04-09ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தமது சொந்தச் செலவில் இதில் கலந்துகொள்ளலாம்.

9. தொழில்நுட்ப விலைமனுக்கள் இறுதித் திகதிக்கு பின்னர் உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

10. விலைமனுதாரர் அவரது விலைமனுக்களின் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பான அனைத்து கிரயச் செலவுகளையும் பொறுப்பேற்றல் வேண்டும் என்பதுடன் தொழில் வழங்குநரானவர் விலைமனுக்கோரல் செயற்பாட்டின் நடாத்தல் அல்லது பெறுபேறு ஆகியவற்றை கருத்தில் கொள்ளாமல் அவ்வாறான கிரயத்திற்கான பொறுப்பை அல்லது கடப்பாட்டை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து அமைச்சு,**
**7ஆம் மாடி, ''செத்சிரிபாய'', II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல, இலங்கை.**

## மத்திய மாகாண சபை

# கேள்விகளுக்கான அழைப்பு
# நிர்மாணங்கள்

## நிதியளிப்பு - ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் செயற்றிட்டம்

சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு

01. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்காக மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021-02-18ஆம் திகதிய அரசாங்க 4/2016(ii) பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமைளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

03. கேள்விக்கு இயைபான மேலதிகத் தகவல்களை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளரிடமிருந்து அல்லது கண்டி எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (சுகாதாரக் கட்டிடங்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. முறையாக 081-2232620 மற்றும் 081-2210624 ஆகும்)

04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணத்தை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சின் பிரதான கணக்காளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அமைச்சின் கணக்குப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2021-02-18ஆம் திகதி முதல் 2021-04-07ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. முறையாகப் பூரணப்படுத்தி, முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2021-04-06ஆம் திகதி திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ. இல. 121 இல் அமைந்துள்ள சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் பெறுகைக் குழுத் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விகளையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான இரு உறைகளில் இட்டு மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

07. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்ததும் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் 2021-06-24ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், இலங்கை காப்புறுதிச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில், நிர்மாணப் பாதுகாப்பு நிதியம் அல்லது மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியைக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை கேள்விகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் மத்திய மாகாண சுகாதார அமைச்சின் சிறாப்பருக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை கேள்விப் பிணையாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த பிணை முறிகள் 2021-07-28ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

09. இந்தக் கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று 2021-04-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்திய மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சில் இடம்பெறும்.

10. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| செயற்றிட்ட இல. | செயற்றிட்டத்தின் பெயர் | CIDA பதிவு | கேள்விப் படிவக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | | பொறியியல் மதிப்பீடு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | | | பணமாக (ரூபா) | பணமாக அல்லாமல் (ரூபா) | |
| மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | | | | | | |
| 01 | ஜம்புகஹபிட்டிய பிரதேச வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் நிறுத்தகம் மற்றும் ஓய்வு அறையை நிர்மாணித்தல் மற்றும் சுவதிவி சிகிச்சையகத்தின் திருத்தவேலைகள் | C 6 – C 5 | 1,500.00 | 169,400.00 | 84,700.00 | 8,471,163.36 |
| 02 | கடுகண்ணாவ பிரதேச வைத்தியசாலையின் பிரசவ வார்ட் மற்றும் சுவதிவி சிகிச்சையகத்தின் திருத்தவேலைகள் | C 6 – C 5 | 3,500.00 | 173,700.00 | 86,850.00 | 8,087,230.92 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகாதாரம், சுதேச வைத்தியம், சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் அமைச்சு,**
**மத்திய மாகாணம்,**
**த. பெ. இல. 121, சங்கராஜ மாவத்தை,**
**கண்டி.**








# மஸ்கெலிய ராணித்தோட்டத்தில் லயன் குடியிருப்பில் திடீர் தீ விபத்து

**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

### 24 குடும்பங்கள் நிர்க்கதி

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட (குயின்ஸ்லேன் ) ராணித்தோட்டத்தில் லயன் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 20 குடியிருப்புகள் எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று 17.03.2021 பிற்பகல் 2 மணியளவிலே இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

தீ பரவலை தோட்ட பொதுமக்களும் நிர்வாகமும் இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து கடும் பிரயத்தனத்துக்கு மத்தியில் சுமார் மூன்று மணித்தியாலங்களின் பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருந்தபோதும் குடியிருப்புகளில் இருந்த அத்தியாவசிய பொருட்கள், ஆடைகள், மற்றும் ஆவணங்கள், என்பன எரிந்து நாசமாகியுள்ளன. தீ விபத்துக்குள்ளான லயன் தொகுதியில் 24 குடும்பங்களை சேர்ந்த 80 பேர் வரை தங்கியிருந்துள்ளனர். இவர்கள் தற்பாதே நிர்கதிக்குள்ளாகியுள்ளதுடன் அவர்களை குயின்ஸ்லேன் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாக தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என மஸ்கெலிய பொலிஸார் தெரிவித்தனர். மின்சார



கோளாறு காரணமாக தீ பற்றி இருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

# பதுளை பொலிஸ் நிலையத்தில் 6 அதிகாரிகளுக்கு கொரோனா

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளை பொலிஸ் நிலையத்தில், ஆறு பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் டி.டபிள்யு. பியல் பத்ம தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகள், மேற்படி அறுவருக்கு தென்பட்டதினால், அவர்களுக்கு என்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன, இதனையடுத்து அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக தெரியவந்துள்ளதாக பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

பொலிஸாருக்கான பதவி உயர்வு தொடர்பாக, அவர்களுக்கு விசேட பயிற்சிப் பாடநெறிகள் தற்போது பதுளைப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இப் பாடநெறிகளை மேற்கொண்டிருக்கும் ஆறு பொலிஸாருக்கு தடிமன் மற்றும் காய்ச்சல் ஏற்பட்டிருந்தமையினால், சந்தேகத்தின் பேரில், அவர்களுக்கு என்டிஜன் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டன.

அதன் அறிக்கைக்கமைய கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை, பதுளைப் பொலிஸ் நிலைய சிரேஸ்ட பொலிஸ் அதிபர் வசந்த கந்தவத்தை உறுதிப்படுத்தினார்.

பதுளை மாவட்டத்தின் பதுளை, மடுல்சீமை, மகியங்கனை, ரிதிமாலியத்தை மற்றும் கிராந்துருகோட்டை ஆகிய பொலிஸ் நிலையங்களின் தெரிவு செய்யப்பட்ட பொலிஸார்,

மேற்படி பதவி உயர்வுக்கான பாடநெறிகளை தற்போது பதுளை பொலிஸ் நிலைய பயிற்சிக் கூடத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்று உறுதியான ஆறு பொலிஸார், பிந்துனுவெவ கொரோனா வைரஸ் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் பயிற்சி பாடநெறிகளை மேற்கொண்டிருக்கும் ஏனைய பொலிஸாருக்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களுக்கும் என்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், பதுளை மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் டி.டபிள்யு. பியல் பத்ம மேலும் தெரிவித்தார்.

### ரூ.1000 சம்பள விவகாரம்

# அரசாங்கத்தின் தீர்மானத்தை கம்பனிகள் சவாலுக்குட்படுத்தியுள்ளன

**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

1000 ரூபா சம்பள விடயம் தொடர்பில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை கம்பனிகள் சவாலுக்குட்படுத்தியுள்ளதாக அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்ணன் செல்வராஜ் தெரிவித்தார்.

பண்டாரவளையில் நேற்று (17.03.2021) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" தமக்கு அடிப்படை நாட் சம்பளமாக ஆயிரம் ரூபா வேண்டும் என 2015 ஆம் ஆண்டிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வலியுறுத்திவருகின்



றனர். எனினும், இதற்கு தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவிக்கவில்லை. இறுதியில் சம்பள நிர்ணய சபை ஊடாக சம்பளத்தை நிர்ணயிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதற்கும் கம்பனிகள் எதிர்ப்பை வெளியிட்டன. ஆனாலும் ஆயிரம் ரூபா தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இந்நிலையில் குறித்த வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைக்கு வருவதற்கு தடைவிதிக்குமாறு கோரி கம்பனிகள் நீதிமன்றம் சென்றுள்ளன. சர்வ அதிகாரங்களும் கொண்ட பலம்பொருந்திய அரசால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை கம்பனிகள் சவாலுக்குட்படுத்தியுள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்பது அரசின் உறுதிமொழி. அது எப்படியாவது நிறைவேற்றப்படவேண்டும். எனவே, நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தால் தனது நிலைப்பாடு என்னவென்பதனை அரசாங்கம் அறிவிக்க வேண்டும். அதேபோல் ஆயிரம் ரூபாவை பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

### அடிப்படைச் சம்பளம் ஆயிரம்

# சவாலை சட்டரீதியாகவோ தொழிற்சங்க ரீதியாகவோ எதிர்கொள்ளத் தயார்

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நாட் சம்பளத்தை வழங்க முடியாதென்று நீதிமன்றத்தை நாடியுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளை, சட்ட ரீதியாகவோ தொழிற்சங்க ரீதியாகவோ எதிர்கொள்ள, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவே இருக்கிறதென்று, காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

இது தொடர்பில், ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு, நாட் சம்பளமாக 1,150 ரூபாயை வழங்குவதற்கான பொறிமுறையை முன்வைத்திருக்கிறோம் என்று தெரிவித்திருந்த பெருந்தோட்டக் கம்பனிகள், அத்தொகையைத் தொழிற்சங்கங்கள் தான் ஏற்க மறுக்கின்றன என்ற குற்றச்சாட்டை, தொடர்ந்து ஆறு மாதகாலமாகவே முன்வைத்து வந்தன. எவ்வாறாயினும், 900 ரூபாய் அடிப்படைச் சம்பளத்துடன் 100 ரூபாய் வரவு செலவுத்திட்டக் கொடுப்பனவுடன் ஆயிரம் ரூபாய் மாத்திரமே தற்போது வர்த்தமானியாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கம்பனிகள் முன்வைத்திருந்த பொறிமுறையையும் விடக் குறைந்த சம்பளமே இன்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறிருக்கையில், தற்போது வர்த்தமானியாக்கப்பட்டுள்ள தொகையை, மிகுந்த மகிழ்ச்சியுடன் கம்பனிகள் வழங்க முன்வந்திருக்கலாம். மாறாக அவர்கள் அத்தொகையை வழங்க முடியாதென்று நீதிமன்றத்தை நாடியுள்ளமையானது, கம்பனிகளின் தரக்குறைவான செயற்பாட்டையே எடுத்தியம்புகிறது.

அதுமட்டுமின்றி, 1,150 ரூபாய் நாட் சம்பளத்தை வழங்குவோம் என்று கம்பனிகள் தெரிவித்திருந்தமை பெரும் நாடகம் என்பதும், தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.



எவ்வாறெனினும், 3 மில்லியன் ரூபாயை மாதச் சம்பளமாகப் பெறும் பெருந்தோட்டக் கம்பனியின் தலைமை நிர்வாக அதிகாரிக்கு, தொழிலாளியின் ஆயிரம் ரூபாய்க்கான வேதனை புரிய வாய்ப்பில்லை. இவ்வாறான மனித நேயமற்றவர்களிடம் எமது தொழிலாளர்கள் பணியாற்றும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை எண்ணி வேதனையடைகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினையை சட்டரீதியாக அல்லது தொழிற்சங்க ரீதியாக எதிர்கொள்ளவோ இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எப்போதும் தயாராகவே இருக்கின்றது என்றும், செந்தில் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார்.

### இரத்தனபுரியில் மாணவன் துஷ்பிரயோகம்;

# செந்தில் தொண்டமானின் தலையீட்டால் பாடசாலை அதிபர் இடைநிறுத்தம்

இரத்தினபுரி, பலாங்கொடை கல்வி வலயத்துக்குட்பட்ட ஓபநாயக்க பகுதியிலுள்ள பிரபல தமிழ் பாடசாலையொன்றில் 10 ஆம் வகுப்பு மாணவர் ஒருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய அதிபர் செந்தில் தொண்டமானின் தலையீட்டால் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடொன்று பதியப்பட்டுள்ளதுடன், அதிபரை உடனடியாக பதவி நீக்குமாறு கோரி, பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர். இதையடுத்து, குறித்த அதிபர் ஓபநாயக்க பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு, பலாங்கொடை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு சரீரப்பிணையில் விடுதலைச் செய்யப்பட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் இ.தொ.காவின் பலாங்கொடை அமைப்பாளர் ரூபன் பெருமாள் இ.தொ.காவின் உபத் தலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமானின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்து மாகாண பணிப்பாளர் குருப்பு ஆராய்ச்சியுடன் கலந்துரையாடி உடனடியாக அதிபரை பணி இடைநிறுத்தம் செய்ய செந்தில் தொண்டமான் நடவடிக்கையெடுத்தார்.

இதேவேளை, செந்தில் தொண்டமானின் ஆலோசனையின் பேரில் சம்பவம் தொடர்பில் மாகாண கல்வி அதிகாரிகள் குழுவொன்றை நியமித்து விசாரணைகளை நடத்த தீர்மானித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### மத்திய மாகாணத்தில்

# மாதாந்தம் 22 இலட்சம் கன மீற்றர் குழாய் நீர் விரயம்

### உதவிப் பொது முகாமையாளர்

**(எம்.ஏ.அமீனுல்லா, அக்குறணை குறூப் நிருபர்)**

நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபையால் விநியோகிக்கப்படும் நீரில் மத்திய மாகாணத்தில் மாதம் தோறும் சுமார் 22 இலட்சம் கன மீற்றர் குழாய் நீர் வீணாகுவதாக உதவிப் பொது முகாமையாளர் ஜே.எச். மீகொட தெரிவித்தார்.

கண்டி, கெட்டம்பே நீர் வழங்கல் மத்திய நிலைய காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது

மத்திய மாகாணத்தில் நீர் விநியோக வடிகால் அமைப்பு சபையினால் விநியோகிக்கப்படும் குழாய் நீரில் சுமார் 25 சதவீதம் வீண் விரயமாவதாகவும், அதனை 15 சதவீதமாக குறைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். மத்திய மாகாணத்தில் மட்டும் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகால் அமைப்பு சபையால் விநியோகிக்கப்படும் நீரில் மாதாந்தம் சுமார் 22 இலட்சம் கன மீற்றர் குழாய் நீர் விரயமாகின்றது.

கடந்த மாதத்தில் மத்திய மாகாணத்தில் 7286027 கன மீற்றர் நீர் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், அதில் 5085479 கன மீற்றர் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீர் வடிகால் அமைப்பு சபையால் வினியோகிக்கப்படும் நீர் பிரதான குழாய் வழியாகச் சென்று வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் நீரை அளவீட்டு மீட்டரை அடைவதற்கு முன்பு பாதிவழியில் வீணடிக்கப்படுகிறது.


அதனால் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு செல்ல முன்



வீணாகும் நீர் இந்த கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை. மத்திய மாகாணத்தில் நீர் விநியோக சபையினால் விநியோகிக்கப்படும் குழாய் நீரில் சுமார் 25% வீணடிக்கப்படுகின்றது, எனவே இதை 15% ஆகக் குறைக்க ஒரு திட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

1000 லீற்றர் தண்ணீரை உற்பத்தி செய்ய நீர் விநியோக சபைக்கு ரூபா 49.00 செலவாகிறது, இருப்பினும் மாத்தளை மாவட்டத்தில் மட்டும் மொத்த நீர் கொள்ளவில் 35 சதவீத நீர், குழாய்களின் குறைபாடு காரணமாக வீணடிக்கப்படுவதாக அவர் கூறினார்.

# மஸ்கெலியா பொது மயான பூமி வெளியாரால் ஆக்கிரமிப்பு



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

மஸ்கெலியா பிரதேச சபைக் குறிப்பிட்ட மஸ்கெலியா பொது மயான பூமி வெளியாரின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா நகர பொது மயானம் பகுதி தற்போது தனியார் தேயிலை தோட்டத்தின் பாவனையில் இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். குறித்த பகுதியிலுள்ள கருப்பன் தேயிலை மரங்களை வெட்டுவதாகவும் அவற்றை பாரவூர்திகளில் அப்பகுதியிலுள்ள கொங்றீட் பாதையூடாக கொண்டு செல்வதனால் பாதை சேதமடைவதாகவும் குற்றம் சுமத்துகின்றனர்.

மஸ்கெலியா நகர பொது மயானத்தை பாதுகாத்தல் தொடர்பில் மஸ்கெலிய பிரதேசசபை, மஸ்கெலியா மரண ஆதார சங்கம் மற்றும் மஸ்கெலியா வாழ் பொது மக்களும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# சிங்கராஜ வனத்தில் மரம் வெட்டிய நால்வர் கைது

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

சிங்கராஜா வனாந்தர எல்லையில் பெறுமதியான மரங்களை வெட்டிய சந்தேகத்தின் பேரில் 4 பேர் பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நால்வரும் வன பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை சிங்கராஜ வனாந்தர எல்லையில் காடுகள் வெட்டி அழிக்கப்படுவதாக பாடசாலை மாணவியொருவர் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தகவல் தெரிவித்தார்.

இதனையடுத்து பொலிஸார் அம்மாணவியின் வீட்டுக்கு சென்று அவரிடம் வாக்குமூலம் பெற்று கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம்

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

கொலன்ன வலயத்தில் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 2021 ஆம் ஆண்டில் 506 இலட்சம் நிவாரண நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக இரத்தினபுரி மாவட்ட சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் பிரதேச அதிகாரி ரங்க ஜீவ பெரேரா தெரிவித்தார். சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்திக்கு தேவையான அனைத்து உபகரணங்களையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக விவசாயிகளின் வருமானத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தில் வீட்டு பயிர்ச்செய்கைக்கு தேவையான கறுவா மிளகு மற்றும் பாக்கு, பழ வகைகள் ஆகியவற்றிற்கான கன்றுகள் வழங்கப்படவுள்ளன.

நிவாரண உதவிகள் சங்கங்களின் ஊடாக இடம்பெறவுள்ளமையால் கட்சி இன, மத பேதமின்றி கொலன்ன வலயத்திலுள்ள அனைத்து சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களுக்கும் கிடைப்பதற்கு ஆவண செய்யுமாறு சங்கங்களின் அதிகாரிகளை வேண்டுவதாக அவர் குறிப்பிட்டார்.

# பதுளை, பதுளைப்பிட்டியவில் பத்து பேருக்கு கொரோனா

**பதுளை தினகரன் விசேட நிருபர்**

பதுளையில் பதுளைப்பிட்டிய என்ற இடத்தில் பத்துப்பேர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகியுள்ளதாக நேற்று கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக, பதுளை மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

பதுளைப்பிட்டிய என்ற இடத்தில் (15) மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. இவ் அறிக்கைக்கமையவே 10 பேர் கொவிட் 19 தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அன்றைய தினம் 100 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நேற்று இரண்டாவது முறையாக 190 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

## இலங்கை தமிழர் தொடர்பாக

# சர்வதேச தளத்தில் இந்தியாவின் பரிந்துரை வரவேற்கத்தக்கது



13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் எமது அரசியல் நிலைப்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் இந்தியாவின் இலங்கைத் தமிழரின் அரசியல் தீர்வு தொடர்பான வலுவான நிலைப்பாடாக இருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், அதை வரவேற்கின்றோம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பிறம்மந்தனாறு கிராமத்தில் சமுர்த்தி உற்பத்தி கிராமத் திட்டத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். அந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் பேசிய அவர்,....

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வானது இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பிப்பதனூடாகவே சாத்தியப்படுத்த முடியும் என்பதே கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நாம் வலியுறுத்தி வருகின்றோம். எமது நிலைப்பாட்டையே ஐக்கிய நாடுகள் எனும் சர்வதேச தளத்தில் இந்தியாவும் இன்று வெளிப்படுத்தியுள்ளது.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தைவாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும், உற்பத்திசார் முயற்சிகளை மேலும் ஊக்குவிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யவும் இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற வகையிலும் அர்த்தபூர்வமான முயற்சிகளை முன்னெடுப்பேன் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## வட்டக்கச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்







கிளிநொச்சியில் வட்டக்கச்சி பகுதியில் இடம்பெற்ற கத்திக் குத்துச் சம்பவத்தில் உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் கொலைக்கு நீதி வேண்டியும் கடந்த திங்கட் கிழமை கொல்லப்பட்டவரின் குடும்பத்தினர் மீது தரும்புரம் பொலிசார் மேற்கொண்ட தாக்குதலை கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்....

படங்கள் கிளிநொச்சி குறூப்,பரந்தன் குறூப் நிருபர்கள்

## மன்னாரில் புகையிரத – பஸ் விபத்து:– மன்னார் இளைஞர், யுவதிகளின் மனிதாபிமான செயல்

**மன்னார் குறூப் நிருபர்**

தலைமன்னார் பகுதியில் புகையிரத பஸ் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தேவையான குருதியை மன்னாரின் பல பகுதிகளில் இருந்து இளைஞர் யுவதிகள் செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்து வழங்கியுள்ளனர்.

விபத்தில் காயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்கு தேவையான குருதி தட்டுப்பாடு வைத்தியசாலையில் நிலவி வந்தது.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகம் குருதி வழங்க மக்களிடம் கோரிக்கை விடுத்தது. குறித்த விபத்தில் 25ற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்த நிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் யுவதிகள் இரத்தம் வழங்குவதற்கு தன்னார்வத்துடன் வருகை தந்து குருதி வழங்கியுள்ளனர்.

எனினும் வைத்திய சாலையின் அவசர கால நிலை காரணமாக குறிப்பிட்ட அளவு குருதியே பெற்றுக்கொள்ளப்பட்டு இரத்தம் சேகரிக்கும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உருவாக்கிய காலம் முதல் இயங்காத நிலையில்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு காணப்பட்டாலும் மாந்தை கிழக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை இயங்காத நிலை காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கில் இருக்கும் மக்களுக்கான பிராந்திய சுகாதார பணிமனை இதுவரை இயங்காத நிலையினால் மக்கள் பல்வேறு சிரமாங்களை எதிர்கொண்டு போக்குவரத்து வசதி இல்லாத நிலையிலும் மல்லாவிக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டாப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிராந்திய சுகாதார பணிமனை உருவாக்கிய காலத்தில் இருந்து இதுவரை அந்த பணிமனை இயங்காத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சிற்கு அறிவித்தும் எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கால்நடைகளின் உறைவிடமாக முல்லைத்தீவு பஸ் நிலையம்




**முல்லைத்தீவு குறுப் நிருபர்**

முல்லைத்தீவு பஸ் நிலையம் கால்நடைகளின் உறைவிடமாக மாறி உள்ளதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெருமளவு நிதியில் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது கால்நடைகளின் உறைவிடமாகவே காணப்படுகின்றது.

தேவையான வசதிகள் செய்யப்பட்டு பஸ் நிலையம் இயங்க வைக்க வேண்டுவதோடு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட தற்காலிக பஸ் தரிப்பிடத்தில் இருந்தே உள்ளூர், வெளி மாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெறுகின்றன. ஆனால் திறந்து வைக்கப்பட்ட புதிய பஸ் நிலையக் கட்டடத்தினை பயன்படுத்தாததன் காரணமாக கால்நடைகளின் உறைவிடமாக புதிய பஸ் நிலையக் கட்டடம் காணப்படுகின்றது.

பொருத்தமான இடத்தில் பஸ் நிலையம் அமையவில்லை என்ற குற்றச்சாட்டுகள் கடந்த பல ஆண்டுகளாக பொது அமைப்புகளினால் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றன. ஒரு நகரத்தின் முக்கிய கட்டடம் கால்நடைகளுக்கான உறைவிடமாக மாறி உள்ளதை அதிகாரிகள் கண்டு கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பஸ் நிலையக் கட்டடத்தினை பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## அரச அதிகாரிகளை அச்சுறுத்த வேண்டிய தேவை எனக்கு கிடையாது–அங்கஜன் எம்.பி

**கோப்பாய் குறூப் நிருபர்**

அரச அதிகாரிகளை அச்சுறுத்த வேண்டிய தேவை எனக்கு கிடையாது.

ஆனால் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திட்டங்கள் உரிய முறையில் மக்களிடம் சென்றடைவதை அதிகாரிகள் ஊடாக உறுதிப்படுத்த வேண்டியது எனது கடமை என பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் (16) இடம்பெற்ற மக்கள் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,....

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் எனது இணைப்பாளர் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட இணைத் தலைவரால் முரண்பட்ட கருத்து ஒன்று தெரிவிக்கப்பட்டது.

கருத்து தெரிவித்தவர் என்னை சந்திக்க எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்ட போதும் நான் அவரை இரண்டு தடவைகள் சந்தித்தேன். கலந்துரையாட வேண்டும் என தெரிவித்தேன், அவரும் விருப்பம் தெரிவித்தார் ஆனால் கலந்துரையாட முன்வரவில்லை.

என்னிடம் பிழை இருந்தால் அதனை திருத்திக் கொள்ள நான் எந்த சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கிறேன். ஆனால் குறை கூறியோர் என்னிடம் பிரச்சினையை தெரிவிக்காமல் உலகம் முழுவதும் சொல்லித் திரிகிறார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஒரு தேர்தல் தொகுதியில் வருகின்ற நிலையில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களை யார் வேண்டுமானாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முடியும்.

கிளிநொச்சி அபிவிருத்திக் குழு இணைத் தலைவர் யாழ்ப்பாணத்தில் சமுர்த்தி ஆரம்ப நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி கோரியிருந்தார் வழங்கப்பட்டது. ஆனால் நாம் கிளிநொச்சியில் ஒரு நிகழ்வை நடத்துவதற்கு கோரினோம் அனுமதி வழங்கப்படவில்லை.



2010ஆம் ஆண்டு நான் யாழ்ப்பாணத்தில் அரசியலில் ஈடுபட ஆரம்பித்த போது பல ஆயுதக் குழுக்களின் மத்தியிலே எனது அரசியலை ஆரம்பித்தவன்.

அன்று பயப்படாமல் அரசியலில் ஈடுபட்டதால் மக்கள் எனக்கு வாக்குகள் மூலம் அங்கீகாரத்தை வழங்கி உள்ளார்கள் என்றார் .

## முல்லைத்தீவு கடலில் தொடர்ந்தும் நிகழும் சட்டவிரோத மீன்பிடி

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு கடலில் வெளிச்சம் பாய்ச்சி தொழில் செய்கின்ற சட்டவிரோத தொழில் நடைபெறுகின்றது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம், கடற்படை தவறி விட்டது என முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெட்றிக் ஜோன்சன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற சட்டவிரோத கடற்றொழில்களைக் கட்டுப்படுத்துங்கள் என நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புல்மோட்டைப் பக்கம் இருந்து வருபவர்களே வெளிச்சம் பாய்ச்சி தொழிலில் ஈடுபடுகின்றனர். இது தடுக்கப்பட வேண்டும். கடற்படை இதனைக் கட்டுப்படுத்துவதில்லை. இதே நேரத்தில் நாயாறுப் பகுதியில் நூற்றுக்கணக்கான வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வாடியடிகளை அமைத்து தொழில் செய்கின்றனர். கடந்த பத்தாண்டுகளுக்கு முப்பது வரையான அனுமதிகளே சமாசத்தினால் வழங்கப்பட்டது. ஆனால் தற்போது அனுமதிகள் இன்றி நூற்றுக் கணக்கான பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நாயாற்றுக் கடற்கரையில் வாடிகள் அமைத்து தொழில் புரிவதன் காரணமாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

## வவுனியாவில் போதை பொருட்களுடன் இரு இளைஞர்கள் கைது

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் கேரள கஞ்சா மற்றும் ஹெரோயின் ஆகியவற்றை உடமையில் வைத்திருந்த இருவரை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் வவுனியா நெளுக்குளம் மற்றும் குகநகர் பகுதிகளில் வவுனியா பொலிசாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது சிறு சிறு பொதிகளாக கஞ்சா மற்றும் ஹெரோயின் உடமையில் வைத்திருந்த இரு இளைஞர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் 27,28 வயதுடையவர்களாவர்.

# கிழக்கின் குரல்



# நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு ஒன்றுமே நடக்கவில்லை



### பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன்

(வெல்லாவெளி தினகரன், பெரியபோரதீவு தினகரன் நிருபர்கள்)

நல்லாட்சியில் எந்த வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்களே தவிர ஒன்றுமே நடக்கவில்லை.

மண்டூர் குருமண்வெளி பாலத்திற்கு அன்றைய அமைச்சர் வந்து அடிகல் நட்டபோதும், அங்கு பாலத்தினை காணவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் 5000 சிறிய குளங்களை புனரமைக்கும் நீர்ப்பாசன செழுமை தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கிராமிய குளங்கள், அணைக்கட்டுக்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு, உப்புவெட்டிக் குளத்தின் புனரமைப்பு பணிகள் செவ்வாய்க்கிழமை (16) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த திட்டத்தின் கீழ் 70 குளங்களும், 18 அணைக்கட்டுகளும் புனரமைக்கப்படவுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் பொறியியலாளர் என்.நாகரத்தினம் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த சந்திரகாந்தன்,

யுத்தகாலத்தில் நாங்கள் எதைப்பற்றியும் சிந்திக்கமுடியாத நிலையில் இருந்தோம். அப்போது நாணல்புல்கள் இருந்தால் மட்டுமே நாங்கள் ஒளியமுடியும். அந்த நிலைமை இன்று மாற்றம்பெற்றுள்ளது. இன்று அந்த நாணல்புல்களை அழித்து விட்டு அணைக்கட்டுகளை அமைக்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கம் எதனையும் இங்கு செய்யவில்லை. மண்டூர் பாலத்திற்கு கல்வைத்தார்கள். அமைச்சர் வந்து கல்வைத்தார். பாலத்தினை இன்னும் காணவில்லை. நாங்கள் அவ்வாறு செய்யமாட்டோம் என்றார்.

# டிப்பர் – மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் படுகாயம்



(திருக்கோவில் தினகரன் நிருபர்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி நேருபுரத்தில் டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. டிப்பர் வாகனம் அக்கரைப்பற்று நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த வீதி தடுப்புக்களை உடைத்துக் கொண்டு பள்ளத்தில் குடைசாய்ந்துள்ளது.

இவ்விப்பதில் மோட்டார் சைக்கிளுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன், அதனை செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்துள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொத்துவில் – லாகுகல எல்லை பிரச்சினைக்கு தீர்வு

### உயர்மட்டக் கூட்டத்தில் தீர்மானம்

(ஒலுவில் விசேட நிருபர்)



நீண்ட காலமாக நிலவிவரும் பொத்துவில் லாகுகல எல்லை பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளதாக, பொத்துவில் பிரதேச சபைத் தவிசாளர் எம்.எச். அப்துல் றகீம் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் பொத்துவில் பிரதேச செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சிரேஷ்ட நில அளவையாளர் அத்தியட்சகர், பொத்துவில் பிரதேச செயலாளர், பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், லாகுகலை பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், காணி விடயம் தொடர்பான முக்கிய அதிகாரிகள், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

விரைவில் குறித்த எல்லையை நிர்ணயிப்பது தொடர்பான தீர்மானம் எட்டப்பட்டதோடு, பொத்துவில் மக்களுக்குச் சொந்தமான எல்லைப் புறக் காணிகளை விடுவிப்பதற்காக, சகல தரப்பும் புரிந்துணர்வுடனும் ஒத்துழைப்புடனும் ஒருங்கிணைப்புடன் செயற்படுவதாக தீர்மானம் எட்டப்பட்டது.

நிரந்தரமான தீர்வு கிடைக்கும் வரை முதற் கட்டமாக பொத்துவில் லாகுகல எல்லையில் காட்டுப்பாதை ஒன்று நிர்மாணிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, பொத்துவில், கோமாரி, பாணம, லாகுகல போன்ற இடங்களில் வாழும் மக்களுக்குப் பயன்தரக் கூடிய ஹெடஓயா திட்டத்தின் தேவை குறித்தும் ஆராயப்பட்டது.

எல்லைப் பிரச்சினைக்கான தீர்வு இழுபறி நிலையில் காணப்பட்டதால் மக்களின் விவசாயக் காணிகள், வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், வன பரிபாலனத் திணைக்களம் ஆகியவற்றினால் அபகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

# திருகோணமலையில் இருவர் சாகும்வரை உண்ணாவிரதம்



(அன்புவழிபுரம் தினகர நிருபர்)

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனத்தில் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட தலைவி நா. ஆஷா மற்றும் இரா. கோசலாதேவி இருவரும் நேற்று புதன்கிழமை (17) 3 ஆவது நாளாக திருகோணமலை சிவன் ஆலய முன்றலில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

திருகோணமலை மாவட்ட தலைவி திருமதி நா. ஆஷா கருத்து தெரிவிக்கையில், இலங்கை அரசாங்கத்தினூடாக எவ்வித தீர்வும் கிடைக்கப் பெறாமையினாலேயே எமது போராட்டங்களை நாங்கள் சர்வதேசத்தை நோக்கி நகர்த்தியிருக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி பெண்கள் எத்தனையோ பேர் கண்ணீருடன் வீதியில் போராடிக் கொண்டிருக்கின்றார்கள், அவர்களின் கோரிக்கைகளை சர்வதேசம் கவனமெடுத்து செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

# சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்

போலி நாணயத்தாள்களுடன் கைதான மூவரையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் (16) அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேக நபர்கள் மூவரையும் மன்றில் முன்னிலைப்படுத்திய போதே நீதவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

# டெங்கு ஒழிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேசங்களில் டெங்கு ஒழிப்புக்கான கண்காணிப்புக்கள் மற்றும் விழிப்பூட்டல்கள் என்பன கிராமம், கிராமமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தையும், இதனால் ஏற்படக்கூடிய நோய் ஆபத்துக்களையும் மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாக சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்புக்கான செயலணிக் குழு வீடு வீடாக சென்று கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

# 'தேசிய மகிழ்ச்சி தினம்' கிழக்கில் நடாத்த ஏற்பாடு

(நிந்தவூர் குறூப் நிருபர்)


உலகிலுள்ள அனைத்து மனிதர்களினதும் நோக்கமாக இருப்பது தங்களின் வாழ்நாள் முழுவதும் மன மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்பதேயாகும். அதற்கமைவாக, 'தேசிய மகிழ்ச்சி தினம்' பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி தேசிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இதனை கொண்டாடும் முகமாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய மகிழ்ச்சி தினம் இம்மாதம் 20 ஆம் திகதி திருகோணமலை ஆயுர்வேத வைத்திய சாலை கூட்ட மண்டபத்தில் சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி ஆர். ஸ்ரீதர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராத யஹம்பத் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். கௌரவ அதிதிகளாக மாகாண பிரதம செயலாளர் துஷித பீ.வணிகசிங்க, ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயுர்வேத வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளதாக மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

# கிணற்றில் விழுந்து சிறுமி மரணம்

(கல்லடி குறூப், மணல்சேனை, வெல்லாவெளி தினகரன் நிருபர்கள்)



களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றிலிருந்து மீட்ட இரண்டரை வயது சிறுமி மரணமடைந்துள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிசார் தெரிவித்தனர்.

தேற்றாத்தீவு பகுதியிலுள்ள வீடொன்றில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (16) வீட்டில் வழமை போல் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி, கிணற்றில் வீழ்ந்துள்ளதாக அறிந்து கொண்ட குறித்த சிறுமியின் தகப்பனார் கிணற்றிலிருந்து மீட்ட சிறுமியை களுவாஞ்சிகுடி வைத்தியசாலையில் அனுமதித்துள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி சிறுமி உயிரிழந்துள்ளதுடன், சடலம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹஜ்ஜுல் அக்பரை உடன் விடுதலை செய்ய வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

முஸ்லிம்களின் முக்கிய மார்க்க அறிஞர்களில் ஒருவரான ஜமாத்தே இஸ்லாமியின் முன்னாள் தலைவர் ஹஜ்ஜுல் அக்பர் அண்மையில் குற்றப்புலனாய்வு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முஸ்லிம் மக்களின் முக்கிய அறிஞர்களில் ஒருவரான ஹஜ்ஜுல் அக்பரை தொடர்ந்தும் தடுத்து வைத்திருப்பது ஏற்றுகொள்ள முடியாத ஒன்றாகும்.

சட்டமொழுங்குக்கு பொறுப்பாக இருக்கின்ற ஜனாதிபதியும், பிரதமரும் அவரை விடுதலை செய்ய முன்வரவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் வேண்டுகோள் விடுத்தார்.

அவருடைய கைது சம்மந்தமாக ஊடகங்கங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இன்று ஊடகங்கள் ஹஜ்ஜுல் அக்பரை புதிதாக கைது செய்தது போல கருத்து தெரிவிக்கின்றன. உண்மையில் அவர் கடந்த 2019ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதிலின் பின்னர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட நிலையில், மீண்டும் அவர் கைது செய்யப்பட்டு இருப்பது மிகவும் கவலையான விடயமாக இருக்கின்றது என்றார்.

# விபத்தில் வயோதிபர் பலி

(கிண்ணியா மத்திய, திருமலை மாவட்ட விசேட நிருபர்கள்)

கிண்ணியா கொழும்பு வீதியில் உள்ள முனைசேனை என்ற இடத்தில் நேற்றுமுன் தினம் (16) இடம்பெற்ற விபத்தில், 68 வயதான வயோதிபர் அதே இடத்தில் உயிரிழந்துள்ளார்.

கிண்ணியா வில்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த சேர்ந்த டெயிலர் நசீம் என்பவரே இவ்வாறு பலியானவர் ஆவார்.

கிண்ணியாவிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றில் வில்வெளியில் உள்ள தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த டிப்பர் வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இவர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

# இரண்டாம் மொழி பாடநெறியை பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ்

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிருபர்)

அரச ஊழியர்களுக்கு தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் அனுசரணையோடு, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நடாத்தி வந்த இரண்டாம் மொழி சிங்கள பாடநெறி பூர்த்தி விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை கலாசார மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எம்.முகம்மட் ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.எம்.லத்தீப் பிரதம அதிதியாகவும், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசீக் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு பாடநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தனர்.

தொடர்ச்சியாக 15 நாட்கள் நடைபெற்ற இப் பாடநெறியை கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் கலந்துகொண்ட அதிதிகளும் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

சிங்கள மொழி பாடநெறியை பூர்த்தி செய்து கொண்ட அரச ஊழியர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் அனைவரினதும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றிருந்தன.

பொதுமக்களுக்கு சேவையாற்ற வேண்டிய அரச ஊழியர்கள் இரண்டாம் மொழியை கற்றிருக்க வேண்டியதன் அவசியம் பற்றி அதிதிகள் இங்கு விளக்கி கூறினர்.

# கலாபூஷணம் ஹஸன் மௌலானா காலமானார்

(மருதமுனை தினகரன் நிருபர்)



இலங்கையில் தமிழ் இலக்கியத்திற்கு பெரும் பங்காற்றிய பல்துறை எழுத்தாளரும், தமிழறிஞருமான மருதமுனையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் கலாபூஷணம் எஸ்.ஏ. ஆர்.எம்.செய்யித் ஹஸன் மொலானா (வயது 84) செவ்வாய்க்கிழமை (16) நிந்தவூரில் காலமானார். இவரது ஜனாஸா நல்லடக்கம் நேற்று (17) நிந்தவூர் மையவாடியில் இடம்பெற்றது.

1960ஆம் ஆண்டு முதல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு மருதமுனை அல்மானார் மத்திய கல்லூரியில் நடாத்துவதற்கு காரன கர்த்தாவாக இருந்து சிறப்பாக நடாத்தி முடித்தவர்.

2015ஆம் ஆண்டு கம்பன் கலைக் கழகத்தினால் அறக்கட்டளை விருது வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

# கிழக்கின் குரல்



### ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய

# உயர் அதிகாரிகள் குழு அம்பாறைக்கு விஜயம்

### நகர அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடல்

**பாறுக் ஷிஹான்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் விசேட பணிப்புரைக்கு அமைவாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழு அம்பாறை, கல்முனை, நிந்தவூர் , சம்மாந்துறை பகுதிகளுக்கு விஜயம் செய்திருந்தது.

அதன் பின்னர் அம்பாறை மாவட்ட நகர அபிவிருத்தி பணிகள் சம்மந்தமாக மாவட்ட செயலகத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல். பண்டார நாயக்க தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், வன பரிபாலன இராஜாங்க அமைச்சருமான விமலவீர திசாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி திலக் ராஜபக்ச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டப்ளியூ.டி.வீரசிங்க ஆகியோரது மேற்பார்வையுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் துறைசார் நகர அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு கருத்துக்களை முன்வைத்ததுடன், அதனை செயற்படுத்த சகல தரப்பினரின் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை வலியுறுத்தினர்.





2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அரச ஊழியர்களுக்காக வழங்கப்பட வேண்டிய அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியத்தை வழங்குமாறு கோரி, ஜனாதிபதிக்கு ரெலி மெயில் அனுப்பும் போராட்டம் கிண்ணியாவில் திங்கட்கிழமை (15) ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்; திருமலை மாவட்ட விசேட நிருபர்)

## ஓட்டமாவடி ஆற்றில் கரையொதுங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

**பாசிக்குடா நிருபர்**

ஓட்டமாவடி ஆற்றில் முந்திரியடித் துறையில் கரையொதுங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலத்தை மீட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

இரண்டு நாட்களுக்கு முன்பு தோணி ஒன்றில் தனிமையாக சென்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்க்கப்பட்டுள்ளார்.இவர் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓட்டமாவடியைச் சேர்ந்த சேகு இஸ்மாயில் சப்ராஸ் வயது (36) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



# அபிவிருத்தி போர்வையில் காணிகள் பறிவோவதை அனுமதிக்க முடியாது

### பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்

**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**

அபிவிருத்தி என்ற பெயரில் காணிகள் பறிபோவதற்கு நாங்கள் அனுமதி வழங்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல. அபிவிருத்தியென மக்களிடம் தரப்படும் விடயங்கள் அனைத்தும் பரிசளிப்பதாக மக்களுக்கு வழங்கப்பட்டாலும், அவை மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தின் மூலமே அரசாங்கம் மேற்கொள்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (16) இடம் பெற்றிருந்தது.

அமைச்சர் சீதா அரம்பி பொல ஒரு நிகழ்ச்சியின் போது கிராமிய திறன் அபிவிருத்தி அமைச்சினால் கணனிகளுடன் கூடிய நிலையத்தினை அமைத்துக் கொடுப்பதற்கான விடயம் குறித்து தெரிவித்த கருத்து தொடர்பாக இதன்போது விரிவாக பேசப்பட்டது. இந்த நிலையில் இதனை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் அமைப்பதற்கான ஒரு முன்மொழிவினை பாராளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்திருந்தார்.

இது குறித்து கருத்து தெரிவிக்கையில்,

களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் சிறு கைத்தொழில் உற்பத்திகளைச் செய்வதற்கு வளங்கள் இல்லை. இது ஒரு நகரப் புறமாகையினால் தகவல் தொழில்நுட்பத் துறையை அமைத்து இளைஞர்களை முன்னேற்றலாம் என்பதற்காக ஒரு *IT Incubation Centre* இனைக் கொண்டு வருவதற்கு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை ஒன்றினை நான் சமர்ப்பித்தேன். அதற்கு அவர் தனக்கு இதற்கு முன்னரே கடிதமொன்று வந்ததாகவும், அதற்கு காணி இல்லை என பதிலனுப்பியதாகவும் தெரிவித்தார். அதற்கு நான், *IT Incubation Centre* இனை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தினுள் உள்வீதிகளில் உள்ள அரச காணிகளில் அமைக்கலாம் எனக் கூறினேன்.இதனை உடனடியாக கவனத்திலெடுத்து சீதா அரம்பி பொலவிற்கு அனுப்புவதற்கு அபிவிருத்திக் குழு தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தனும் சம்மதம் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல. அபிவிருத்தியென மக்களிடம் தரப்படும் விடயங்கள் அனைத்தும் பரிசளிப்பதாக மக்களுக்கு வழங்கப்பட்டாலும், அவை மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப் பணத்தின் மூலமே அரசாங்கம் மேற்கொள்கின்றது எனக் குறிப்பிட்டார்.



# கிண்ணியா வைத்தியசாலையின் குறைபாடு தொடர்பில் ஆளுநரிடம் மகஜர் கையளிப்பு

**கிண்ணியா மத்திய, ரொட்டவெவ குறூப் நிருபர்கள்**

கிண்ணியா தள வைத்தியசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி கிழக்கு மாகண ஆளுநருக்கு நேற்றுமுன்தினம் (16) மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேச சிவில் சமூகப் பிரதி நிதிகளால் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் பேர் வரை சேவை பெறும் கிண்ணியா தள வைத்தியசாலையில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகளை கிண்ணியா உலமா சபை, சூறா சபை, பள்ளி வாசல்கள் சம்மேளனம், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு பிரதிநிதிகள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தை சந்தித்து தெளிவுபடுத்தினர். இதன் போது கட்டிட பிரச்சினை, பிரசவ காலத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினை என பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. இவற்றை தீர்க்க முடியாதவிடத்து வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

## கல்முனை கடற்கரை மைதான அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு



கிராமத்திற்கு ஒரு மைதானம் எனும் செயற்திட்டத்தின் கீழ், கல்முனை கடற்கரை வீதியில் அமைந்துள்ள கடற்கரை மைதான அபிவிருத்தி தொடர்பில் ஆராயும் கள விஜயம் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த விஜயத்தின் போது கல்முனை பிரதேச செயலக செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கல்முனை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எம். ஜௌபர், கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைரூஸ் உட்பட பலரும் விஜயம் செய்து மைதானத்தின் தற்போதைய நிலைகளை ஆராய்ந்தனர்.

கல்முனை கடற்கரை மைதான உள்ளக ஆடுகள அபிவிருத்தி, மைதானத்தை ஒளியூட்டும் நடவடிக்கை, பார்வையாளர் அரங்க புனரமைப்பு உட்பட பல்வேறு வேலைத்திட்டங்களை செய்வதற்கான தீர்மானம் இந்த கள விஜயத்தின் போது எடுக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக தெரிவித்தனர்.

## மூதூரில் காணிக் கச்சேரி



**( தோப்பூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரச காணிகளை பராமரிக்கும் மக்கள் ,காணி ஆவணம் கோரி விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களுக்கு காணிக் கச்சேரி நடாத்துவதற்கான அனுமதி, கிழக்கு காணி ஆணையாளரிடம் இருந்து கிடைக்கப் பெற்றவர்களுக்கான காணிக்கச்சேரி , அம்மன் நகர் பல்தேவைக்கட்டிடத்தில் நேற்று (17) பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக்கின் ஏற்பாட்டில் இடபெற்றது .இக்காணிக் கச்சேரியின் போது தெரிவு செய்யப்படுவோர்களுக்கு விரைவில் காணி ஆவணம் வழங்கப்படவுள்ளது .

இதில் காணி உத்தியோகத்தர் எஸ். எல்.நௌபர், கிராம சேவையாளர் நௌபல் உட்பட ஏனைய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

இன்று வியாழன் நாளை வெள்ளி ஆகிய தினங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

## மட்டக்களப்பில் ஒரு வாரத்துக்குள் 90 பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

**புதிய காத்தான்குடி தினகரன், வெல்லாவெளி தினகரன் ,மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயினால் மார்ச் 05 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதி வரையான ஒரு வாரகாலத்தில் 90 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் வேகமாக அதிகரித்து வருகின்றது.

இந்த வாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மண்முனை வடக்கு மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 நோயாளர்களும், காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 நோயாளர்களும், வாழைச்சேனை, ஏறாவூர் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 10 நோயாளர்களும் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 நோயாளர்களும், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 06 நோயாளர்களும், ஓட்டமாவடி, களுவாஞ்சிகுடி, கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா 04 நோயாளர்களும், ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 நோயாளர்களும், வவுணதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 நோயாளர்களுமாக மொத்தம் 90 பேர் டெங்கு நோய் பாதிப்புக்குள்ளானவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிகிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடம் கொடுக்காதவகையில் சூழலை துப்பரவாக வைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.







அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டினால் திருக்கோயில் தாண்டியடி கிராம விக்னேஸ்வர வித்தியாலயத்தில் மருத்துவ வசதிகள் இன்றி வசித்து வரும் அப்பகுதி மக்களுக்கு புதன்கிழமை (10) இலவச மருத்துவ முகாம் நடாத்தப்பட்ட போது.

# மங்கையர் முற்றம்

சுகந்தி



# நடைப்பயிற்சி; மூளை வளர்ச்சியை அதிகரிக்கும்

எடை குறைப்பு, சர்க்கரை நோய், இரத்த அழுத்தம் வரை பல நோய்களுக்கு நடைப்பயிற்சியே டொக்டர்களின் ஒரே வார்த்தையாகும். இவ்வாறு பல்வேறு நோய்களில் இருந்து விடுவிக்கும் நடைப்பயிற்சியால், மேலும் ஒரு பலன் குறித்து ஆய்வில் தெரியவந்துள்ளது. கனடாவைச் சேர்ந்தவர்கள் நடத்திய ஆய்வில், நடைப்பயிற்சி செய்வதால், மூளை இயக்கம் சீரடைவதாக தெரியவந்துள்ளது.


மூளை பாதிப்புற்றவர்களைக் கொண்டு வாரத்துக்கு மூன்று மணி நேரம், ஆறு மாதத்துக்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முடிவில், அவர்களின் மூளை இயக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. தற்போது நடத்தப்பட்ட ஆய்வு சிறிய அளவிலானதுதான். விரைவில் இது குறித்து விரிவான ஆய்வு நடத்தப்படும் என்று கூறப்படுகிறது.

தினமும் அரை மணி நேரம் நடைபயிற்சி செய்தால், ஆயுள் கூடும் என ஆய்வு கூறுகிறது.

வாரத்தில் குறைந்தது ஒரு மணி நேரம் விறுவிறுப்பாக நடைப்பயிற்சி செய்தால், அது மாரடைப்பு மற்றும் பக்கவாதம் தாக்கும் அபாயத்தை 35 சதவீதம் குறைக்கிறது. சர்க்கரை நோய் வரும் அபாயத்தை 50 சதவீதம் குறைக்கிறது. சிலவகை புற்றுநோய்கள் வரும் அபாயத்தை 20 முதல் 50 சதவீதம் வரை குறைக்கிறது. உடல் எடையை குறைப்பதற்கும் வாக்கிங் உதவுகிறது.

கடற்கரை, பூங்கா, திறந்தவெளி, மொட்டைமாடி என எங்கு வாக்கிங் சென்றாலும் சுத்தமான காற்று அதிகம் கிடைப்பதால் நுரையீரல் சீராக இயங்க உதவுகிறது. ஆஸ்துமா தாக்கும் அபாயத்தையும் தவிர்க்கலாம். தவறாமல் நடைப்பயிற்சி செய்பவர்களுக்கு நினைவுத்திறன் கூடும்.

மூளையின் செயல்பாடு சுறுசுறுப்பாகும். இளம்வயதில் தவறாமல் நடைப்பயிற்சி செல்கிறவர்களுக்கு முதுமையில் உடல் உறுப்புகள் இயங்காமல் அவதிப்படும் பிரச்சினை வருவதில்லை. அதனால் நடைப்பயிற்சி செய்வது மிகச் சிறந்தது.



# உதட்டின் கருமையை அலட்சியப்படுத்தாதீர்கள்

அதிகமாக முகத்தைப் பற்றி கவலைப்படுவோர் உதட்டைப் பற்றி சிந்திப்பதில்லை. உதட்டைப் பராமரிப்பது, அழகுக்காக அல்ல. உதடு தானே கருப்பானால் என்ன என்று அலட்சியமாக இருக்க வேண்டாம். கருப்பான உதடுக்கு பின் பல உடல்நல பிரச்சினைகள் மறைந்திருக்கக் கூடும். அதை சரிபார்த்து உங்கள் உடல்நலத்தை சரி செய்து கொள்ளுங்கள்.

வாரத்துக்கு 3 நாள் லிப் ஸ்கரப் செய்வது நல்லது. வெள்ளை சர்க்கரையை லேசாக தூளாக்கிக் கொள்ளுங்கள். அதாவது சர்க்கரை துகள்களாக இருக்க வேண்டும். இதனுடன் கோப்பி தூள் சேர்க்கவும். இதை குறைந்தது 5 நிமிடங்கள் உதட்டில் தடவி மசாஜ் செய்யுங்கள். பின்னர் கழுவி விட்டு தேங்காய் எண்ணெய் தடவலாம். இதுமட்டுமல்லாது இட்லி மாவு, தோசை மாவு தடவியும் ஸ்கரப் செய்யலாம். புளிச்ச கீரை சாறு, எலுமிச்சை சாறு, பொடித்த சர்க்கரை ஆகியவற்றை கலந்து அக் கலவையை கொண்டும் ஸ்கரயப் செய்யலாம்.

பெட்ரோலியம் ஜெல்லி உதட்டுக்கு நல்லதல்ல. தேங்காய் எண்ணெய், சீ பட்டர், கொக்கோ பட்டர், கற்றாழை, எவகாடோ கலந்த லிப் பாமை தேர்ந்தெடுக்கலாம். அடர்நிறங்களைத் தவிர்ப்பது நல்லது. நல்ல தரமான, கெமிக்கல்கள் இல்லாத லிப்ஸ்டிக், லிப் பாம் பயன்படுத்தலாம். முடிந்தவரை இள நிறம் கொண்ட நியூட் லிப்ஸ்டிக்கை பயன்படுத்துங்கள். வீட்டில் இருக்கும்போது, தேங்காய் எண்ணெய், நெய், லிப் பாம் பயன்படுத்தலாம். நிறமில்லாத லிப் பாம் பயன்படுத்துங்கள். லிக்விட் லிப்ஸ் ஸ்டிக் உங்களது உதட்டை டிரையாக்கும். எனவே இதை முடிந்தவரைத் தவிர்க்கலாம். இரவில் தூங்கும் முன்னர் அவசியம் நீங்கள் போட்ட லிப் மேக்கப்பை நீக்கி விட்டு வெறும் தேங்காய் எண்ணெய் தடவிவிட்டு தூங்குவது நல்லது.

நெய், தேங்காய் எண்ணெய், பாதாம் எண்ணெய், ஆலிவ் எண்ணெய் இவை அனைத்தும் உதட்டுக்கு நல்லது. பகல் மற்றும் இரவில் இதை உதட்டில் தடவிக் கொள்ளுங்கள்.

ஒரு ஸ்பூன் எலுமிச்சை சாறுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து, உதட்டில் தடவி 20 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும்.

இரவில் கற்றாழை ஜெல்லை உதட்டில் தடவலாம். அடுத்த நாள் கழுவி விடுங்கள். தொடர்ந்து செய்து வந்தால் பலன் கிடைக்கும்.

# Saree Reuse Ideas



Ladies Fashion

# ஆடையில் தேநீர் கறையா?

நாம் அணியும் ஆடைகளில் அதுவும் நமக்குப் பிடித்த ஆடைகளில் தேநீர் அல்லது கோப்பி கறை பட்டுவிட்டால் அதை எவ்வளவு தான் நீக்க முயற்சி செய்தாலும் அதைப் போக்குவது மிகவும் கடினமாக இருக்கும். இதனால் நாம் அந்த ஆடையை திரும்பவும் அணிய முடியாமல் கவலையடையும் நேரங்களும் இருக்கின்றன. இனி அந்தக் கவலை வேண்டாம். ஒரு சில வீட்டு குறிப்புகளை பின்பற்றினால் இக்கறைகளில் இருந்து எளிதில் விடுபடலாம்.

**சுடுநீர்**

ஒரு கோப்பையில் வெதுவெதுப்பான நீரை எடுத்து கறை மீது நேரடியாக ஊற்றவும். தொடர்ந்து 10-15 விநாடிகளுக்கு மெதுவாக ஊற்றிக் கொண்டே இருங்கள், பின்னர் சவர்க்காரம் கொண்டு கறை மங்கும் வரை தேய்க்கவும். கடைசியாக, சாதாரண தண்ணீரில் அலசுங்கள், கறை மறைந்துவிடும்.

**வினிகர்**

வினிகர் உடல் எடையை குறைக்க மட்டுமின்றி துணிகளில் படிந்திருக்கும் கறைகளை அகற்றவும் உதவுகிறது. ஒரு ஸ்ப்ரே போத்தலில் 1 கப் வினிகர் மற்றும் 1 கப் தண்ணீர் சேர்த்து நன்கு கலக்கவும். பின்னர் இந்த கலவையை கறை மீது நேரடியாக தெளிக்கவும். 45 நிமிடங்கள் அப்படியே வைத்துவிட்டு மீண்டும் தெளிக்கவும். இப்போது உங்கள் துணியை தண்ணீரில் நனைத்து, நன்கு தேய்த்து அலசவும். தேநீர் அல்லது கோப்பி கறைகள் சுத்தமாக நீங்கி விடுவதை காணலாம்.

**பேக்கிங் சோடா**

பேக்கிங் சோடா ஒரு இயற்கை சுத்திகரிப்பானாக செயல்படுகிறது. தேநீர் கறையில் இருந்து விடுபட பேக்கிங் சோடாவை பயன்படுத்தலாம். இருப்பினும், மென்மையான துணிகளில் இதை முயற்சிக்க வேண்டாம். இதற்கு முதலில் அரை வாளி தண்ணீரை மிதமாக சூடு செய்து கொள்ளவும். இந்த தண்ணீரில் உங்கள் கறை துணியை 510 நிமிடங்கள் ஊற வைக்கவும். இதில் 1 தேக்கரண்டி பேக்கிங் சோடாவை நேரடியாக கறை மீது போடவும். கறையை அகற்ற துணியை நன்கு இரண்டு கைகளால் தேய்க்கவும். பின்னர் அந்த துணியை சாதாரண தண்ணீரில் அலசி விடுங்கள் கறை மறைந்துவிடும்.



# சுவிங்கம்

இனிப்பு இல்லாத சுவிங்கம் மெல்லுவது பற்களுக்கு பல்வேறு வகையில் நன்மைகளை உண்டாக்கும். குறிப்பாக பற்களில் அழுக்கு படிவதை தவிர்க்கும், பற்சிதைவு ஏற்படாமல் பற்களை பாதுகாக்கும் என்பது ஆய்வில் தெரியவந்துள்ளது. லண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ‘‘சுவிங்கம் மெல்லும்போது பற்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தி உமிழ்நீர் சுரப்பதை அதிகரிக்கும்.

தொடர்ந்து மென்று கொண்டே இருக்கும்போது பற்களின் ஆரோக்கியம் மேம்படும். பல் சொத்தை ஏற்படாமலும் தடுக்கும். பல் சொத்தைக்கும் சர்க்கரை கலக்காத சுயிங்கத்திற்கும் இடையே தொடர்பு இருக்கிறது. வாய் பகுதி சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு சுவிங்கத்தின் பயன்பாடு பற்றி தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்’’ என்கிறார் ஆராய்ச்சி மேற்கொண்ட இந்திய வம்சாவளியை சேர்ந்த பேராசிரியர், அவிஜித் பானர்ஜி.

கடந்த 50 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பகுப்பாய்வு, இனிப்பு இல்லாத சுவிங்கம் சாப்பிட்டவர்களின் வாய் பகுதி சுகாதாரம், அவர்களை தாக்கிய பல் நோய்கள், சுவிங்கம் மெல்லுவதன் தாக்கம் உட்பட பல விடயங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. இறுதியில் சர்க்கரை இல்லாத சுவிங்கம் பல் சொத்தை ஏற்படுவதற்கான வாய்ப்பை 28 சதவீதம் குறைப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே சுவிங்கம் சாப்பிடுவோர் சர்க்கரை இல்லாத சுவிங்கத்தை தேர்ந்தெடுப்பது நல்லது.



## நோயற்ற சமையல்

# வல்லாரை கீரை பொரியல்



நீரிழிவு நோயாளிகள் வல்லாரைக் கீரை உண்பது நல்லது. இக்கீரை மலச்சிக்கல், வயிற்றுப் புண் மற்றும் குடல்புண்ணை ஆற்றுகிறது. இரத்த சோகையைப் போக்கி இரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**தேவையான பொருட்கள்**

வல்லாரை கீரை 1 கப்
வெங்காயம் 1
பச்சை மிளகாய் 3
பூண்டு 5 பல்
பெருங்காய தூள் 1/2 தே. கரண்டி
தேங்காய் துருவல் தேவையான அளவு
உப்பு சிறிதளவு
எண்ணெய் 1 மே. கரண்டி

**தாளிக்க:** கடுகு, சீரகம், கறிவேப்பிலை

**செய்முறை**

வெங்காயம், ப.மிளகாய், பூண்டை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கீரையை நன்றாக சுத்தம் செய்து பொடியாக நறுக்கி கொள்ளவும்.

பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் கடுகு, சீரகம், கறிவேப்பிலை, பெருங்காயத் தூள் போட்டு தாளித்து பிறகு வெங்காயம், பச்சை மிளகாய், பூண்டு சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் நன்றாக வதங்கியதும் நறுக்கிய கீரையை சேர்த்து வதக்கிய பின்பு உப்பு, சிறிதளவு தண்ணீர் தெளித்து மூடி வேக வைக்கவும். கீரை வெந்ததும் தேங்காய் துருவல் சேர்த்து கிளறி இறக்கவும்.

## எங்கே ஒருவருடைய உரிமைகள் மறுக்கப்படுகிறதோ

# அங்கேதான் சாதனைகள் உருவாக்கப்படுகிறது

### வடமாகாண ஆளுநர்



டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஏற்பாட்டில் கலைஞர்களுக்கான வைத்திய காப்புறுதி உறுதி பத்திரம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் (16) மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வின் போது டவர் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசிம், உமர் மூத்த கலைஞர் திருமதி செல்வம் பெர்ணான்டோவுக்கு 10,000 ரூபாய் நிதியுதவி வழங்கி வைப்பதையும் நிலையத்தின் தமிழ் பிரிவு பணிப்பாளர் ஜெயபிரகாஷ் சர்மா, கலைஞர் கே.சந்திரசேகரன் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.





எங்கே ஒருவருடைய உரிமைகள் மறுக்கப்படுகிறதோ அங்கேதான் சாதனைகள் உருவாக்கப்படுகிறது என்பதற்கு மிகச்சிறந்த முன்மாதிரியாக தான் உள்ளதாக வட மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ல்ஸ் தெரிவித்தார்.

'நாடும், தேசமும் உலகமும் அவளே' எனும் தொனிப்பொருளில் மார்ச் மாதம் 8 ஆம் திகதி கொண்டாடப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (16) மாலை 3 மணிக்கு மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மாவட்டத்தின் சாதனைப் பெண்களுக்கான விருதுகளை வழங்கி வைத்ததோடு அவர்களின் சாதனைகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட காணொளிப் பாடலினையும் வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்தும் பேசிய ஆளுநர்,…

இலங்கை நிர்வாக சேவையில் நான் உயர் பதவிகளை பெற்றுக் கொண்ட போது அதனை எவ்வாறு ஒரு பெண்ணால் சிறப்பாக மேற்கொள்ள முடியுமென கேள்விக்கணைகள் பல தொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களே இன்னமும் தனது நினைவில் இருப்பதாகவும், அவ்வாறான நிலைமைகளே தற்போது தனக்கு இச்சாதனைகளை மேற்கொள்ள தூண்டியதாகவும் தெரிவித்தார்.அந்த வகையில் பதவிகளில், தனிப்பட்ட வாழ்கையில் மற்றும் சமூகத்தில் பல்வேறு சவால்கள் உள்ளன. எனவே சம உரிமை வேண்டுமென்று கேட்டுவிட்டால் மட்டும் உரிமைகள் இலகுவாக கிடைத்துவிடுவதில்லை. ஒவ்வொருவரும் தமது கடமைகளை சரியாக செய்யும்போது பதவிகளை நீங்கள் தேடி அலைய வேண்டியதில்லை. பதவிகள் உங்களை தேடிவருமென தெரிவித்தார்.

மேலும், அரசியலில் பெண்களின் விகிதாசாரம் மிகக் குறைவாக காணப்படுகின்றமையால் சட்டவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அதேபோன்று அரச காணி சட்டத்தில் குடும்பத்தில் முதலாவது ஆண்மகனுக்கே காணி உரிமை வழங்கப்படுகிறது. பெண்களுக்கான உரிமை மறுக்கப்படுகிறது.

மேலும், திருமண பத்திரம், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் என்பவற்றில் கூட பெண்களின் தொழில் நிலை பதிவு செய்யப்படுவதில்லை போன்ற உரிமை மறுக்கப்படும் இடங்களை சுட்டிக்கட்டியதுடன் அரசியலில் பெண்களின் சட்டவாக்க ஈடுபாடு காணப்பட்டாலேயே பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென தெரிவித்தார்.

## கிராமசேவகர் இடமாற்றத்தை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா ஓமந்தை மருதங்குளம் கிராமசேவகர் இடமாற்றப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று (17) முன்னெடுக்கப்பட்டது.

மருதங்குளம் கிராமசேவகர் காரியாலயத்தின் முன்பாக காலை 9 மணிக்கு குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கருத்து தெரிவித்த பொதுமக்கள்.

கிராம சேவகர் நியமிக்கப்பட்டு இரண்டரை வருடங்கள் கூட பூர்த்தி செய்யப்படுவதற்கு முன்பாக மாற்றப்படுகின்றார். அவர் எமது கிராமசேவகர் பிரிவில் சிறப்பான முறையில் இரவு, பகல் பாராது நேர்மையாக பணியாற்றியுள்ளார்.

எமது கிராமத்தில் கிரவல் அகழ்வு பணியில் ஈடுபடும் தனிப்பட்ட ஒருவருக்காக சில அரசியற் கட்சிகளின் செல்வாக்கினை வைத்துக் கொண்டு அடாத்தான முறையில் இவர் மாற்றப்படுவதை ஏற்கமுடியாது.

தனிப்பட்ட ஒருவர் மண் அகழ்வதற்கு கிராம சேவகர் அனுமதி வழங்காத காரணத்தாலேயே அவர் மாற்றப்படுவதாக நாம் சந்தேகிக்கின்றோம்.

ஒரு நபருக்காக கிராம சேவகர் மாற்றப்பட்டால் சாதாரண மக்களின் நிலையை பாருங்கள். எனவே அவரை மாற்றுவதற்கான உறுதியான காரணத்தை எமக்கு தெரிவிக்க வேண்டும். அவரை மீளவும் நியமிக்கும் வரை வேறு எந்த கிராம சேவகரையும் இங்கு கடமையாற்ற அனுமதிக்கமாட்டோம்.

## அச்சுவேலி உளவிக்குளம் பிள்ளையார் கோயில் பாலம், மதவுக்கான அடிக்கல் நாட்டல்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிதி



யாழ். அச்சுவேலி உளவிக்குளம் பிள்ளையார் கோயில் பாலம் மற்றும் மதவு அமைப்பதற்கான அடிக்கல்லை கடற்றொழில்அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா நேற்று நாட்டி வைத்து கட்டுமானப்பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

அச்சுவேலியில் நடைபெற்ற இந்நிகழ்வில் சரஸ்வதி வித்தியாலயத்தை இணைக்கும் உளவிக்குளம் பிள்ளையார் கோவில் பாலத்தையும் அதனோடு இணைந்த மதவையும் அமைக்கும் பணிகளை பிரதமரும், தேசிய நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாதத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் அச்சுவேலி பிரதேச சபை தவிசாளர் நிரோஷ் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு நிர்வாக மற்றும் அச்சுவேலி இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கொழுந்து சஞ்சிகையின் ஆசிரியர் அந்தோனி ஜீவா, மூத்த நடிகை ஜெயகௌரி ஆகியோருக்கு புரவலர் ஹாசிம் உமர் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவியை அவரின் சார்பாக புதிய அலைக் கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதா மேத்தா கலைஞர்களின் இல்லத்துக்கு சென்று வழங்கி வைப்பதையும் அருகில் மூத்த நடிகை பிரியா ஜெயந்தி சிவரஞ்சன் ஆகியோரையும் காணலாம்.

# அயல்நாட்டு செய்திகள்



**கொரோனா பரவல் அதிகரிப்பு**

## மாநில முதல்வர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை



கொரோனா பரவல் அதிகரிப்பு குறித்து மாநில முதல்வர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலமாக ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

தமிழகம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட பெரும்பாலான மாநிலங்களில் கொரோனா பாதிப்பு கடந்த ஒரு சில தினங்களாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் பிரதமர் நரேந்திர மோடி, தமிழகம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களின் முதல்வர்கள் அல்லது பிரதிநிதிகளுடன் காணொலி மூலமாக ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, சுகாதாரத்துறை அமைச்சர் ஹர்ஷ வர்தன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டுள்ளனர். மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்துவ வன்னியர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும்

### திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்

கிறிஸ்துவ வன்னியா்களுக்குத் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர்களை ஆதரித்து ஸ்டாலின் புதன்கிழமை பிரசாரம் மேற்கொண்டார். வட மதுரையில் நடைபெற்ற இந்த பிரசார கூட்டத்தில் ஸ்டாலின் பேசியதாவது,

ஆட்சி பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களைப் பற்றி சிந்திப்பது திமுக மட்டுமே. 50 ஆண்டுகளாக பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நான் இன்றைக்கு முதல்வர் வேட்பாளராக வந்துள்ளேன். பத்தாண்டுகளாக பாழ்பட்டுள்ள ஆட்சியை அகற்ற வேண்டும். பழனிசாமி பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகிறார். திமுக ஆட்சியில் விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்குவோம் என அறிவித்துவிட்டு வழங்கவில்லை என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

ஆனால் கடந்த 2006 இல் முதல்வராக பொறுப்பேற்ற கருணாநிதி 1.89 இலட்சம் ஏக்கர் நிலத்தை 1.59 இலட்சம் பேருக்கு வழங்கினார். இந்த உண்மையை நிரூபிக்க நான் தயாராக உள்ளேன். சவாலை ஏற்க முதல்வர் பழனிசாமி தயாராக உள்ளாரா.

ஜெயலலிதா முதல்வராக இருந்த வரைநீட்தேர்வு தமிழகத்தில் நுழைய முடியவில்லை. ஆனால், தற்போது நீட் தேர்வு வந்ததற்கு எடப்பாடி பழனிசாமி தான் காரணம். செல்லிடப் பேசி தருவதாக உறுதி அளித்தவர்கள் அதனை நிறைவேற்றவில்லை. மக்களை ஏமாற்றுவதற்காக ஹெலிகாப்டர், விமானம், ரயில் தருவதாக முதல்வர் பழனிசாமி கூறினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

## மௌலானா அயூபியின் சிறுமியுடனான நிக்கா: சமூக ஊடகங்களில் பலத்த எதிர்ப்பு

பலூசிஸ்தான் எம்.என்.ஏ மௌலானா சலாவுதீன் அயூபியின் யுவதியுடனான நிக்கா சிக்கலில் இறங்கியுள்ளது, ஏனெனில் இது சிவில் சமூக உறுப்பினர்களால் எதிர்க்கப்பட்டு ஊடகங்களில் பரவலாகப் புகாரளிக்கப்படுகிறது.

சித்ராலைச் சேர்ந்த சிவில் சமூக ஆர்வலர்கள் திருமணத்திற்கு ஆட்சேபனை தெரிவித்ததோடு, அந்தப் பெண்ணுக்கு 14 வயதாகிவிட்டதாக பொலிஸாருக்கு அறிக்கை அளிக்கப்பட்டது. பின்னர், பாகிஸ்தானின் பிற பகுதிகளில் உள்ள சிவில் சமூக அமைப்புகளால் இந்த விவகாரம் விசாரணைக்கு கோரப்பட்டது. இந்த விவகாரம் தேசிய சட்டமன்றத்திலும் எழுப்பப்பட்டது.

புதிய விவரங்களின்படி, பெத்வாரில் அயூபியுடன் தனது நிகா நிகழ்த்தப்பட்ட நாளான பிப்ரவரி 15 அன்று நாத்ரா சிறுமியின் வயது 18 வயதைக் காட்டும் சி.என்.ஐ.சி. முன்பு குறிப்பிட்டது போல சித்ரலில் நிகா நிகழ்த்தப்படவில்லை. நிக்காவிற்காகவும், தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காகவும் அவர் பெஷாவருக்கு அழைத்து வரப்பட்டார்.



சரியான திருமண விழாவை ஏற்பாடு செய்வதற்கு முன்னர் காவல்துறையினரிடம் கேட்பேன் என்று சிறுமியின் தந்தை எழுத்துப்பூர்வமாக உறுதி அளித்ததாக சோனியா ஷாம்ரோஸ் மேற்கோளிட்டுள்ளார்.முன்னதாகத்ரோஷ்தெஹ்ஸில் ஜுகூருக்கு சொந்தமான தந்தை, சிறுமி நிக்காவிற்கு சம்மதித்ததாக கூறியிருந்தார்.

## மதுவிலக்கு, இந்தி திணிப்பு எதிர்ப்பு: மதிமுக தேர்தல் அறிக்கை வெளியீடு

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ நேற்று சென்னையில் உள்ள தலைமை அலுவலகத்தில் கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் அறிக்கையில்,இந்தி, சமஸ்கிருத மொழித் திணிப்பை எதிர்ப்போம், தமிழகத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்படும், தமிழகத்தில் தமிழர்களுக்கே வேலை, நீட் தேர்வு இரத்து, குடியுரிமைத் திருத்தச் சட்டம் இரத்து, தமிழீழம் அமைவதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்த நடவடிக்கை என்பன உட்பட வாக்குறுதிகளுடன் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தமிழை மத்தியில் ஆட்சி மொழியாகவும், நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகவும் அறிவிக்க, வேளாண் சட்டங்களை திரும்பப் பெற பாடுபடுவோம், எழுவர் விடுதலை, வேளாண் சட்டங்கள் இரத்து உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 6 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



# மேல் மாகாணத்தில் கொவிட்–19 விழிப்புணர்வுப் பிரசாரம் லைஃப்போய் - ஸ்ரீலங்கா பொலிஸ் இணைந்து நடவடிக்கை



கொவிட்19 தொற்று நோய்க்கு எதிரான முயற்சிகளுக்கு தொடர்ந்தும் உதவிவரும் லைஃவ்போய், மேல் மாகாணத்தில் விரிவான விழிப்புணர்வுப் பிராச்சாரங்களை முன்னெடுப்பதற்காக ஸ்ரீலங்கா பொலிஸ் திணைக்களத்துடன் அண்மையில் கூட்டுச் சேர்ந்துள்ளது.

லைஃவ்போய் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் ஒன்றிணைந்து, சமூக இடைவெளி பேணல், முகக் கவசங்களை அணிதல், கைகளைக் கழுவுதல் மற்றும் அடிக்கடி கை சுத்திகரிப்பான் திரவங்களை உபயோகித்து கைகளைச் சுத்தப்படுத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் ஏனைய சுகாதார மற்றும் சுத்தம் தொடர்பான வழிகாட்டல்கள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் வலியுறுத்துவதில் ஈடுபடுகின்றனர். லைஃவ்போய் விடுக்கும் கொவிட் 19 தொடர்பான அறிவூட்டல் துண்டுப்பிரசுரங்கள் இந்த மாகாணத்தில் 108 பொலிஸ் பிரிவுகள் மத்தியில் 300,000 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் நிலையில், இவ்விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் கீழ் பிராந்தியத்திலுள்ள 885 பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில்,யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனது லைஃவ்போய் வர்த்தகநாமத்தின் மூலமாக கொவிட்19 தொடர்பான எமது விழிப்புணர்வு முன்னெடுப்பிற்கு ஆதரவை நீடித்துள்ளமைக்காக அந்நிறுவனத்திற்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மக்கள் வீடுகளை விட்டு வெளியே வருவது அதிகரித்து வருவதுடன், பாடசாலைகளும் மீள ஆரம்பிக்கப்பட்டு வருகின்ற நிலையில், தொற்று நோயின் ஆபத்து இன்னமும் எம்மத்தியில் உள்ளது என்பதை நாம் தொடர்ச்சியாக நினைவில் கொள்ளல் வேண்டும். சுகாதாரத்துறை நிபுணர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றி, சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்ற இத்தகைய செயற்திட்டங்கள் மூலமாக நாம் மக்களை தொடர்ந்தும் அறிவூட்டி வருகின்றோம். உயிர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எமது அர்ப்பணிப்பைப் பகிர்ந்துகொள்கின்ற யூனிலீவர் போன்ற நிறுவனங்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்துவது இன்னும் அதிக எண்ணிக்கையான இலங்கை மக்களுக்கு இச்செய்தியை எடுத்துச்செல்ல உதவுவதாக குறிப்பிட்டார்.

# ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்சுக்கு விருது வழங்கி கௌரவிப்பு




இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் காப்புறுதி சேவை வழங்குநரும், டிஜிட்டல் துறையில் புத்தாக்கமான சேவைகளை வழங்கும் காப்புறுதி சேவையாளருமான ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு, SLIM Digis 2020 விருதுகள் வழங்கும் நிகழ்வில் காப்புறுதிப் பிரிவில் தங்க விருதும், சகல பிரிவுகளிலும் சிறந்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் புத்தாக்கத்துக்கான வெள்ளி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு இலங்கை சந்தைப்படுத்தல் கல்வியகத்தினால் (SLIM) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமது தொழில்நுட்பம் அல்லது தொடர்பாடல்கள் என சகல பிரிவுகளினூடாகவும், புத்தாக்கத்தை நோக்கி தொடர்ச்சியான பயணத்தை ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் பதிவு செய்திருந்தது. மக்களின் வியாபாரமாக திகழ்வதுடன், தாம் இயங்கும் மக்களின் பார்வையினூடாக உலகைக் கண்டதுடன், புதிய வழமையை பின்பற்றி அவர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்கு புத்தாக்கமான சேவைகளையும் வழங்கியிருந்தது.

எனவே, ஃபெயார்ஃபஸ்ட் வழியில் விடயங்களை முன்னெடுப்பதனூடாக, எதிர்காலத்துக்கு தயாரான வர்த்தக நாமமாக ஃபெயார்ஃபஸ்ட் திகழ்வதுடன், மூன்று தசாப்த காலப்பகுதிக்கு மேலாக எவ்விதமான புத்தாக்கத்தையும் அல்லது புத்துணர்வையும் காணாத துறையில் விருப்பத்துக்குரிய தெரிவாக அமைந்துள்ளது. ஃபெயார்ஃபஸ்ட் வழியில், வடிவமைப்புடனான சிந்தனையுடன் கூடிய புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியாக மாறியிருந்ததுடன், வினைத்திறன் வாய்ந்த தொடர்பாடல்களுக்குரிய கட்டமைப்பை ஏற்படுத்தி நேர்த்தியான தகவல்களை உறுதி செய்து சமூகத்துக்கு உறுதி செய்யப்பட்ட மூலத்தை ஏற்படுத்தியிருந்தது.

உலகத் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாவனையாளர் பயணத்தை மீளமைத்திருந்ததுடன், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்காளர்கள் மற்றும் சமூகத்துக்கு வாழ்க்கையை மகிழக்கூடிய வகையில் அமைத்திருந்தது.

# வடமாகாணத்திற்கான வலையமைப்பு மேம்பாட்டை பூர்த்தி செய்தது Airtel

இலங்கையிலுள்ள இளைஞர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமடைந்துள்ள தொலைத் தொடர்பு நிறுவனமான எயார்டெல் லங்கா, வட மாகாணம் முழுவதும் பாவனையாளர் அனுபவத்தை துரிதமாக மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு 900 MHz ஒலி அலைக்கற்றை இலக்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

புதிய ஒலி அலைக்கற்றையை (Spectrum) பயன்படுத்துவது மேம்பட்ட வலையமைப்பு அனுபவத்தை பாவனையாளர்களுக்கு ஏற்படுத்துவதோடு, அதனூடாக புவியியல் ரீதியாக விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட வட மாகாணத்திலுள்ள மக்களுக்கு முழுமையான தொலைத் தொடர்பு வலையமைப்பு வசதிகளை பெற்றுக் கொடுக்க முடியுமென்பது விசேட விடயமாகும். இந்த வலையமைப்பு மேம்பாடானது அந்த பகுதியில் Airtel 4G சேவைகளை எதிர்பார்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த எயார்டெல் லங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஆஷீஷ் சந்திரா, “புதிய ஒலி அலைக் கற்றையை (Spectrum) பயன்படுத்தப்படுவது எமது வளர்ச்சி மூலோபாயத்திற்கு முக்கியமானது. Spectrum சிறந்த உள்ளக அனுபவத்தை செயல்படுத்த சிறந்த சமிக்ஞை ஊடுருவலை அனுமதிப்பதுடன் எமது அதிர்வெண் அலைவரிசைகள் மீதான திறனை விடுவிக்கிறது, இதன் மூலம் பிராந்தியத்தின் பாரிய மக்கள் தொகையில் அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்ய எமக்கு உதவுகிறது.” என தெரிவித்தார்.பாவனையாளர் அனுபவத்தை உச்ச அளவிற்கு கொண்டு செல்வதற்கு இந்த மேம்பாடுகளானது எயார்டெல் லங்காவினால் முன்னெடுக்கப்பட்ட மிக முக்கிய மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலகளாவிய விலைகள் அதிகரித்தபோதிலும் நிர்ணயிக்கப்பட்ட விலையை பேணும் லிற்ரோ கேஸ்




கொவிட்19 தொற்று நோய் ஆனது உலகளாவிய ரீதியில் சந்தைகளை பாதித்ததுடன் நாணய ஏற்ற இறக்கங்கள் இடம் பிடித்து வருவதால் உலகில் அதிகளவு பரந்தளவில் பயன்படுத்தப்படும் சக்தி மூலங்களில் ஒன்றான திரவ பெற்றோலிய வாயுவின் உலகளாவிய விலையானது உலகம் முழுவதும் நிலையற்றதானது.

ஆர்கஸ் சுயாதீன பொருள் விலை அறிக்கையிடல் முகவர் நிறுவனத்துக்கிணங்க , எரிசக்தி மற்றும் பொருள் விலை நிர்ணயங்களின் முன்னணி சுயாதீன வழங்குநர், விலைகள் உயர்வு மற்றும் நிச்சயமற்ற பொருளாதார முன்னறிவிப்புகள் உலகளவில் திரவ பெற்றோலிய வாயு தொழில்துறையை மறைக்கின்றன.

ஆர்கஸ் விலை நிர்ணய அளவுகோல் "ஆர்கஸ் தூர கிழக்கு சுட்டெண்" ஆசியாவில் பரவலாக பயன்படுத்தப்படும் அதேவேளை சவூதி அராம்கோ சுட்டெண் இலங்கை போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையில் தேசிய திரவ பெற்றோலிய வாயுவான லிற்ரோ கேஸ் லங்காவானது கௌரவம் மிகுந்த ஜனாதிபதியின் ''வளம் மற்றும் மேன்மைக்கான நோக்கு'' எனும் நாட்டின் பொருளாதார நோக்கத்திணங்க நிலையான விலைகளை மாறாமல் பேணுகிறது, என லிற்ரோ கேஸ் லங்கா லிமிட்டெட் இன் தலைவரும் பிரதம நிறைவேற்றதிகாரியுமான அனில் கொஸ்வத்த தெரிவித்தார்.

' இலங்கையில் திரவ பெற்றோலிய வாயுவானது மிக உயர்வானதாக திகழ்வதுடன் இது ஒரு பொருளாதார குறியீட்டாளர் என்ற நிலையில் வீடுகளில் சமையலுக்கும் மற்றும் பன்முக துறைகள் இயங்குவதற்கும் காரணமாகிறது.

நாட்டுக்கான அரசாங்கத்தின் தொலை நோக்குப் பார்வையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இறுதிப் பயனாளிக்கு பொருளாதார நலன்களை வழங்குவதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்துள்ளோம்.இதன் விளைவாக நாணய ஏற்றத்தாழ்வுகளுடன் திரவ பெற்றோலிய வாயுவின் விலைகள் உலகளாவிய ரீதியில் உயர்ந்தாலும் இந்த தொலைநோக்குக்கிணங்க நாம் மாறாமல் எமது விலைகளை பேணுகிறோம்.''எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பணிப்பாளர் சபையின் பெண் தலைமைத்துவ சாதனைகளைக் கொண்டாடுகின்றது Baurs





பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், இலங்கையின் முன்னணி பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரக் குழுமமான Baurs என அழைக்கப்படும் ஏ.பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட், தனது பணிப்பாளர் சபையிலும், நிறைவேற்று தலைமைத்துவ பதவிகளிலும் பெண்களைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை கௌரவித்து சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடியது.

கூட்டாண்மைத் துறையில் உயர்ந்த பதவிகளுக்கு பெண்கள் செல்லும் போது, அவர்கள் குறைந்தளவு பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றனர் என்பதை பல்வேறு ஆய்வுகளினூடாக கண்டறியப்பட்டிருந்தது. பாலின சமத்துவத்தைப் பேணுவதிலும், குறிப்பாக நிறுவனம் முழுவதிலும் பதவி நிலைகளில் வேறுபாடின்றி இந்த சமத்துவத்தைக் கொண்டிருப்பதிலும் Baurs அதிகளவு பெருமை கொள்கின்றது. அதன் பிரகாரம் தனது பணிப்பாளர் சபையின் இரு அங்கத்தவர்களான தகவல் தொழில்நுட்ப பிரிவின் பணிப்பாளர் அனோஜா பஸ்நாயக்க மற்றும் நிதியியல் பிரிவின் பணிப்பாளர் பவித்ரா சமரசிங்க ஆகியோரின் சாதனைகளை கௌரவித்துக் கொண்டாடியிருந்தது.

தனது பிரதான பெறுமதிகள் மற்றும் நோக்கத்துக்கு உண்மையாகத் திகழும் வகையில் Baurs தொடர்ச்சியாக சமகாலத்துக்கேற்ப மற்றும் வளர்ந்து வரும் வியாபார கட்டமைப்புகளில் தொடர்ச்சியாக வளர்ந்து வருகின்றது. சமத்துவம், பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் புத்தாக்கம் ஆகிய கலாசார அம்சங்களை நிறுவனம் ஊக்குவிக்கின்றது.

Baurs இல் அஜோனா பஸ்நாயக்கவின் பயணம் என்பது 12 வருடங்களாக தொடர்கின்றது. 2008 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பிரிவின் முகாமையாளராக இணைந்து கொண்டார். இவர் தற்போது Baurs இல் குழும டிஜிட்டல் மாற்றியமைப்பு தந்திரோபாய செயற்பாடுகளுக்கு தலைமைத்துவமளிக்கின்றார்.

“Baurs உடனான எனது பயணத்தில், பெண்கள் துணிவான முடிவுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கப்பட்டிருந்ததுடன், தன்னம்பிக்கையை கட்டியெழுப்பும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஊக்குவிக்கப்பட்டிருந்தேன். ஒருவர் எந்த பாலினத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்கப்பட்டு, தீர்மானமெடுத்தல்களில் பங்களிப்பு வழங்குவதற்கும் உறுதியளிக்கப்படும்.” என்றார்.

# இலங்கையில் அதிகம் விரும்பப்படும் 10 நிறுவனங்கள் வரிசையில் SLT



160 வருட காலத்துக்கு மேலான வரலாற்றைக் கொண்டு, இலங்கையர்களுக்கு தொடர்ச்சியாக தொடர்பாடல்கள் வலுவூட்டலை வழங்கும் ஸ்ரீ லங்கா ரெலிகொம், இலங்கையில் அதிகம் விரும்பப்படும் 10 நிறுவனங்கள் வரிசையில் ஒன்றாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் சிறந்த நிதியியல் சாதனைகளினூடாக முன்மாதிரியாக திகழ்கின்றமை மற்றும் சமூகத்துக்கு பெறுமதி வாய்ந்த பங்களிப்பை வழங்குகின்றமை போன்றவற்றின் காரணமாக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச வர்த்தக சம்மேளனம் மற்றும் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் கல்வியகம் ஆகியவற்றினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வாக அதிகளவு விரும்பப்படும் நிறுவனங்கள் விருதுகள் அமைந்துள்ளது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

SLT இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன மற்றும் SLT இன் பிரதம நிறைவேற்று அதிகாரி கித்தி பெரேரா ஆகியோர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவிடமிருந்து விருதைப் பெற்றுக் கொள்கின்றார்.

# ஆரம்பகால Etisalat 072 சந்தாதாரர்கள் தங்கள் சிம் அட்டைகளை மேம்படுத்தக் கோரிக்கை

தற்போது HUTCH வலையமைப்பில் உள்ள ஆரம்பகால Etisalat 072 வாடிக்கையாளர்கள், தங்களது தற்போதைய சிம் அட்டைகளை கூடிய விரைவில் Hutch 072 சிம் அட்டைகளுக்கு மேம்படுத்துமாறு Hutch வேண்டுகோள் விடுக்கின்றது. ஏனெனில், இவை விரைவில் காலாவதியாகிவிடும் என்பதுடன், செப்டம்பர் 2021 க்குப் பிறகு பயன்படுத்த முடியாமல் போகும்.

இந்த அறிவிப்பின்படி, இதுவரை தங்கள் சிம்மை மேம்படுத்தாத ஆரம்பகால Etisalat வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் 4000+ Hutch சிம் மேம்படுத்தல் மையங்களில் சௌகரியமாக புதிய Hutch 072 சிம்மிற்கு மேம்படுத்திக் கொள்ள முடியும். வாடிக்கையாளர்கள் மொபைல் அல்லது ஒன்லைனில் ஓர்டர் செய்து தபால் மூலம் தங்கள் வீட்டு வாசலுக்கே புதிய சிம்மை பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கை விடுத்து 3 5 நாட்களுக்குள் சிம் விநியோகிக்கப்படும்.

ஒவ்வொரு சிம் மேம்படுத்தலுடனும், வாடிக்கையாளர்களுக்கு ரூ. 500 போனஸ் வழங்கப்படுவதுடன், ஒரு வாரத்திற்கு குரல், தரவு மற்றும் எஸ்.எம்.எஸ் சேவைகளுக்கு இதனைப் பயன்படுத்த முடியும்.

இந்த முயற்சியின் மூலம், HUTCH தனது 072 & 078 சந்தாதாரர்களை ஒரு ஒருங்கிணைந்த சேவை அமைப்பின் கீழ் கொண்டுவர திட்டமிட்டுள்ளதுடன் அதன் புதிய ஸ்மார்ட் வியாபார திட்டத்தின் மூலம் சமமான நன்மைகளையும் வழங்குகிறது.

புதிய ஸ்மார்ட் பிரசாரமான “Yanko, Vango, Let’s Go Smart with HUTCH” என்பது மற்றொரு முன்னோடி முயற்சியாகும். இது இலங்கையர்கள் அனைவரையும் அவர்கள் நினைக்கும், வாழும், செயல்படும் விதத்தில் ஸ்மார்டாக இருக்க ஊக்குவிக்கிறது.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

நிதி அமைச்சு

**இலங்கை சுங்கம்**

**230 பிரத்தியேக கணனிகளை வழங்கல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

1. இலங்கை சுங்கத்திற்காக 230 பிரத்தியேக கணனிகளின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுங்க பணிப்பாளர் நாயகத்தின் சார்பாக, திணைக்கள பெறுகை குழுத் (கீழ் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் மற்றும் விளக்கம் | விலைமனுப் பிணைத் தொகை (இலங்கை ரூபாவில்) | விலைமனு மூடல் | |
|---|---|---|---|---|
| | | | திகதி | நேரம் |
| Log/S/09/ Com/2021 | 230 பிரத்தியேக கணனிகளின் பெறுகை | 500,000.00 | 2021.04.09 ஆம் திகதியன்று | பி.ப. 2 மணிக்கு |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 2021 ஏப்ரல் 07 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இலங்கை சுங்கம், 2 ஆம் மாடியிலுள்ள பிரதான சிறாப்பரிடம் 3000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
4. 2021 ஏப்ரல் 09 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கொழும்பு-11, பிரதான வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள சுங்க இல்லம், இலங்கை சுங்கத் திணைக்களத்தின் 6 ஆம் மாடியிலுள்ள லொஜிஸ்டிக்ஸ் பணியகம், லொஜிஸ்டிக்ஸ் இற்கான சுங்கப் பணிப்பாளரிடத்தில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை சுங்கத் திணைக்கள லொஜிஸ்டிக்ஸ் இற்கான பணிப்பாளரிடமிருந்து பெற்று 2021 மார்ச் 19 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் லொஜிஸ்டிக்ஸ் பணியகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ் மட்டம்),**
**இலங்கை சுங்கம்,**
**''சுங்க இல்லம் '',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**
**தொலைபேசி: 011-2221680**

# பெறுகை அறிவித்தல்

பண்டாரவளை மாநகர சபை

**இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி பண்டாரவளை நகரத்தில் அனுமதிக்கப்பட்ட வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் கட்டணங்களை அறவிடும் சேவைக்காக மென்பொருளை வடிவமைத்தல் மற்றும் அதனைச் செயற்படுத்தி வருமானத்தை சேகரிக்கும் சேவையைக் குத்தகைக்கு வழங்குதல்**

பண்டாரவளை மாநகர சபையின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் பண்டாரவளை நகரத்தின் வீதிகளில் நிறுவப்பட்டுள்ள 434 வாகனத் தரிப்பிட இடங்களில் நாளொன்றில் ஒரு இடத்தில் பண்டாரவளை மாநகர சபைக்கு 30.00 ஆகக் குறைந்த கட்டணம் மற்றும் ஒரு நாளில் ஈட்டும் வருமானத்தில் சராசரியாக 20% ஆகக் குறைந்த கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் இலத்திரனியல் ஊடகத்தைப் பயன்படுத்தி பண்டாரவளை நகரத்தில் அனுமதிக்கப்பட்ட வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களில் கட்டணங்களை அறவிடும் சேவைக்காக மென்பொருளை வடிவமைத்தல் மற்றும் அதனைச் செயற்படுத்தி வருமானத்தை சேகரிக்கும் சேவையைக் குத்தகைக்கு வழங்கும் பொருட்டு இலங்கைப் பிரஜைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்து இரட்டைக் கடித உறை முறையின் கீழ் இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக மீளளிக்கப்படாத 5,000.00 ரூபாவை விலைக்கோரல் மாதிரிப் படிவக் கட்டணமாக இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் மாநகர சபை சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து மாநகர சபையின் வருமானப் பிரிவிலிருந்து தேவையான மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது விலைமனுப் பிணை முறியாக இலங்கையில் செல்லுபடியாகும் பண அலகில் 200,000.00 ரூபாவை 2021-04-07ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் மாநகர சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விலைமனுக்கள் வழங்கப்படுதல் மற்றும் திறத்தல் பின்வரும் தினம் மற்றும் நேரங்களில் பண்டாரவளை மாநகர சபையில் இடம்பெறும்.
   I. விலைமனுக்கள் வழங்குதல் - 2021-03-18ஆம் திகதி முதல் 2021-04-07ஆம் திகதி வரை (வாரத்தின் வேலை நாட்களில் பி.ப. 2.00 மணி வரை)
   II. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் -2021-04-08ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
   III. விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2021-04-08ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின் உடன் திறக்கப்படும்.

04. மேலும் இந்த விலைக்கோரல் தொடர்பிலான மேலதிக விபரங்களை மாநகர சபைக்கு வருகை தந்து அல்லது 057-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தில் மாநகர சபை ஆணையாளர் அல்லது மாநகர கணக்காளரைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**2021-03-12ஆம் திகதி**
**பண்டாரவளை மாநகர சபையில்.**

**ஜனக நிஷாந்த ரத்நாயக்க,**
**தலைவர் / பெறுகைக் குழு**

# பொருட்கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-75

## திருத்தம்

**Bid Reference No. SI 2021/20**

**தலைப்பு: Three Knife Cutter (Offline) 'உடனான ஒரு Perfecr Binding Machine இன் கொள்வனவு'**

தினகரன் பத்திரிகையில் 24.02.2021 அன்று வெளியிடப்பட்ட குறிப்பு எண் 'N-54' இன் அறிவிப்பு பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 25.03.2021ஆந் திகதி பி.ப. 2 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். ஏனைய நிபந்தனைகளில் எந்த மாற்றங்களும் இல்லை.

மேலதிக விபரங்களை, கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
**பொருட்கொள்வனவுக்குழுத் தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்ட்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 08.**
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளங்கள்: www.documents.gov.lk**
**16.03.2021**

# 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

## 39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2004 ஜூலை மாதம் 15 ஆம் திகதிய 1349/17 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2004.07.14 ஆம் திகதிய 2004 ஆம் ஆண்டின் 80 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளன, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும், பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் இருப்பாட்சி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. எனவே, அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், மேற்குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் 1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**எஸ்.எம். சந்திரசேன**
**காணி அமைச்சர்**

**எனது இல: 13/99/E/425**
**பிரதேச செயலாளரின் இல: ඉඳ/4/1/49 (DS/HAB/LAN/02/1/2)**
**காணி அமைச்சு**
**மிஹிகத்த மெதுர**
**இல. 1200/6 காணி செயலகம்,**
**இரஜமல்வத்தை வீதி**
**பத்தரமுல்லை**
**2020 ஒக்றோபர் 12.**

**அட்டவணை**

தெற்கு மாகாணம், காலி மாவட்டம், ஹபராதூவ பிரதேச செயலாளர் பிரிவில், இல 143, தொடம்பெ கிராம அலுவலர் பிரிவில், ஹினிட்டிகல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.11.26 ஆம் திகதிய கா 4436 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் காட்டப்பட்ட காணித் துண்டு

**01. துண்டு இல 02 - கொடவத்தை - விஸ்தீரணம் :0.2336 ஹெக்டயார்**

| | | |
|---|---|---|
| வடக்கு | - | இந்த வரைபடத்தின் துண்டு இல 1 |
| கிழக்கு | - | ஆ. வ.கா 48 இல் துண்டு இல 1 மற்றும் ஜி.ஜி.விமலசேன உரிமை கோரும் புஞ்சிகொடவத்தை |
| தெற்கு | - | வீதி (வீ.அ.அ), மற்றும் எம். ஜி.குனவத்தை மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் கொடவத்தை |
| மேற்கு | - | எம். ஜி.குனவத்தை மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் கொடவத்தை மற்றும் ஏ.பி.ஏ. டயஸ் உரிமை கோரும் வெனிவிலவத்தை |

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**
**7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இலக்கம் : DIVIB/LND/LADAQ/03/KHRW/06
காணி அமைச்சின் இல : 4-3/3/2017 NRD/488

கீழ்க்காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இந்த காணித்துண்டுகள் தொடர்பாக காணி எடுத்தற் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் உரிமைகள் குறித்த வினவல் நடாத்தப்படும் திகதி ஆரம்ப உரிமை கோருவோருக்கு தனித்தனியாக அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 2020 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 09ந் திகதி 2196/53 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் 111 ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : வடமேல் மாகாணம்
மாவட்டம் : குருணாகல்
பிரதேச செயலாளர் பிரிவு : இப்பாகமுவ
கிராம உத்தியோகத்தர் பிரிவு : இலக்கம் 504,கெந்தவல
கிராமத்தின் பெயர் : பல்லே கெந்தவல
இறுதி கிராம வரைபட இலக்கம் - இ.கி.வ.இல.2738,இ.கி.வ.இல.1253 மற்றும் இ.கி.வ.இல.1250
துண்டு இலக்கங்கள் : இ.கி.வ.இல.2738 ல் துண்டு இலக்கங்கள் - 843-846,848-875,891வரை(துண்டுகள்48), இ.கி.வ. இல.1253 ல் துண்டு இலக்கங்கள் 203-267 வரை (துண்டுகள்60), மற்றும் இ.கி.வ.இல.1250 ல் துண்டு இலக்கம் 01 ஆகியவை
விஸ்தீரணம் : ஹெக்டயார் 2.1547

**பிரதேச செயலாளர்**
**இப்பாகமுவ**

**2021.03.10**
**பிரதேச செயலகம்**
**இப்பாகமுவ**

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**
**7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

எனது இலக்கம் : DIVIB/LND /LADAQ /03KHRW121
காணி அமைச்சின் இல : 4-3/3/2018 NRD/87-A
4-3/3/2018/NRD/87

கீழ்க் காணும் உப அட்டவணையில் குறிப்பிடப்படும் காணித் துண்டுகள் ஒரு பொதுத் தேவைக்காக அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி 2210/19 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் IIIஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் : வடமேல் மாகாணம்
மாவட்டம் : குருணாகல்
பிரதேச செயலாளர் பிரிவு : இப்பாகமுவ
கிராம உத்தியோகத்தர் பிரிவு : இலக்கம் 522, பக்மீகொல்ல
இறுதி கிராம வரைபட இலக்கம் : இ.கி.வ.இல.1188 மற்றும் இ.கி.வ.இல.1189
துண்டு இலக்கங்கள் : இ.கி.வ.இல.1188 (6) 5ல் துண்டு இலக்கங்கள் - 15-115 வரை (துண்டுகள் 100),இ.கி.வ.இல.1189 (18) 16ல் துண்டு இலக்கங்கள் 107-131 வரை (துண்டுகள் 25),ஆகியவை
கிராமத்தின் பெயர் : பொலகம, யகல்ல பகுதிகள்
விஸ்தீரணம் : ஹெக்டயார் 4.3922 மற்றும் 2.6212

**வசன்தா வர்ணகுலசூரிய**
**பிரதேசசெயலாளர்,**
**இப்பாகமுவ.**

**2021.03.12**
**பிரதேச செயலகம், இப்பாகமுவ**

# இலங்கை வங்கி

## ஏல விலைகோரல்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை விநியோகிப்பதற்கு புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள் / விநியோகஸ்தர்கள் அல்லது அவர்களிடம் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைகூறல்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| ஏல விலைகூறல் இல. | P/PROC/2021/90 |
| பண்டம் / சேவைகளின் விபரம் | இலங்கை வங்கிக்காக கீழ்க் காணும் பொருட்களைக் கொள்வனவு செய்தல்<br>❒ 200 தோற்பைகள்<br>❒ 60,000 அப்பியாசக் கொப்பிகள் (80 பக்கங்கள்) |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா. 1,080/= (ரூ.1,000/- + ரூ.80/- VAT) |
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா. 50,000/= |
| கேள்விப்பத்திர ஆவணங்களை விநியோகிக்கும் கடைசித்திகதியும், நேரமும் | 2021.03.31 1500 மணி வரை |
| கேள்விப்பத்திரம் முடிவடையும் திகதியும் நேரமும் | 2021.04.01 1000 மணி வரை |

1. கேள்விப்பத்திர ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் 14ஆம் தளத்திலுள்ள, சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், கடமை தினங்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை எழுத்துமூலக் கோரிக்கையுடன் ரூபா. 1,080/- [ரூ. 1,000/- + ரூ. 80/- (VAT)] பெறுமதியான மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்களை இலங்கை வங்கியினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து (இலங்கை வங்கி அல்லாத) 2021.07.29 வரை செல்லுபடியானதும் மேற்குறிப்பிட்ட வகையில் கேள்விக்கு ஏற்ற பெறுமதியில் பெறப்பட்டதுமான வங்கி உத்தரவாதம் / ஏல விலைமுறியுடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏல விலைமுறிக்குப் பதிலாக, பணவைப்புகள், வங்கிக் கொடுப்பனவுக்கட்டளை, வங்கிக் காசோலை என்பனவும் ஏற்றுக் கொள்ளப்படும். (தனிப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.)
3. கேள்விப் பத்திரங்கள் குறித்த முடிவுத் திகதியன்று 1000 மணிக்குப் பின் உடனடியாகத் திறக்கப்படும். 1000 மணிக்குப் பின்னர் பெறப்படும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதோடு, திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கப்படும்.
4. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லாக் கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
5. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

இலங்கை வங்கி
BOC
BANK OF CEYLON
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்",
இல.01, இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2204265, 2544310

# பெறுகை அறிவித்தல்

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

## Laptop கணனிகள் 13 ஐ கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல்

கேள்வி இல : PRDA/WP/2020/PRO/12

இவ் அதிகார சபையின் அலுவலக தேவைப்பாடுகளுக்காக Laptop கணனிகள் 13ஐ கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான வழங்கல்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் இருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதிகளை 2021.03.18 முதல் 2021.03.30 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை ரூ.1080.00 மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்படுத்தி, (பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக அல்லது வங்கி/காப்புறுதி பிணை மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. கேள்வி ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி 2021.03.31 ஆவலுடன், கேள்விகள் திறத்தல் அன்றே மு.ப.10.30 இற்கு இவ் அலுவலகத்தில் நடைபெறும்

04. அவ் வேளையில் வழங்குநருக்கு அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே/மா)**
**இல.59, செ.செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**
**தொ.பே இல- 0115676903**
**2021.03.09**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Please Contact MANAGER FRONT OFFICE Hotline: 1949
LAKE HOUSE

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## மினுவாங்கொடை நகர சபை

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மினுவாங்கொடை நகர சபைக்குரித்தான இரண்டு கை டிராக்டர்கள் (பதிவுச் சான்றிதழ் சகிதம்) மற்றும் கொங்கிறீட் கலவை இயந்திரம் மற்றும் அதிர்வினால் தகடுகளை நசுக்கும் இயந்திரம் என்பவற்றை விற்பனை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2021-03-31ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இரண்டு கை டிராக்டர்கள் மற்றும் இரண்டு இயந்திரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணிவரை இந்த நகர சபைக்குரித்தான வாகனத் தரிப்பிடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுக்கள் 2021-03-31ஆம் திகதி மு.ப.10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத் தொகைகளைச் செலுத்துவதன் பேரில் ஒவ்வொரு விலைக்கோரலுக்குமுரித்தான விலைமனுப் படிவங்கள் மற்றும் விலைக்கோரல் நிபந்தனைகளை 2021-03-30ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை நகர சபையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்கள் இரு நகல்களில் பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு இயைபுடைய விலைக்கோரல் இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் விலைக்கோரலின் பெயரைக் குறிப்பிட்டு தலைவர், மினுவாங்கொட நகர சபை எனும் பெயருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நகர சபையில் இந்நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் மற்றும் பூரணமற்ற கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

எந்தவொரு கேள்விப் படிவத்தையும் ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை மினுவாங்கொட நகர சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களை 011-2295275 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக விசாரித்தறியலாம்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுதாரர் வாகனம் மற்றும் இயந்திரங்களுக்கு இயைபான தொகைகளைச் செலுத்தியதன் பின் அன்றைய தினமே வாகனங்கள் அல்லது இயந்திரத்தை அப்புறப்படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

| தொ. இல. | வாகனம் / இயந்திரம் | கேள்விப் பிணை ரூபா (மீளளிக்கப் படும்) | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | SN-3863 - கை டிராக்டர் Sefang | 250.00 | 1,000.00 | 25,000.00 |
| 02 | 73 - 4177 கை டிராக்டர் Kubota | 100.00 | 1,000.00 | 10,000.00 |
| 03 | கொங்கிறீட் கலவை இயந்திரம் | 100.00 | 1,000.00 | 10,000.00 |
| 04 | அதிர்வினால் தகடுகளை நசுக்கும் இயந்திரம் SAKAE | 25.00 | 1,000.00 | 2,500.00 |

**2021-03-15ஆம் திகதி**
**மினுவாங்கொட நகர சபையில்.**

**எச்.கே.என். நீல் ஜயசேக்கர,**
**தலைவர்,**
**நகர சபை, மினுவாங்கொட**

## சாதாரண அற்றோர்ணி தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்

கடவத்தை, மஹர, பங்களாவத்த, இல.23/5Bஐ வசிப்பிடமாகக் கொண்ட சஹபந்து முஹாந்திரம்கே டொன் சமன்த் இத்தமல் கஜபா (தே.அ.அ இலக்கம் 196420100581)ஆகிய நான் ஜாஎல, கலாஎலிய, பெரேரா வீதி, இல.14/5 என்ற முகவரியைச் சேர்ந்த வர்ணகுல தெஹிவலகே அஷேன் தினுப கொஸ்தா (தே.அ.அ இலக்கம் 982023521V) என்பவருக்கு வழங்கிய சட்டத்தரணி டப்ளியூ.லால் விக்ரமசிங்கவினால் ராகமவில் வைத்து 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 6688 உடைய சாதாரண அட்டோர்னி தத்துவப் பத்திரத்தை 2021.03.15 ஆம் திகதி இத்தால் இரத்துச் செய்கின்றேன் எனவும் மேலும், மேற்படி அற்றோர்ணி தத்துவக்காரரினால் குறித்த 2021.03.15ஆம் திகதிக்குப் பிறகு மேற்கொள்ளப்படக்கூடிய சகல நடவடிக்கைகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பு கூற மாட்டேன் எனவும் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறியத் தருகின்றேன்.

**சஹபந்து முஹாந்திரம்கே டொன் சமன்த் இத்தமல் கஜபா**

நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகார சபை

## திருத்தம் பற்றிய அறிவித்தல்

முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் (மாங்குளம் வீதி, கோவில்குடியிருப்பு) அமைந்துள்ள கடை அறைகளை மாதாந்த குத்தகை அடிப்படையில் 10 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுகோரல்

2021-03-15ஆம் திகதிய தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பிரசுரமான மேற்படி தலைப்பிலான விளம்பரத்தின் மாற்றுவழி 2 எனும் பந்தி பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும்.

**2.2 மாற்றுவழி 2**

I. யாராவது தரப்பினர் 15 கடை அறைகளுக்காகவும் ஒரே விலைக்கோரலில் விலைமனுவைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுவதானால், அதற்கான அடிப்படை விலை 8,600,000.00 ரூபாவாகும் என்பதுடன் அப்பெறுமதிக்கு மேலான விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கிடைக்கப்பெற்றுள்ள கூடிய விலைகளுக்கிடையில் அதிகூடிய பெறுமதி / விலைக்கோரலைக் கவனத்திற் கொண்டு குத்தகைதாரரைத் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்படும். இந்த முறையில் 15 கடை அறைகளுக்குமான மாதாந்த வாடகைத் தொகை 31,000.00 ரூபாவாகும் என்பதுடன் பிணை முறித் தொகை 246,400.00 ரூபாவாகும்.

**வருமான கேள்விச் சபை (சிறியது),**
**நகர அபிவிருத்தி அதிகார சபை.**

Repeat Your ad For Better Offers

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

*IFB No.: SPC/SU/L/2021/FI/12*

### நான்கு நிறங்களில் அச்சடிக்கும் Web Offset இயந்திரமொன்றின் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பயிற்சி வழங்கல்

- அச்சடிக்கும் இயந்திராதிகளின் பெறுகைக்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபனமானது மானியமொன்றை பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை நான்கு நிறங்களில் அச்சடிக்கும் Web Offset இயந்திரமொன்றின் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பயிற்சி வழங்கல் ஆகியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.
- மேலேயுள்ள கடன் ஒழுங்கின் கீழ், அரச அச்சக கூட்டுத்தாபனமானது தகுதியும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள், தர அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்கள் மூலமான இறக்குமதியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களிடமிருந்து நான்கு நிறங்களில் அச்சடிக்கும் Web Offset இயந்திரத்தின் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பயிற்சி வழங்கல் ஆகியவற்றிற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றது.
- விலைமனுதாரர் 1,300,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
- விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
- நிகரான தன்மையிலுள்ள இயந்திராதிகளின் வழங்கல், நிறுவுதல் மற்றும் பராமரித்தலில் ஆகக் குறைந்தது பத்து (10) வருட முன் அனுபவமுள்ள உரித்தான முதன்மையாளர்களின் சார்பாக விலைமனுக்கள் உள்ளூர் முகவர்களினால் சமர்ப்பிக்கப்படலாம்.
- பாதுக்க, பாணலுாவ, அரச அச்சக கூட்டுத்தாபனத்தில் 2021.03.29 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.
- மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான 20,000 ரூபாவைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டுடன் இணைக்கப்பட்டு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். 2021.03.18 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2021.04.07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு பொருத்தமாக இரு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அவையிரண்டும் இன்னொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரையிடப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **Bid for Web Offset Four Colour Printing Machine: SPC/SU/L/2021/F1/12** என அடையாளமிடப்பட்டு 2021.04.08 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பாதுக்க, பாணலுாவ, அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல்கள் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனு சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 2021.04.08 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பாணலுாவ, பாதுக்க.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை அரசாங்கம் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

### அமைச்சு பெறுகைக் குழு

### காலி மாவட்டத்தின் ("B" வலயம்) எல்பிட்டியவில் உத்தேசிக்கப்பட்டுள்ள கமத்தொழில் மற்றும் உணவு பதனிடும் வலயத்திற்கான வீதி நிர்மாண வேலைகள்

### ஒப்பந்த இல.: MPC/2021/02

1. கீழே விபரிக்கப்பட்டவாறு காலி மாவட்ட ("B" வலயம்) எல்பிட்டியவில் உத்தேசிக்கப்பட்டுள்ள கமத்தொழில் மற்றும் உணவு பதப்படுத்தல் வலயத்திற்கான வீதி நிர்மாண வேலைகளுக்காக, கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இப்பணியானது மீள்வலுவூட்டப்பட்ட மதகுகள் அடங்கலாக மண் வெட்டுதல் மற்றும் நிரப்பலுடனான வீதி நிர்மாண வேலையை அடக்குகின்றது. நிர்மாண காலப்பகுதியானது 180 நாட்காட்டி நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்காக, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   விஷேடத்துவம்: நெடுஞ்சாலை — தரம் சி-4 மற்றும் மேற்பட்டது (CIDA)
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

| வகுதி | தகைமை | அனுபவம் |
|---|---|---|
| வதிவிட பொறியியலாளர்/ தொழில்நுட்ப அலுவலர் முழுநேரம் | NDT(சிவில்) அல்லது நிகரானது | 10 வருடங்கள் |

   இந்த தேவைப்படுத்தலுக்கு அமைந்தொழுகுவதற்காக கடந்த 5 வருடங்களில் சிவில் வேலைகளை அடக்கியுள்ள நிகரான நிர்மாணத்தில் ஆகக் குறைந்தது ஒரு ஒப்பந்த அனுபவம். கடந்த ஐந்து வருடங்களில் நிர்மாண வேலையின் வருடாந்த சராசரிப் பெறுமதியானது ஆகக் குறைந்தது 150 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வேலை நேரங்களில் 0112078811 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அமைச்சின் பிரதான கணக்காளரிடமிருந்து பெற்று 2021.03.18 ஆம் திகதியிலிருந்து 2021.04.07ஆம் திகதி வரையும் அலுவலக நாட்களினால் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 35,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், பத்தரமுல்லயிலுள்ள அமைச்சின் கணக்கிடல் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது அமைச்சின் சிறாப்பரிடம் செலுத்திய பின்னர் பணப்பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. 2021.03.29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் 2,500,000 ரூபா பெறுமதியுள்ள விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதிலியிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து நிபந்தனையற்றதும் இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடியதுமான முறையில் இருத்தல் வேண்டும்.
9. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என இரு தனித்தனியான தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன குறிப்பிடப்பட்டு 2021.04.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ''கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபயிர்செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு இராஜாங்க அமைச்சின், தலைவரை வந்தடையும் வகையில் அமைச்சின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமாக பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் மற்றும் உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2021.04.05 ஆம் திகதி பி.ப. 2.05 மணிக்கு திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
10. அமைச்சு பெறுகைக் குழு/ அமைச்சு செயலாளர் அனைத்து விலைமனுக்களையும் அல்லது அதிலொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை கொண்டுள்ளனர்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**கரும்பு. சோளம், முந்திரி, மிளகு, கறுவா, வெற்றிலை**
**தொடர்பான கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி**
**மற்றும் ஊக்குவித்தல் இராஜாங்க அமைச்சு**
**16 ஆம் மாடி, சுஹுருபாய, பத்தரமுல்ல.**

it's what you want
www.adz.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிரதான செயலாளரின் செயலகம், கிழக்கு மாகாணம்

1. தனிநபரொருவராக அல்லது கம்பனியொன்றாக செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்களுக்கான 2021 ஆம் ஆண்டிற்காக பாதுகாப்புச் சேவைகள் மற்றும் சுகாதார சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக பிரதான செயலாளரின் பெறுகைக் குழுத்தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். பாதுகாப்புச் சேவைகளை வழங்கவுள்ள விலைமனுதாரர் பாதுகாப்பு அமைச்சுடனான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
2. 2021 மார்ச் 18 ஆம் திகதியிலிருந்து 2021 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையும் வேலை நேரங்களில் மீளளிக்கப்படாத கட்டணமான 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாண பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பிற்கான பிரதி பிரதான செயலாளரின் அலுவலகத்திற்கு அலுவலக நேரங்களில் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
3. பெறுகை முறைமையானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல், தனிக்கட்ட-தனி-உறை முறைமையிலாகும்.
4. விலைமனுதாரரொருவர் இரு பிரதிகளில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டுள்ளார். ஆர்வமுள்ள விலைமனுதாரர் விரும்பின், கையேற்பதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதுடன், மேலதிக தகவலை வரோதயநகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாண பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பிற்கான பிரதி பிரதான செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி இலக்கம்: 026-2222009).
5. கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுவானது இணைக்கப்பட்டு 2021 ஏப்ரல் 08 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிரதான செயலாளரின் பெறுகைக் குழு, பிரதான செயலாளரின் அலுவலகம், கிழக்கு மாகாணம், கண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. 2021 மார்ச் 29 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு திருகோணமலை, வரோதயநகர், கண்ணியா வீதி, கிழக்கு மாகாண பொறியியல் சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பிற்கான பிரதி பிரதான செயலாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. 26 ஆம் பக்கத்தின் III ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள மதிப்பிடல் மற்றும் தகைமை தகவுத்திறனின் அடிப்படையில் விலைமனுதாரர் தெரிவு செய்யப்படுவார்.
8. ஒப்பந்தத்தை வழங்குவதில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

**அட்டவணை**

| விலைமனு இலக்கம் | வேலையின் பெயர் | ஒப்பந்தக் காலப்பகுதி | விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி | விலைமனுப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை (ரூபாவில்) | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| EPC/SS/2021 | கிழக்கு மாகாண சபையின் நிறுவனங்களுக்கு பாதுகாப்பு சேவைகளை வழங்கல் - 2021 | ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 12 மாதங்கள் | 2021 ஜுலை 07 ஆம் திகதி வரையுமானது | 1,200,000.00 | 2021 ஓகஸ்ட் 04 ஆம் திகதி வரையுமானது. |
| EPC/JS/2021 | கிழக்கு மாகாண சபையின் நிறுவனங்களுக்கு சுகாதார சுத்திகரிப்புச் சேவைகளை வழங்கல் - 2021 | ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 12 மாதங்கள் | 2021 ஜுலை 07 ஆம் திகதி வரையுமானது | 630,000.00 | 2021 ஓகஸ்ட் 04 ஆம் திகதி வரையுமானது. |

**Thusitha P. Wanigasingha**
**தலைவர்,**
**பிரதான செயலாளரின் பெறுகைக் குழு,**
**பிரதான செயலாளரின் செயலகம்,**
**கண்ணியா வீதி.**
**வரோதய நகர்,**
**திருகோணமலை.**

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுவிற்கான அழைப்பு

## Supply of Printed Polythene Reel Type Packing Materials (PET/MET PET/LLDPE) for 250g Pack – 75,000 Kg to Sri Lanka Thriposha Limited

### Bid No.: SLTL/MKT/07/2021

1. ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதிக்கு 2021/2022 ஆகிய வருடங்களில் வ/ப இலங்கை திரிபோஷவிற்கு **Printed Polythene Reel Type Packing Materials (PET/MET PET/LLDPE) for 250g Pack – 75,000 Kg** ஐ வழங்குவதற்கு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வ/ப இலங்கை திரிபோஷவின் சார்பாக பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை + 94-0112236588 என்ற தொலைபேசி எண்ணினூடாக வ/ப இலங்கை திரிபோஷ இன் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. இந்த பெறுகையில் பங்குபெறுவதற்கு தகுதியுள்ள இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் **Printed Polythene Reel Type Packing Materials (PET/MET PET/LLDPE)** இன் உற்பத்தியாளர்கள் அல்லது ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர் ஆகியோருக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். இலங்கையில் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களை கொண்டிராத வெளிநாட்டு முகவராண்மையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5. ரொக்கப் பணத்தில் 13,400 இலங்கை ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஒப்பந்தங்களுக்கான பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு 2021.04.06 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, வ/ப இலங்கை திரிபோஷ இன் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் 2021.04.07 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுவானது 2021.04.07 ஆம் திகதியாகிய திறத்தலன்றிலிருந்து 2021.07.07 ஆம் திகதி வரையும் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 843,750 இலங்கை ரூபா பெறுமதிக்கானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுவின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை திறக்கும் திகதியாகிய 2021.04.07 ஆம் திகதியிலிருந்து 2021.08.04 ஆம் திகதி வரையுமான 119 நாட்களாகும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரமாகிய 2021.04.07 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு பின்னர் கீழேயுள்ள முகவரியில் விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**வ/ப இலங்கை திரிபோஷ**
**த.பெட்டி 17,**
**நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**
**தொலைபேசி இல.: + 94-0112236588/+ 94-0112237418**

# விலைமனுவிற்கான அழைப்பு

## Supply of Printed Corrugated Boxes (250g Master Packing) – 600,000 Nos. for Sri Lanka Thriposha Limited – 2021/2022

### Bid No.: SLTL/MKT/06/2021

1. வ/ப இலங்கை திரிபோஷவிற்கு Printed Corrugated பெட்டிகளை (250g Master Packing) – 600,000 ஐ 2021/ 2022 வருடங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியிலிருந்து 12 மாத காலப்பகுதிக்கு வழங்குவதற்கு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வ/ப இலங்கை திரிபோஷவின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் (உயர் மட்டம்) கோருகின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை +94-0112236588 என்ற தொலைபேசி எண்ணினூடாக சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
4. இந்த பெறுகையில் பங்குபெறுவதற்கு தகுதியுள்ள இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் Printed Corrugated Boxes இன் உற்பத்தியாளர்கள் அல்லது ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/ தரஅங்கீகாரம் பெற்ற முகவர் ஆகியோருக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். இலங்கையில் ஏகநியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்களை கொண்டிராத வெளிநாட்டு முகவராண்மையாளர்களிடமிருந்து விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
5. ரொக்கப் பணத்தில் 9,400 இலங்கை ரூபாவைச் செலுத்திய பின்னர், ஒப்பந்தங்களுக்கான பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 உடன் கீழேயுள்ள முகவரிக்கு 2021.04.06 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, வ/ப இலங்கை திரிபோஷ இன் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுக்கள் 2021.04.07 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் திகதியான 2021.04.07 ஆம் திகதியிலிருந்து 2021.07.07 ஆம் திகதி வரையும் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 540,000 ரூபா பெறுமதிக்கானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு அதாவது 2021.04.07 ஆம் திகதியிலிருந்து 2021.08.04 ஆம் திகதி வரையுமாகும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் (2021.04.07 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு) உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் விலைமனுதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகை குழு (உயர்மட்டம்),**
**வ/ப இலங்கை திரிபோஷ**
**த.பெட்டி 17,**
**நீர்கொழும்பு வீதி,**
**கப்புவத்த, ஜா-எல.**

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460ஆம் சட்டம்) 7ஆம் அத்தியாயத்தின் கீழ் அறிவித்தல்**

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2020-10-20ஆம் திகதிய 2198/11ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

எனது இலக்கம்: HR/LD/3/1/510-VIII
காணி அமைச்சின் இலக்கம்: 4-3/6/2017/HW/05

அட்டவணை

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் |
| மாவட்டம் | : களுத்துறை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ஹொரண |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 631 ஹாந்துபெல்பொல |
| கிராமம் | : ஹாந்துபெல்பொல மற்றும் வடக்கு உடுவ |
| ஆரம்ப வரைபட இல. | : ஆ.வ.க. 4772 |
| துண்டு இலக்கம் | : 01 முதல் 112 வரை |
| பரப்பளவு | : 8.7914 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர் மற்றும் சுவீகரித்தல் அதிகாரி,**
**ஹொரணை.**

**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ஹொரணை.**
**2021-03-05.**

# பெறுகை அறிவித்தல்

## கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை முல்லேரியா புதிய நகரம்

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கையின் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | COMPUTER | 15 |
| 02. | UPS | 19 |
| 03. | LASER PRINTER | 06 |
| 04. | DOT MATRIX PRINTER | LQ310 |
| 05. | DOT MATRIX LQ 2090 PRINTER | 01 |
| 06. | PHOTOCOPY MACHINE | 02 |
| 07. | SCANNER | 02 |
| 08. | LAPTOP | 01 |

**விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் -**
2021-04-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி

**விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் -**
2021-04-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி

இந்த விளம்பரம் தொடர்பான விலைமனு ஆவணங்கள் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் 3.00 மணிக்கிடையில் கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையின் அலுவலகத்தில் வழங்கப்படும்.

மேற்படி விலைக்கோரலுக்கான மீளளிக்கப் படாத 1500.00 ரூபா கட்டணம் அறவிடப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை,**
**முல்லேரியா புதிய நகரம்.**

# பன்னல பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

## 01. கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல்

பன்னல பிரதேச சபைக்குரித்தான பன்னல பஸ் நிலையத்தின் புதிய சந்தைக் கட்டிடத் தொகுதியின் மேல் மாடியிலுள்ள 05 கடை அறைகளுக்காக முன் கொடுப்பனவு (Key Money) அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் வழங்குதல் -
2021-03-16ஆம் திகதி முதல் 2021-03-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை

கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் -
2021-03-31ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை

கேள்விப் படிவங்கள் திறக்கப்படுதல் -
2021-03-31ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பிரதேச சபை பிரதான அலுவலகத்தில்

- அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வகையில் நிர்ணயிக்கப்பட்ட கேள்விப் பிணைத் தொகையை மற்றும் 1000.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தி ஒவ்வொரு கடை அறைக்கும் இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் கேள்விப் படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்பொருட்டு காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வகையில் கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளில் வழங்கப்படும் என்பதுடன் அந்த இரு நகல்களையும் வெவ்வேறு உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''கடை அறை இலக்கம்'' மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு செயலாளர், பன்னல பிரதேச சபை, பன்னல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**பெறுகை நிபந்தனைகள்**

- உடன்படிக்கையில் கையொப்பமிடும்போது, ஒரே தடவையில் கீ மணி தொகையாக மாதாந்த வாடகையின் 4 மடங்குக்குச் சமமான தொகையை பாதுகாப்பு வைப்பாக ஒரே தடவையில் 14 நாட்களுக்குள் வைப்புச் செய்து சபையுடன் உடன்படிக்கையொன்றுக்கு வருதல் வேண்டும். அவ்வாறு உடன்படிக்கை செய்துகொண்ட பின் சகல கேள்விதாரர்களின் கேள்விப் பிணையும் விடுவிக்கப்படும். (அரச மாதாந்த வாடகை மதிப்பீடு 02 வருடங்களுக்கு செயற்படுத்தும் கடப்பாடுடன்)
- விண்ணப்பதாரர் அல்லது அவரால் பெயரிடப்படும் ஒருவர் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்து கொள்ளலாம்.
- ஆகக் குறைந்த கேள்வித் தொகைக்கு (முன் கொடுப்பனவு பெறுமதிக்கு) குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
- படிவத்தை நிரப்பும்போது பிழைகள் ஏற்பட்டால் ஒற்றைக் கோட்டினால் வெட்டி சரிசெய்து சிற்றொப்பம் இடுதல் வேண்டும். (டிபெக்ஸ் பாவித்தல் கூடாது)
- எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பன்னல பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**அட்டவணை**

| கடை அறை | வியாபார நிலையத்தின் சதுர அடி அளவு | ஆகக் குறைந்த முன் கொடுப்பனவு (Key Money) தொகை (ரூபா சதம்) | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை (ரூபா சதம்) | மாதாந்த வாடகை (ரூபா சதம்) |
|---|---|---|---|---|
| மேல் மாடி 06 | 130 | 620,000.00 | 31,000.00 | 2,100.00 |
| மேல் மாடி 07 | 130 | 620,000.00 | 31,000.00 | 2,100.00 |
| மேல் மாடி 08 | 130 | 620,000.00 | 31,000.00 | 2,300.00 |
| மேல் மாடி 09 | 130 | 620,000.00 | 31,000.00 | 2,400.00 |

02. 2X3 / 3X5 வைட் போட்

03. காலால் செயற்படுத்தும் சிங்க் (முடிவுறுத்தலின் புகைப்படமொன்றை தயவு செய்து எமக்கு அனுப்புங்கள்)

04. 1000 மி.லீற்றர் நீர்த்தாங்கி

இது தொடர்பான மேலதிக விபரங்களை பன்னல பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 037-2246049/037-4947136

**எல்.எம்.எஸ்.கே. ரஞ்ஜித் லங்சகார,**
**தலைவர்,**
**பன்னல பிரதேச சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கல்வி அமைச்சு
## றுஹுணு பல்கலைக்கழகம்
## உயர் கல்வி மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி துரிதப்படுத்தல் செயற்றிட்டம் (AHEAD)

**றுஹுணு பல்கலைக்கழகத்திற்கு தளபாடம், ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் சூரியஒளி சக்தி முறைமையை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், செயற்படுத்தல் மற்றும் பரீட்சித்தல்**

**IFB No.: AHEAD/RUH/STEM03/GOODS/2021/01**

1. பின்வரும் அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்களின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை றுஹுணு பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் இப்போது கோருகின்றார்.

| பொதி இலக்கம் | அம்ச இல. | பண்டங்கள் / விளக்கங்கள் | அளவு | விலைமனுப் பிணை (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| 01. தளபாடம் | 1.1. | விரிவுரை மண்டப மேசை | 72 | 283,500.00 | 5,600.00 |
| | 1.2. | விரிவுரை மண்டப நீண்ட மர இருக்கை | 72 | | |
| | 1.3. | கணனி மர மேசைகள் | 70 | | |
| | 1.4 | கணனி கதிரைகள் | 70 | | |
| | 1.5 | பரீட்சை மேசை | 300 | | |
| 02. ஆய்வுகூட உபகரணங்கள் | 2.1 | Edspot Galvanometer | 10 | 42,000.00 | 1,250.00 |
| | 2.2. | Ice Flake Maker Machine (120L) | 01 | | |
| 03. ஏனையவை | 3.1. | Solar Power System | 01 | 172,500.00 | 4,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. 2021 ஏப்ரல் 5 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிகரான மீளளிக்கப்படாத கட்டணங்களை ரொக்கப் பணத்தில் மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக சிறாப்பரிடம் அல்லது மக்கள் வங்கியின் 032100112477589 என்ற கணக்கிலக்கத்திற்கு நிகரான மீளளிக்கப்படாத கட்டணத்தை வரவு வைத்த பின்னர் வங்கித் துண்டுடன் மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக செயற்பாடுகள் தொழில்நுட்ப செயலகத்தின் பெறுகைக்கான பிரதி பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்படலாம்.
4. விலைமனுக்கள் 2021 ஜூலை 08 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. இலங்கையில் செயற்படும் ஏற்றுக் கொள்ளத்தக்க வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட ஏற்புடையதான விலைமனுக்கோரல் பொதிகளுக்கு உரித்தான நிபந்தனையற்ற விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. 2021 ஓகஸ்ட் 05 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள விலைமனுப்பிணையானது துணைவேந்தர், றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
7. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினமானது 2021 ஏப்ரல் 8 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு அல்லது அதற்கு முன்னரானது.
8. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு, முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் பதிவுத் தபாலில் மேலேயுள்ள மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள மூடும் நேரத்திற்கு முன்னராக மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 2 ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். பெறுகைப் பெயர், இலக்கம் மற்றும் பொதி இலக்கம் ஆகியன தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
9. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியான என்ற அடிப்படையில் மதிப்பீடு மேற்கொள்ளப்படும்.
11. மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக மூதவை அறையில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் 2021 ஏப்ரல் 08 ஆம் திகதியன்று பி.ப. 1 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை மாத்தறை, வெல்லமடம, றுஹுணு பல்கலைக்கழக செயற்பாடுகளுக்கான தொழில்நுட்ப செயலக, பெறுகைக்கான பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்டு அலுவலக நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். (தொலைபேசி இலக்கங்கள்: 041-2227027, 041-2222681 நீடிப்பு. 2151)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகை குழு,**
**றுஹுணு பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**17.03.2021.**

# பெறுகை அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

## Bid for the purchase of a Line Boat

## B/24/2021

2021.04.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஐந்து (05) பயணிகளை எடுத்துச் செல்லும் ஆற்றலுடைய லைன் படகொன்றை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த உற்பத்தியாளர்கள், அவர்களின் வெளிநாட்டு ஏற்றுமதி முகவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகை குழுத் தலைவர் பெற்றுக் கொள்வார். இ.பெ.கூட்டுத்தாபன கடற்கரைக்கப்பாலுள்ள அமைப்புகளுக்கு பாதுகாப்பை வழங்குவதில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு போக்குவரத்து வழங்குவதே இந்த படகின் நோக்கமாகும்.

2021.04.06 ஆம் திகதி வரை மு.ப. 9 மணிக்கும் பி.ப.3மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமான 1000 ரூபாவை ஒவ்வொரு தொகுதிக்கும் (அதாவது ரூ.925.93+ 8% பெசேவ) செலுத்திய பின்னர் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-09, கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன 1 ஆம் மாடியிலுள்ள பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2021.04.07 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு அவைகளை மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

கோவிட்-19 தொற்று காரணமாக விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை http://ceypetco.gov.lk/public-tenders/ என்ற இ.பெ.கூ. இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாமென்பதுடன் அனைத்து பணக்கொடுப்பனவுகளும் மக்கள் வங்கி தலைமையலுவகத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். விலைமனுவுடன் வங்கி பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை தயவு செய்து சமர்ப்பிக்கவும்.

5455330 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது 5455424 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாக, தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், அவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609,**
**டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 011-5455330**
**தொலைநகல் : 011-5455424**

## இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம் – அனுராதபுரம்

### கேள்விகளுக்கான அழைப்பு

# தோட்டப் பராமரிப்பு மற்றும் நில அலங்கார சேவைகளை வழங்குதல் - 2021/2022

இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவரினால் 2021/2022ஆம் வருடங்களில் தோட்டப் பராமரிப்பு வேலைகள் மற்றும் நில அலங்கார சேவைகளை வழங்குவதற்காக தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்வி கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைய செயற்படுத்தப்படும்.
2. இந்த ஒப்பந்தத்திற்கான காலம் ஒரு வருடமாகும் (01).
3. தகைமை பெறும் கேள்விதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருத்தல் கூடாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளில் ஒன்றையேனும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   i. CIDA SP4 தகைமையைப் பெற்றுள்ள ஒப்பந்தக்காரராயிருத்தல்
   அல்லது
   ii. அங்கீகரிக்கப்பட்ட வியாபாரம் / கம்பனியொன்றாக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   அல்லது
   iii. பிரதேச செயலாளரின் கீழ் பதிவுபெற்ற செயற்பாட்டிலுள்ள மக்கள்மய அமைப்பாகவிருத்தல் வேண்டும். (மக்கள் அமைப்புக்காக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட ஆற்றல் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்)
4. கேள்விதாரர்கள் பின்வரும் சேவை அனுபவங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

   கடந்த 03 வருடங்களுக்கான சேவை அனுபவம் (குறைந்தபட்சம் இயைபுடைய துறைக்குச் சமமான கொள்ளளவுடனான 01 வருடகால சேவை அனுபவம் இதில் உள்ளடங்குதல் வேண்டும்)
5. இந்த பெறுகைக்குரித்தான இயைபான இந்த பல்கலைக்கழத்தின் இணையதளத்தில் (www.busl.ac.lk) அல்லது அலுவலக நேரத்தினுள் பொது நிர்வாகக் கிளைக்கு வருகை தந்து 2021-04-05ஆம் திகதி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. கேள்வி ஆவணங்கள் 2021-03-17ஆம் திகதி முதல் 2021-04-05ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரைக்கிடையில் இந்த பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகக் கிளையில் விநியோகிக்கப்படும். இதன்பொருட்டு மீளளிக்கப்படாத ஆயிரம் ரூபா (1,000.00) கேள்வி ஆவணக் கட்டணமொன்றை இந்த பல்கலைக்கழகத்தின் காசாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்து வேண்டுகோள் கடிதமொன்றுடன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (பொது நிர்வாகம்) அவர்களுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென இரண்டு பிரதிகளில் வெவ்வேறான உறைகளில் இட்டு குறித்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு 2021-04-06ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அனுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தோட்டப் பராமரிப்பு மற்றும் நில அலங்கார சேவைகளை வழங்குதல் 2021/2022'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2021-04-06ஆம் திகதி பி.ப. 2.15 மணிக்கு கேள்வி ஆவணங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளலாம்.
9. சகல கேள்விகளும் 2021-06-22ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. கேள்வி ஆவணங்களுடன் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட அறுபதினாயிரம் ரூபா (60,000.00 ரூபா) பெறுமதியான கேள்விப் பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது 2021-07-19ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
11. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2021-03-30ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தின் உறுதிப்படுத்தும் இல்ல கூட்ட மண்டபத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அனுராதபுரம்.**
**2021-03-17**

## சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

WP-AAS-0251 Bajaj, 2014, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 07 11 2108 10
020848

WP- BFX-7035 Hero maestro edge, 2017, motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி. இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210810
020849

**Repeat Your ad For Better Offers**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-78

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்வனவுக் குழுத் தலைவரால் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள்/ அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற இலங்கையில் உள்ள உள்ளூர் முகவர்களிடமிருந்தும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொரு(ள்)ட்கள் கொள்வனவு தொடர்பில் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2021.04.08ஆந் திகதி பி. ப. 2 மணி வரையாகும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்ததை உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும்.

**CTP Thermal Plate/ Replenisher/ Developer**

| Item No. | Quantity | Machine Type | Size (mm) |
|---|---|---|---|
| 1. CTP Themal Plate | 1500 Nos | SM 74 | 605x745 |
| 2. Replenisher (Thermal) | 360 Lts | | |
| 3. Developer (Thermal) | 960 Lts | | |

**Bid Reference No : SI. 2021/24**
**Bid Fee : Rs. 2,000.00**

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விலைமனு தொடர்பிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா **2,000.00** கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல்கள் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3 மணி வரை உரிய விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
பொருட்கொள்வனவு குழுத்தலைவர்.

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளங்கள் : www.documents.gov.lk**
**www.npa.gov.lk**

16.03.2021

## சந்தையிலுள்ள போலியான/மோசடியான F&G பாதுகாப்புக்கருவிகள் தொடர்பான எச்சரிக்கை அறிவித்தல்

Eaton House, 30 Pembroke Road, Dublin, Ireland ("Eaton") என்ற முகவரியில் கூட்டிணைப்புத் தலைமையகத்தைக் கொண்டுள்ள Eaton Corporation Plc., கம்பனி ஆகிய நாம், F&G என்ற தரவகையின்கீழ் பாதுகாப்புக் கருவிகளை தொடர்ந்தும் உற்பத்தி செய்வதில்லை என்பதனை பொதுமக்களுக்கும் உயர்மதிப்புக்குரிய எமது வாடிக்கையாளர்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கின்றோம். ஆயினும், இலங்கைச் சந்தையில் F&G தரவகையில் போலியான சில பாதுகாப்புக் கருவிகள் தொடர்ந்தும் விற்பனை செய்யப்பட்டு வருவதனை எமது புலனாய்வுகளின் அடிப்படையில் கண்டுபிடித்துள்ளோம். அவை போலியான அல்லது மோசடியான பாதுகாப்புக் கருவிகள் என்பதுடன், ஏமாற்றும்படியாக F&G இலட்சினை, EATON இலட்சினை, மற்றும் XPOLE இலட்சினை என்பவற்றை அவைகள் தெரியும்படியாகக் கொண்டிருப்பதுடன், அதற்கு Eaton கம்பனியினால் வடிவமைக்கப்படவோ உற்பத்தி செய்யப்பட்டிருக்கவோ இல்லை என்பதுடன் அவற்றுக்கு நாம் அனுமதிப் பத்திரமும் வழங்கியிருக்கவில்லை. அத்தைகைய போலியான உற்பத்திகள் பின்வரும் படங்களில் காட்டப்பட்டுள்ளன:



உங்களது பாதுகாப்பிற்காக, சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற F&G இலட்சினை, EATON இலட்சினை, மற்றும் XPOLE இலட்சினை பொறிக்கப்பட்ட அத்தகைய போலியான பாதுகாப்புக் கருவிகளை உபயோகிக்க வேண்டாமென உங்களை அறிவுறுத்துகின்றோம்.

மேலும், சந்தையில் F&G தரவகை அல்லது இலட்சினையின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற அத்தகைய போலியான பாதுகாப்புக் கருவிகளின் செயப்படு தன்மை மற்றும் பாதுகாப்பு தொடர்பில் Eaton கம்பனி அல்லது அதனுடைய ஏதேனும் கம்பனிக் குழுமம் எத்தகைய பொறுப்புடைமையையும் ஏற்றுக் கொள்ளமாட்டாது என்பதுடன் F&G இலட்சினை மற்றும் மாதிரி தரவகை உபயோகிக்கப்பட்டு சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற போலியான அத்தகைய பாதுகாப்புக் கருவிகளின் உபயோகம் அல்லது கையாள்கையின் விளைவால் எந்தவொரு ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் ஏற்படுகின்ற இழப்புகள், சேதங்கள் என்பவற்றிற்கும் எந்த விதத்திலும் பொறுப்புடைமையை ஏற்றுக் கொள்ளமாட்டாது என்றும் பொதுமக்கள் இத்தால் எச்சரிக்கப்படுகின்றனர்.

அத்தகைய F&G இலட்சினை அல்லது தரவகையின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற அத்தகைய போலியான பாதுகாப்புக் கருவிகளைக் கொள்வனவு செய்வதில் விசேட முன்னெச்சரிக்கையாக இருக்குமாறும், அவற்றைக் கொள்வனவு செய்வதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் உங்களை இத்தால் நாம் எச்சரிக்கின்றோம்.

Eaton கம்பனியானது அதனுடைய புலமைச்சொத்து உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளரது பாதுகாப்பு என்பவற்றிற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், Eaton கம்பனியின் நன்மதிப்பைப் பயன்படுத்தி பொதுமக்களை தவறான முறையில் வழிநடாத்துவதனால் Eaton கம்பனியினுடைய புலமைச்சொத்துக்களின் உரிமைகள் மீறப்படுகின்றன. எனவே Eaton கம்பனியினுடைய பெயரைப் பயன்படுத்தி போலியான உற்பத்திகளில் ஈடுபடுகின்ற எவறேனும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இலங்கையில் Eaton கம்பனியின் அதிகாரமளிக்கப்பட்ட கீழ்வரும் விநியோகஸ்த்தரிடமிருந்து தூய Eaton உற்பத்திகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

**Richardson Projects (Pvt) Ltd., No. 342 Galle Road, Colombo 3, Sri Lanka**

மேலே படத்தில் காட்டப்பட்ட அத்துமீறிய உற்பத்திகளை Richardson Projects (Pvt) Ltd. தவிர்ந்த வேறேதேனும் தரப்பிடமிருந்து நீங்கள் கொள்வனவு செய்திருந்தால், அத்தகைய உற்பத்தியாளர், விநியோகஸ்தர், அல்லது விற்பனையாளர் தொடர்பான தகவல்கள் ஏதேனும் உங்களிடமிருப்பின், அல்லது மேலுள்ள விடயம் தொடர்பாக உங்களிடம் ஏதேனும் விசாரணைகள் இருப்பின், Eaton House, 30 Pembroke Road, Dublin, Ireland என்ற முகவரியில் கூட்டிணைப்புத் தலைமையகத்தைக் கொண்டுள்ள Eaton Corporation Plc., கம்பனியின் சட்டத்தரணிகளிடம் தொடர்புகொள்ளலாம்:

**Hilborne, Hawkin & Co.**
**230 Commerce Drive, Suite 185**
**Irvine, California 92602**
**United States of America**
**Telephone: (714) 283-1155**
**Facsimile: (714) 283-1555**
**Email: info@hilbornehawkin.com**

# விலைமனுக் கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுத் திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம் ICB/NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/21/108<br>வாடகைக்கு வான்<br>மின் அத்தியட்சகர் (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 31-03-2021 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம் (அம்பாறை)<br>063-2222387, 063-2222078 அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666,026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/21/109<br>வாடகைக்கு வான்<br>மின் அத்தியட்சகர் (வர்த்தகம்)- பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>(இரண்டு வருட காலம்) | 31-03-2021 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666,026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக்குழுவின் தலைவர் சர்வதேச/தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை, பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிலக்கம் செய்யப்படலாம்.**

# சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி சீஹோக்ஸ், ரெட் ஸ்டார் அணிகள் வெற்றி



**வடகொழும்பு தினகரன், திருகோணமலை குறூப் நிருபர்கள்**

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பருவகால சுப்பர் லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சீஹோக்ஸ் ( கடற்படை) எதிர் ப்ளூ ஈகள்ஸ் மற்றும் கொட்டாஞ்சேனை ரட்ணம் அணி எதிர் இரத்மலானை ரெட் ஸ்டார் அணிகள் இடையிலான போட்டிகள் நேற்று முன்தினம் (16) சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்றன.

சீஹோக்ஸ் அணிக்காக போட்டியின் 3 ஆவது 9 ஆவது நிமிடங்களில் அவ் அணியின் வீரர் மொஹமட் ஹஸ்மீர் இருகோல்களை மிக இலகுவாக பெற்றார்.

புளு ஈகள்ஸ் அணியின் வீரர் ஜீவாநந்த பெர்ணான்டோ போட்டியின் 53 ஆவது நிமிடத்தில் ஒரு கோலை பெற்றுக் கொண்டார்.இப்போட்டியில் 2-1 என்ற வித்தியாசத்தில் சீஹோக்ஸ் அணியினர் வெற்றியை கைப்பற்றினர்.



இப்போட்டியின் ப்ளு ஈகள்ஸ் வீரர்களான நித்மாமல்ஷான் (20 ஆவது நிமிடம்) ஜீவாநந்த பெர்ணான்டோ (35 ஆவது நிமிடம்) சத்துரங்க பெர்ணான்டோ (39 ஆவது நிமிடம்)ஆகியோருக்கு போட்டியின் மத்தியஸ்தரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.

இப்போட்டியின் பின்னர் இரவு 7 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்ற கொட்டாஞ்சேனை ரட்ணம் அணியின் வீரர் ராஜ்குமார் சாந்தன் போட்டியின் ஆரம்பத்தின் 11 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை பெற்றநிலையில் இவ் அணியின் மற்றுமொரு வீரரான மொஹமட் ரஹ்மான் 60 ஆவது நிமிடத்தில் பெனால்ட்டி மூலமாக ஒருகோலை பெற்றுகொண்டார்.

இந்நிலையில் 2-1 என்ற கோல்கள் எண்ணிக்கையில் ரட்ணம் அணியினரை ரெட் ஸ்டார் அணியினர் தோல்வி அடையச்செய்தனர்.

இப்போட்டியின் போது ரெட்ஸ்டார் அணியின் வீரர் எம்.நெஸ்மான் (35 ஆவது நிமிடம்) ரட்ணம் அணியின் வீரர்களான ஏ.சி.ராஜ் (63 ஆவது நிமிடம்) வினோத்குமார் (70 ஆவது நிமிடம்) ஈ.எம்.றகுமான் (74 ஆவது நிமிடம்) ஆகிய வீரர்களுக்கு போட்டியின் மத்தியஸ்தரால் மஞ்சள் அட்டை காட்டப்பட்டது.





## சினேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் அணி வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

சாய்ந்தமருதின் முதிசங்களான பிரேவ் லீடர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 41 வருட பூர்த்தியினை முன்னிட்டு சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிங்ஸ் இலவன் விளையாட்டுக் கழகத்திற்கு எதிரான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகம் 18 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய கிங்ஸ் இலவன் விளையாட்டு கழகம் 18 ஓவர்களில் 7 விக்கட்டுக்களை இழந்து 114 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.



இப்போட்டியில் சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகம் சார்பில் சர்ஜூன் 4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களையும் , முஹம்மது ஜலீல் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

கிங்ஸ் இலவன் விளையாட்டு கழகத்தின் சார்பில் நயீம் 4 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களை கொடுத்து3 விக்கட்டுக்களை கைப்பற்றி இருந்தார். இப்போட்டியில் ஆட்ட நாயகனாக சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் அணியை சேர்ந்த முஹம்மட் நிஜாத் தெரிவு செய்யப்பட்டார்.

## பெண்கள் கிரிக்கெட் தரவரிசை: தென்ஆபிரிக்க வீராங்கனை லிசல் லீ முதலிடம்



பெண்கள் ஒரு நாள் கிரிக்கெட் பேட்டிங்கில் வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

இதில் இந்திய தொடரில் கலக்கிய தென்ஆபிரிக்க தொடக்க ஆட்டக்காரர் லிசல் லீ 7 இடங்கள் முன்னேறி மொத்தம் 773 புள்ளிகளுடன் முதலிடத்தை பிடித்துள்ளார். இந்திய தொடரில் அவர் 4 ஆட்டங்களில் அடி ஒரு சதம், 2 அரைசதம் உட்பட 288 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். தென்ஆபிரிக்க வீராங்கனைகளில் முதனிலை அரியணையை அலங்கரித்த ஒரே வீராங்கனை இவர் தான். ஏற்கனவே 2018ம் ஆண்டு ஜூன் மாதமும் முதலிடத்தில் இருந்திருக்கிறார். இதுவரை முதலிடத்தில் இருந்த இங்கிலாந்தின் டாமி பீமாண்ட் (765 புள்ளி) 2வது இடத்துக்கு இறங்கியுள்ளார்.

இதே தொடரில் ஒரு சதம், 2 அரை சதம் உட்பட 253 ஓட்டங்கள் எடுத்துள்ள இந்தியாவின் பூனம் ரவுத் 8 இடங்கள் உயர்ந்து 18வது இடத்துக்கு வந்துள்ளார். மற்ற இந்திய வீராங்கனைகள் ஸ்மிர்தி மந்தனா 7வது இடத்திலும், தலைவி மிதாலிராஜ் 9வது இடத்திலும், ஹர்மன்பிரீத் கவுர் 15வது இடத்திலும் உள்ளனர். இந்தியா - தென்ஆபிரிக்கா இடையிலான 5வது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி லக்னோவில் நேற்று நடந்தது.

## இலங்கை அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றி 25 ஆண்டுகள் பூர்த்தி



இலங்கை கிரிக்கெட் அணியானது ஒருநாள் சர்வதேச உலகக் கிண்ணத்தை கைப்பற்றி நேற்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

1996 மார்ச் 17 என்பது உலகெங்கிலும் உள்ள கிரிக்கெட் இரசிகர்களின் மனதில் ஒரு மறக்க முடியாத நினைவினை ஏற்படுத்திய நாள் ஆகும்.

ஏன் உலக வரைபடத்தில் கண்ணுக்குத் தெரியாத ஒரு குட்டி தீவாக இருக்கும் இலங்கை நாட்டை ஏனைய நாடுகளில் இருப்பவர்கள் இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள வழிவகுத்த நாள் இதுவென்று கூறினாலும் அது மிகையாகாது.

1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்துக்கு முன்னர், அதற்கு முன்னதாக அரங்கேறிய ஐந்து ஒருநாள் உலகக் கிண்ணத் தொடர்களிலும் இலங்கை நான்கு வெற்றிகளை பதிவுசெய்திருந்தது.

எனினும் 1996ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் அர்ஜுன ரணதுங்க தலைமையில் இலங்கை கிரிக்கெட் அணி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலியாவை தோற்கடித்தது இலங்கை லயன்ஸ். இந்த பருவத்தில் போட்டி முழுவதும் ஆதிக்கத்தை வெளிப்படுத்தி காலிறுதியில் இங்கிலாந்தையும், அரையிறுதியில் இந்தியாவையும் வீழ்த்தி இறுப் போட்டிக்குள் நுழைந்தது.

பாகிஸ்தானின் லாகூரில் நடந்த இறுதிப் போட்டியில் இலங்கை பந்து வீச்சாளர்கள் அவுஸ்ரேலிய அணியை 50 ஓவர்களில் 241/7 ஆக கட்டுப்படுத்தி ஒரு அற்புதமான பணியை முன்னெடுத்தனர்.

பந்து வீச்சில் ஒன்பது ஓவர்களில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார் அரவிந்த டி சில்வா. அது மாத்திரமன்றி துடுப்பாட்டத்திலும் தனது ஆதிக்கத்தை அவர் நிலை நிறுத்தினார்.

242 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை வெறும் 23 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்தது.

பின்னர் ஜோடி சேர்ந்த அரவிந்த டிசில்வா – அசங்க குருஷின்ஹவின் இணைப்பாட்டம் 101 ஓட்டங்களை அணிக்காக பெற்று கொடுத்தது.

பின்னர் அணித் தலைவர் அர்ஜுன ரணதுங்க 37 பந்துகளில் 47 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை முடித்து வைத்தார்.

அதன்படி இலங்கை அணி 46.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 245 ஓட்டங்களை பெற்றது.

போட்டியின் ஆட்டநாயகனாக மூன்று விக்கெட்டுகளையும், 107 ஓட்டங்களையும் குவித்த அரவிந்த டி சில்வா தெரிவானார்.

1996 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் களமிறங்கிய இலங்கை அணி

சனத் ஜெயசூரிய, ருமேஸ் களுவிதாரன (விக்கெட் காப்பாளர்), அசங்க குருசின்ஹ, அரவிந்த டிசில்வா, அர்ஜுன ரணதுங்க, ஹசான் திலகரத்ன, ரோஷான் மகாநாம, குமார் தர்மசேன, சமிந்த வாஸ், பிரமோதய விக்ரமசிங்க மற்றும் முத்தையா முரளிதரன்.



பொத்துவில் றபா விளையாட்டுக்கழகத்தின் 2021ஆம் ஆண்டுக்கான, புதிய சீருடையினை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு அண்மையில் (14) பெக் லங்கா கல்விக்கூட மண்டபத்தில் இடம்பெற்றது. கழகத்தின் விளையாட்டுக்குழு தலைவர் ஏ.எல்.றமீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் றபா விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் ஏ.எல்.எம்.ஜெம்சீத், மற்றும் உபதலைவர் சட்டத்தரணி ஏ.எம்.சாதிர் ஆகியோர் சீருடையினை அறிமுகம் செய்து வைப்பதனைப் படத்தில் காணலாம். படங்கள்:பாலமுனை விசேட நிருபர்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மார்ச் மாதம் 18ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.